# மாணவர் குரல்

# 1977

CANAGARATNAM M.M.VIDYALAYA
JAFFNA
கற்றாங் கொழுகுக

# MANAVAR KURAL

உயர்தர மாணவர் மன்றம்


**கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்**

யாழ்ப்பாணம்.

373
CAN
(R)

373 R
CAN

## எங்கள் அதிபர்



ஜே. எஸ். அரியரட்ணம்
*B. Sc., Dip.-in-Ed. (Ceylon)*

# எமது அதிபரின் ஆசிச் செய்தி

ஈராண்டு இடைவெளியின் பின் 'மாணவர் குரல்' காட்சியளிக்கின்றது. காகிதாதிகள் விலையேற்றம், அச்சுச் சேர்த்தல் செலவின அதிகரிப்பு என்பன இன்றுள்ள நிலையில், இத்தகைய மலர் ஒன்றினை ஆண்டுதோறும் வெளியிடுதல் கடினமாகின்றது இந்நிலையைச் சமாளிக்கக் கூடிய நிதி வசதிகள் எம்மிடை இல்லை எனினும், நடப்புவருடச் செயற்குழுவின் அயரா முயற்சியும், உயர்தர மாணவர் மன்றத்தின் ஒருமித்த ஒத்துழைப்பும், ஆசிரிய ஆலோசகர்களின் ஊக்குவிப்பும் இம் மலர் வெளியீட்டில் வெற்றிகண்டுள்ளன.

தாய் மொழிப் போதனை கல்லூரிகளில் முக்கியத்துவம் அடைந்துள்ள இன்று, மாணவர் மத்தியில் இலக்கியப் படைப்பாற்றல் விருத்தியடைவதற்கு வேண்டிய சகல வசதிகளும் கல்லூரிகளில் இடம் பெறுதல் இன்றியமையாததாகின்றது. நாளைய பிரஜைகளாகிய இன்றைய இளஞ் சந்ததியினர் தமது எண்ணக் கருத்துக்களைத் தடையின்றி வெளிப்படுத்தும் சுதந்திரம் அனைத்து நாடுகளிலும் பேணப்படல் அவசியமாகின்றது. இத்தகைய வரவேற்கத்தக்க சூழ்நிலை ஒன்று, எமது கலாசாலை உயர்தரமாணவர்களுக்கு வாய்த்திருப்பது, இம்மலர் அவர்தம் சொந்த முயற்சியில் வெளிவருவதற்கு வழிகாட்டியது. வரும் காலத்தும் இந்நிலை நீடித்து, எதிர்வரும் சந்ததியினரும் இத்துறையில் முன்னேறுவார்களாக.

**J. S. Ariaratnam**

ஜே / கனகரெத்தினம் ம. ம. வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.
28-11-77

REFERENCE

## நிர்வாகக் குழு

போஷகர் : அதிபர் உயர்திரு J. S. அரியரட்ணம், B. Sc. Dip. in Ed. (Cey

உப-போஷகர்கள் : திரு செல்லத்துரை, ஆசிரியர்
திருமதி S. பாலசுப்பிரமணியம், ஆசிரியை
செல்வி தேவகி தில்லையம்பலம், ஆசிரியை

| | | |
|---|---|---|
| தலைவர் : | செல்வன் | K. பரிமளராஜா |
| உப-தலைவர் : | ,, | நந்தகுமார் |
| செயலாளர் : | செல்வி | S. குணவதி |
| உப-செயலாளர் : | ,, | சுசீலா |
| பொருளாளர் : | ,, | A. ஈஸ்வரி |
| உப-பொருளாளர் : | ,, | S. நிர்மலாதேவி |
| பத்திராதிபர்கள் : | செல்வன் | S. கோபிநாத் |
| | செல்வி | மீனலோஜனி |

மலர் வெளியீட்டு ஆசிரியர் : திரு செல்லத்துரை ஆசிரியர்

**விசேட மலர் வெளியீட்டுக் குழுவும்**
**நிர்வாக உறுப்பினர்களும்**

செல்வன் N. சுதர்சன்
,, P. தர்மகுலசிங்கம்
,, S. ஜெயகுமார்
,, T. கஜேந்திரன்
,, S ரகுபதி

# உப அதிபரின் ஆசிச் செய்தி

உயர்தர மாணவ மன்றத்தினரின் பேரேடாக மிளிரும் 'மாணவர் குரல்' என்ற பைந்தமிழ்ப்படைப்பிற்கு வாழ்த்துரை அளிப்பதில் அக மகிழ்வு கொள்கிறேன். இவ்வேட்டில், எழுச்சிபெறும் இளம் சந்ததியினர் தமது உள்ளக் கிடைக்கைகளையும் மறைந்திருக்கும் ஆக்க பூர்வ ஆற்றல்களையும் வெளிக்காட்டுவதற்கு வழி காட்டப்பட்டிருக்கிறது. அவர்களது தனித்துவ உணர்வுகள் மதிப்படையவும், இத்தகைய இலக்கிய வாசனை கொண்ட ஏடுகள் பலனளிக்குமென்ற பூரண நம்பிக்கையோடு மேலும் மேலும் அவர்களை இத்தகைய முயற்சிகளில் ஈடுபாடு கொள்ளும்படி வேண்டிக்கொண்டு இவ்விதழ் சிறக்க வாழ்த்துகிறேன்.

த. செல்லப்பா

# கல்வி அதிபரின் வாழ்த்துச் செய்தி

யாழ்/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய உயர்தர மாண வர் மன்ற வெளியீடாகிய ''மாணவர் குரலுக்கு'' இந்த ஆசிச் செய் தியை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற கல்லூரிகளில் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமும் ஒன்றாகும். அங்கு பயின்ற மாணவர்க ளிற் பலர் நல இலங்கையின் சிற்பிகளாகத் திகழ்வதை நானறிவேன். அந்த முன்னோடிகளின் பாதையிலேயே நீங்களும் செல்ல வேண்டுமென விழைகின்றேன். இப்படியான மன்றங்கள் மாணவர்களின் சிந்தனை யைத் தூண்டிச் செயற்பட வைப்பதோடு அவர்களிடையே ஓர் ஒரு மைப்பாட்டையும் வளர்க்கும். இந்த ஒருமைப்பாட்டின் வெளிப்பாடா கவே இம்மலர் வெளிவருகிறதென நம்புகிறேன்.

இத்தகைய வெளியீடுகள் மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்கு விப்பதோடு அவர்களிடையே மறைந்துள்ள திறமைகளையும் வெளிக் கொணரும். இவ்வித முயற்சிகள் மென்மேலும் தொடர்வதாகுக. மல ரின் வெற்றிக்கு என் நல்லாசிகள்.

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
1977-11-29

தி. மாணிக்கவாசகர்
வடபாநில கல்வி அதிபதி

# மன்றத் தலைவரின் தகவுரை

எமது கல்லூரியின் உயர்தர மாணவர் மன்றத்தின் வெளியீடாகிய இம் மலர் இவ்வருடம் பல கஷ்டமான சூழ் நிலைகளுக்கு மத்தியிலும் மலர்வதையிட்டுப் பெருமகிழ்வடைகிறேன். சென்ற இரண்டுவருடங்களாக இம்மலரின் வெளியீடு தடைப்பட்டதைத் தொடர்ந்து இவ்வருடம் சிறப்புடன் இம்மலரை வெளியிடவேண்டுமென்று எமது மாணவர் மன்ற போசகர்களாக இருந்து வரும் கல்லூரி அதிபரினதும், ஆசிரியர்களினதும் வெகு விருப்பின் காரணமாகவும் மாணவர்களாகிய நாம் எடுத்துக்கொண்ட விடாமுயற்சியாலும் இம்மலர் மலர்ந்துள்ளது.

இம்மலர் சிறப்புடன் நறுமணங்கமழ சிறந்த பல அறிவுவளர்ச்சிக் கட்டுரைகளையும், கவிதைகளையும், சிறுகதைகளையும் மாணவராகிய எமக்கு பயன்படும் வகையில் எமக்களித்த பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும், பட்டதாரி ஆசிரியர்களிக்கும், மன்றத்தின் மாணவர்களுக்கும் எமது மன்றத்தின் பாராட்டுகளைத் தெரிவிக்கின்றோம்.

எமது மன்றம் இவ்வாறு பல சிறந்த வழிகளில் செல்வதற்கு கலங்கரைவிளக்கம்போன்று வழிகாட்டிவரும் கல்லூரியின் அதிபரினதும், ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் விடாமுயற்சியே காரணமாகும்.

தொடர்ந்தும் இம்மலர் பல வருடங்களாக மலர்ந்து மாணவர்கள் மத்தியில் நறுமணம் பரப்பவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

வளர்க மன்றத்தின் பணி!

கி. பரிமளராஜா
உயர்தரமாணவர் மன்றதலைவர்

# பத்திராதிபர்கள் பகர்கின்றனர்

கல்லூரியின் மாணவர்களின் ஆற்றலை வெளிப்படுத்துவதே கல்லூரிகளில் வெளியிடப்படும் மலர்களின் நோக்கமாகும். இப்பணியில் எமது மன்றத்தினரால் வெளியிடப்படும் 'மாணவர் குரல்' கடந்த இரண்டாண்டு காலமாக தடைப்பட்டிருந்தமை கண்டு மனம் வெதும்பி இம்முறையாவது மாணவர்களின் குரல் ஒலிக்க எமக்கு பலர் பல வகையில் ஊக்கமளித்தார்கள்.

இவ்வரிசையில் முதலாவதாக எமது மன்றத்தின் பொறுப்பாசிரியர்களிக்கும் அதிபருக்கும் நாம் மிகவும் கட்டுப்பாடுடையோம். தமது மறைந்து கிடக்கும் ஆற்றலை எமது சஞ்சிகை வடித்துத்தந்த எதிர்கால கவிகளும் கதாசிரியர்களும் ஆன எமது மாணவர்களும் இதில் சேர்த்துக் கொள்ளப்படுகிறுர்கள். எமது நிதி வசதியை உத்தேசித்து எமக்கு விளம்பரங்கள் தந்துதவிய வியாபாரப் பெருமக்களுக்கும் மலரை குறுகிய காலத்தில் மிகவும் சிறப்பாக அச்சேற்றித்தந்ததற்காக யாழ் கூட்டுறவு அச்சக முகாமையாளருக்கும், ஊழியர்களுக்கும், மற்றும் பல வழிகளில் உதவி செய்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கிறேம். இப்பணி தொடர்ந்து வரும் காலங்களிலும் சிறப்பாக நடைபெற எமது இளம் சந்ததியினரை வாழ்த்தி விடைபெறுகிறேம்.

S. கோபிநாத்
த. மீனலோஜனி
இணைப்பத்திராதிபர்கள்

மன்றக் காப்பாளர்களின்

# ஆசி உரை

வளரும் சமுதாயத்தேவைகள் நிறைவெய்தக்கூடிய சூழ்நிலை தோற்றுவிக்கப்படுதலே கல்வியின் இலக்கு. இளம் உள்ளங்களின் சிந்தனைத் திறன், பகுத்துணர்வு, தன்னம்பிக்கை, ஆக்கற்றொழிற்பாடு ஆய பண்புகள் விருத்தியடைந்தாலன்றி இவ்விலக்கினை அடைதல் சாலாது. கலைக் கூடங்கள் இவ்விலக்கினை அடைதற்கேற்ற நிலையில் விளங்கல் அத்தியாவசியமாகின்றது. இந்நிலை, திருப்திகரமாக இக்கல்லூரியில் இருந்து வரல் மகிழற்பாலது.

உயர்தர மாணவர் மன்றத்தின் ஒன்றித்த முயற்சியின் பயனாய், 'மாணவர் குரல்' இன்று வெளிவரல் பாராட்டுக்குரியது; பெருமைப் படத்தக்கது. மலர் வெளியீட்டிற்காய நிதியினைத் திரட்டல், சிறந்த கட்டுரைகளை தேடல், வெளியீட்டு முயற்சிக்கண் ஆங்காங்குத் தோற்றும் முட்டுக்களைக் களைதல்போன்ற இன்னல்கள் நடுவே, 'மாணவர் குரலை' உருவாக்கிய மன்றச் செயற்குழுவினருக்கு எமது உளமார்ந்த நன்றிகள்; பொருத்தமுற அவர்களைத் தேர்விட்ட மன்ற உறுப்பினர் கட்கு எமது பாராட்டுகள். 'மாணவர் குரல்' எதிர்காலத்தும் மென் மேலும் பூப்பொலிவுடன் வெளிவர எமது நல்லாசிகள்.

திரு. ச. செல்வத்துரை
திருமதி. S. பாலசுப்பிரமணியம்
செல்வி. தேவகி தில்லையம்பலம்

வட இலங்கையில் புகழ் பெற்ற புகைப்பட நிலையம்

# பாரத் ஸ்ருடியோ

82/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 252

# Bharat Studio

FOR
**Quality Photograph**
AND
**Personal Attention**

82/1, KASTURIAR ROAD,
JAFFNA.

T'Phone: 252

# சனத் தொகையும் பொருளாதார வளர்ச்சியும்

**N. Krishnananthan,** B. A. (Hons.), B. Phil. (Hon.)

இன்று உலக ரீதியாகவே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கருத்தாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக் குறைவிற்கு அந்த நாடுகளின் மிகையான சனத்தொகையேயாகும் என்பது விளங்குகின்றது. இதனைக் குறிப்பதற்காகவே இன்றைய முதலாளித்துவ நாடுகளிலுள்ள பத்திரிகைகள் ''சனத்தொகை வெடிப்பு'' சனத்தொகை வீக்கம்'' போன்ற சொற்களைக்கொண்டு விளங்குகின்றன. சிறப்பாக மால்தஸின் ஆதரவாளர்கள் அல்லது நவீன மால்தூஸிய வாதிகள் என அழைக்கப்படுபவர்கள் இதனைக் கையாளுகின்றனர். இதற்கும் மேலாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் 1974-ம் ஆண்டை உலக சனத்தொகை ஆண்டாகப் பிரகடனப்படுத்தியிருப்பதிலிருந்தே இதன் முக்கியத்துவத்தை நாம் உணர முடிகின்றது. இது தனியே சனத்தொகைப் பிரச்சினையின் தீவிரத்தன்மையை மட்டும் புலப்படுத்தவில்லை, நவீன உலகின் அபிவிருத்தியுடன் நெருங்கிய தொடர்புடையதென்பதனையும் புலப்படுத்துகின்றது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் சனத்தொகை பற்றிய பிரச்சினையில் அதிக அக்கறைகாட்டுபவர்கள் முதலாளித்துவ முகாம்களைச் சார்ந்தவர்களும், அவர்களது பல்தேசியக் கம்பனிகளுமேயாகும் இவை பெருந்தொகையான டொலர் பணத்தை இந்த நாடுகளில் சனத்தொகையைக் கட்டுப்படுத்தவும், அதற்கான திட்டங்களை வகுக்கவும் எனக் கொட்டிக் குவிக்கின்றன. இதற்கான காரணம் என்னவெனில் அது கடந்த பல நூற்றாண்டுகளாக மூன்றாம் உலக நாடுகளை குடியேற்றவாதிக்கத்தினாலும் பல்தேசியக் கம்பனிகளினால் இடப்பட்ட முதலீடுகளினாலும் சுரண்டப்பட்டதை மறைப்பதற்காகவே என்பது சந்தேகமின்றிப் புலப்படும் ஓர் விடயமாகும். இதனால்தான் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் காணப்படும். பட்டினி, வறுமை, வேலையின்மை அபிவிருத்தித் தேக்கம் என்பவற்றுக்கெல்லாம் மிகையான சனத்தொகை காணப்படுவதே காரணம் என இவர்கள் கூறுவதற்கு காரணமாக உள்ளது. இக் கூற்றானது பின்வருமாறு கூறுவதையொத்ததாகவே யிருக்கும். புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மருந்துச்சாலைக்குத் தொர்ச்சியாக வந்து சேரும் நோயாளிகள் கவலையுடன் ''வைத்தியரே நோய்க்குக் காரணமாகும்'' என்று கூறுவதையொத்ததாகும்.

தற்போதய உலக சனத்தொகையின் நிலைமை என்பதனை நோக்குவதானால் ஐ. நா. ஸ்தாபனம் வெளியிட்ட புள்ளி விபரங்களை நோக்கவேண்டும். தற்போது ஆண்டு தோறும் 127 மில்லியன் பிள்ளைகள் பிறக்கின்றார்கள், 95 மில்லியன் பிள்ளைகள் பாடசாலை செல்லும் வயதினை அடைகின்றார்கள், 19 மில்லியன் மக்கள் 65 வது வயதையடைகின்றார்கள் என்பதை வெளியிட்டுள்ளது. மேலும் சனத்தொகையளவானது 1900-ம் ஆண்டில் 1,500 மில்லியன் எனவும், 1960-ல் 3,000 மில்லியன் எனவும் 1970-ல் 3,600 மில்லியன் எனவும், 2000-ம் ஆண்டில் 6,500 மில்லியனாகிவிடும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. இதன்படி கடந்த 20 ஆண்டுகளாக உலக சனத்தொகை 1000 மில்லியனால் வளர்ச்சியடைந்து வருகின்றது என்பதையும் இன்னும் 10 ஆண்டுகளுக்கு இதே வளர்ச்சி காணப்படும் என்பதனையும் புலப்படுத்தியுள்ளது.

இன்றைய உலக சனத்தொகையின் அபிவிருத்திப் போக்கின் முக்கிய தன்மை என்னவெனில் வளர்ச்சியடைந்த கைத்தொழில்மயமான முதலாளித்துவ நாடுக ளினதும், சமூக உடைமை நாடுகளினதும் சனத்தொகை வளர்ச்சி வீதத்துடன் மூன் றும் உலகின் சனத்தொகை வளர்ச்சி வீதத்தை ஒப்புநோக்குகையில் மூன்றும் உலகின் சனத்தொகை வளர்ச்சி வீதம் உயர்வாக இருப்பதேயாகும். உலக சனத் தொகையானது ஆண்டிற்கு 1·9% தால் வளர்ச்சியடைகின்றது. ஆனால், லத்தீன் அமெரிக்காவில் இது 2·9%மாகவும், ஆபிரிக்காவில் 2·5%மாகவும், ஆசியாவில் 2·1%மாகவும் உள்ளது. இவ்வாறு வளர்ச்சியடைந்தால் உலக சனத்தொகையில் 80 சத வீதத்தை 2000 ஆண்டில் ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்க நாடுகள் கொண்டிருக்கும் என ஐ. நா. முற்கணிப்புச் செய்துள்ளது.

இவ்வாறு சனத்தொகை வளர்ச்சியானது எல்லா நாடுகளினதும் அபிவிருத்தித் திட்டங்களில் மட்டுமன்றி சர்வதேச ரீதியான திட்டமிடலிலும் முக்கியமான பிரச் சினையாக உள்ளது. இதனாலேயே மசாச்சுசெற் தொழில்நுட்ப நிறுவனம் 'வளர்ச் சியை மட்டுப்படுத்துதல்' என்ற கருத்தினை முன்வைத்துள்ளது. தற்போதைய விதத்தில் சனத்தொகை வளர்ச்சியடைந்து செல்லுமானால் வளர்ச்சியடையும் கைத்தொழிலாக்கத்தினாலும், உணவு உற்பத்திப் பெருக்கத்தினாலும் சூழ்நிலை சுத்தமடைதலும் வளங்களின் அழிவும் ஏற்படும் என்று இவர்கள் கருதுகின்றனர். எனவே இதிலிருந்து விடுபட்டுக் கொள்ள வேண்டுமானால் வளர்ச்சியை நாமே மட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். இக்கொள்கை விளக்கமானது தொடர்ந்தும் அபிவிருத்தியடைந்த நாடுகள் அபிவிருத்தியடைந்த நிலையிலும் அபிவிருத்திய டைந்துவரும் நாடுகள் அதே நிலையில் காணப்படுவதனை வற்புறுத்துவதாகவே அமைகின்றது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் இன்றைய சனத்தொகை வளர்ச்சி வீதம் 2% முதல் 3% வரையுள்ளது. அபிவிருத்தியடைந்த நாடுகளில் 1·5%க்கும் 1%க்குமிடையிலுள்ளது. ஆனால் அபிவிருந்தியடைந்த நாடுகளில் குறிக்கப்பட்ட ஒரு காலகட்டத்தில் மிக உயர்வாகவே இருந்தது. உதாரணமாக பிரித்தானியா விலும், ஐக்கிய அமெரிக்காவிலும், யப்பானிலும் 3% முதல் 4% இடையில் காணப் பட்டதென்பதை மறுப்பதற்கில்லை மேலும் 1950-க்கும் 1957-க்குமிடையில் உலக சனத்தொகையிலும் ஆசியாவினதும் ஆபிரிக்காவினதும் பங்கு வீழ்ச்சியடைந்துள் ளது. ஏறக்குறைய 15% தினால் இவ்வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மூன்று நூற்றுண்டுக ளுக்கு மேலாக ஆபிரிக்காவின் சனத்தொகை $2\frac{1}{4}$ மடங்காகவும், ஆசியாவினது சனத்தொகை $4\frac{1}{2}$ மடங்காகவும், ஐரோப்பாவினது 6 மடங்காகவும் ஐக்கிய அமெ ரிக்காவினது 189 மடங்காகவும் காணப்பட்டது. இதேபோல் சனந்தொகை யடர்த்தினய நோக்கினுலுல் அபிவிருத்தியடைந்த நாடுகளில் அதிகமே உதாரண மாக இந்தியாவில் ஒரு சதுர கிலோமீற்றருக்கு 164 பேராகவும், பாகுஸ்தானில் 67 பேராகவும், பிரித்தானியாவில் 324 பேராகவும், யப்பானில் 317 பேராகவும் உள்ளது. இப்புள்ளி விபரங்கள் எல்லாம் அபிவிருத்தியடைந்த நாடுகளின் கடந்த காலநிலைமைகளைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. இத்தகைய நிலைமைகள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் தற்போது காணப்படுவது பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் என்ற கருத்து எவ்வளவு தூரத்திற்கு ஏற்கத் தக்கவை என்பது முக்கியமானதாகும்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் காணப்படும் நிலத்திற்கும் மனிதனுக்கு மிடையிலான விகிதம்கூட சார்பானதாகவே காணப்படுகின்றது. மேலும் அபிவிருத்தி

யடைந்து வரும் நாடுகளிலுள்ள நிலம், நீர் என்பவற்றுடன் அங்குள்ள மூலவளங்களும் (கனிப்பொருள்களும் உலோகங்களும்) கைத்தொழில் துரித வளர்ச்சிக்குப் போதுமானவையாகும். மூலவளங்கள் என்பவை நிலையான இருப்புக்களைக் கொண்டவையல்ல விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ப அவையும் வளர்ச்சியடையக் கூடியவையேயாகும்.

அடுத்த முக்கிய விடயமாக 'மேலதிக ஊழியம்' என்ற கருத்து விளக்கப்படுகின்றது. ஆனல் கிராமப்புறங்களில் அறுவடைக்காலங்களிலும், விதைப்புக்காலங்களிலும், பயிர் நடுகைக்காலங்களிலும் எத்தகைய தீவிர தொழிலாளர் பற்றுக்குறை நிலவுகின்றதென்பதை அறிந்து கொள்ளலாம். மேலும் கிராமிய விவசாயத்துறையில் பிள்ளைகள் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதற்கு தொழிலாளர் பற்றுக்குறை என்பதுடன் குடும்பத்தின் வருமானத்தை உச்சப்படுத்திக்கொள்ள இவர்கள் தொழிலில் ஈடுபடுகின்றனர் என்பதும் முக்கியமானதாக உள்ளது.

விவசாயத்துறையில் உற்பத்தியதிகரிப்பு கூட்டல் விருத்தித் தொடரிலேயே பெருகிச்செல்லும் என்ற மால்தஸின்விதி குறைந்துசெல்லும் விளைவு விதியை ஏற்றுக்கொண்டு விளக்கப்பட்டதாகும். ஆனல் நவீனவிஞ்ஞான தொழில்நுட்ப மாற்றங்கள் இவ்விதியினை பொய்ப்பித்துள்ளன. மேலும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கடந்த 20 ஆண்டுகளில் உணவு உற்பத்தி வளர்ச்சி வீதம் 2·8%மாக இருக்க சனத்தொகை வளர்ச்சிவீதம் 2·6%மாகவே இருந்துள்ளது ஆனல் இவ்வளர்ச்சி வீதம் திருப்திகரமானதொன்ருக இல்லாவிட்டாலும் மேற்கூறிய விதி பொய்யானது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. இதே நேரத்தில் வளர்முக நாடுகளிலே 375 மில்லியன் மக்கள் பட்டினியால் வாடுகின்றனர் என்ற ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் புள்ளிவிபரங்கள் புலப்படுத்துகின்றன. இதற்கு நியாயமற்ற உலக உணவுப் பங்கீடு காணப்படுவதே காரணமாகும். சனத்தொகை வளர்ச்சிவீதம் உயர்வாக இருப்பது மட்டுமேயல்ல என்பது புலனுகும்.

மேலே விளக்கியவற்றிலிருந்து சனத்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவது தவருனது என்ற கருத்தினை ஏற்படுத்திக்கொள்ளக்கூடாது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலே காணப்படும் சகல பொருளியல் பிரச்சினைகளுக்கும் மிகையான சனத்தொகையே காரணமாகும் என மிகைப்படுத்திக் கூறப்படும் கருத்தும், சனத்தொகை வளர்ச்சி வீதத்தைக் கட்டுப்படுத்துவதே இதற்கான வழி எனக்கூறப்படும் மிகைப்படுத்தப்பட்ட கூற்றே தவருனதாகும். இதனையே இந்தியப் பிரதமராக இருந்த நேரு ஆட்சியிலிருப்பவர்களின் மிகையான சனத்தொகைபற்றிய கொள்கை பற்றிய தனது கருத்தை 1948ல் நடைபெற்ற ஆசியாவினதும் தூரகிழக்கு நாடுகளினதும் பொருளாதார ஆணைக்குழுவின் ஆரம்ப கூட்டத்தில் பின்வருமாறு குறிப்பிட்டார். "நான் சனத்தொகைக் கட்டுப்பாட்டிற்கு ஆதரவான கருத்தினைக் கொண்டவன் ஆனல் சனத்தொகைக் கட்டுப்பாட்டில் ஆகக்கூடிய அழுத்தம் கொடுப்பது தவருன கருத்தாகும். இந்தியாவின் சனத்தொகை மிகையானது என்பதற்கு காரணம் அதன் உற்பத்தியின் இயலளவு குறைவாக இருப்பதே காரணம் எனக் குறிப்பிட்டால் நாம் எமது விவசாய உற்பத்தியையும் ஏனைய உற்பத்திகளையும் அதிகரித்துக்கொள்ளுவதற்கு இவர்களை வேலையில் ஈடுபடுத்தினுல் நாம் மிகையான சனத்தொகையைக் கொண்டவர்களாக மாட்டோம்".

எனவே வறுமை, வேலையின்மை, பட்டினி என்பவற்றை நீக்கவேண்டுமானுல் இந்த மூலவளங்களைப் பயன்படுத்தும் சமூக பொருளாதார அமைப்பினை மாற்றி

அமைப்பதன்மூலமேயே சாத்தியமாக்கிக் கொள்ளலாம். இதனையே வேறு வார்த்தைகளில் கூறுவதானால் பொருளாதார அபிவிருத்தியினூடாக அதாவது துரிதமான கைத்தொழில் மயமாக்கலினூடாகவும், மக்களின் வாழ்க்கைத்தரத்தை அதிகரிக்கச் செய்வதனூடாகவும் உயர்ந்த கல்வியறிவினையும், கலாச்சாரத்தரங்களையும் அடைந்து கொள்ளுவதுடன் பெண்களின் விடுதலையினூடாகவுமே யடைந்து கொள்ளலாம். இதனையே ஒவ்வோர் அபிவிருத்தியடைந்துவநம் நாடுகளிலும் அரசுகள் அவற்றின் பொருளாதார, விஞ்ஞான தொழில்நுட்ப கலாச்சார அபிவிருத்திகளுக்கு வழங்குகின்ற ஒவ்வோர் தூண்டுதல்களுந் படிப்படியான உயர்ந்த பிறப்புவீதம் குறைந்து வருதலைப் புலப்படுத்துகின்றது. எனவே பொருளாதார அபிவிருத்தியினை யடைவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதன்மூலம் சனத்தொகை வளர்ச்சி வீதத்தினைக் கட்டுப்படுத்நலாம். சனத்தொகை வளர்ச்சிவீநத்தினைக் கட்டுப்படுத்துவதன்மூலம்மட்டுமே பொருளாதார வளர்ச்சியினையடைந்துகொள்ள முடியாது.


*With best Compliments*

*from*

# DR. MISS. R. MUTHULINGAM

*DISPENSARY & SURGERY,*

**646, Point Pedro Road,**

**JAFFNA.**

சின்னஞ்சிறு கதை

# நினைவலைகள் தொடர்ந்து வந்தால்...?

அந்த இனிய நாட்களை எவ்வாறு மறக்க முடியும்? நான் இளமையில் டெல்கியில் படித்தபோது எடுத்து வைத்திருந்த புகைப்படங்களைப் பார்த்து, அவ்விடங்களை நீயும் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டபோது உன்னை அங்கு அழைத்துச் சென்றேனே. ஊட்டியின் கொடிய குளிரையும் பொருட்படுத்தாது, 'யூகலிப்டஸ்' மரங்களினூடே கைகோர்த்தவண்ணம் ஓடிவிளையாடினோமே. சாந்தி உன்னை மறக்கட்டுமாம், என்னைச்சுற்றியுள்ளவர்கள் சொல்கின்றார்கள். அது எப்படி முடியும் சாந்தி? எப்படி முடியும்? இவ்வளவு செல்வத்தைக் கோடி கோடியாகச் சம்பாதித்தேனே சாந்தி? இதெல்லாம் யாருக்காக? இந்தப் பங்களாவையே உன் விருப்பப்படிதானே கட்டினேன். இங்குள்ள எந்தவொரு சிறுபொருளும் உன்னைத்தானே திரும்பத் திரும்ப நினைவூட்டுகிறது சாந்தி.

பங்களாவை விட்டு வெளியே வந்தால், உனது மேற்பார்வையின்கீழ் நடப்பட்ட ரோஜாச்செடிகள் அசையும்போதெல்லாம், அவை எங்கே எங்கள் சாந்தி என்றழைப்பதைப் போலல்லவா இருக்கின்றன. அவற்றை எவ்வளவு ஆசையோடு, ஆர்வத்தோடு பராமரிச்சாய் சாந்தி இவற்றையெல்லாம் மறந்து சென்றுவிட்டாயே. தோட்டத்திற்கு நடுவே அமைந்திருக்கும் செயற்கைத் தடாகத்திலுள்ள பொன் மீன்களெல்லாம், எனது காலடியோசையைக் கேட்டவுடன் எங்கே, எங்கள் சாந்தி வந்துவிட்டாள் என்றெண்ணியல்லவா மேற்பரப்பிற்கு வந்து எட்டிப்பார்க்கின்றன. உன் கரிய கூந்தல் காற்றினில் வளைந்தாட, அவற்றிற்கு உணவூட்டுவாயே சாந்தி உன் வளைக்கரங்களை அவை எப்படி இனிக் காணப்போகின்றன? உன் சினேகிதியின் கணவன் அவளுக்கு வாங்கிக்கொடுத்த அழகுசாதனங்களைக்காட்டிலும் சிறந்தவைகளை உனக்கு நான் வாங்கித்தரவில்லையா? நான் காரை வெளியே எடுத்துச்சென்றுவிட்டால், நீ போகக் காரில்லையே என்று அடம் பிடித்தபோது உனக்கென்றொரு புதிய கார் வாங்கித்தரவில்லையா சாந்தி? உன்னை மறப்பதற்கு உன் நினைவுகளைத் தடுப்பதற்கு, சிறிது குடித்தால் அதையுமல்லவா இவர்கள் தடுக்கின்றார்கள்.

கதவு திறக்கப்படும் சப்தத்தால் எனது சிந்தனை தடைப்படுகிறது. அதைத் தொடர்ந்து ''என்ன? சாந்தியின் படத்தைப் பார்த்துக்கொண்டே மூன்று போத்தல்களைக் காலிபண்ணி விட்டீர்களே. எங்களுக்கும் கவலை இல்லையா? என்றாலும், மற்றப்பிள்ளைகளையும் நீங்கள்தானே பார்க்க வேண்டும் வாருங்கள் சாப்பிடுவோம். குழந்தைகள் காத்துக்கொண்டிருக்கின்றார்கள்'' என்றவாறே எனது மனைவி என்னைக் கைத்தாங்கலாகச் சாப்பாட்டு அறையை நோக்கி அழைத்துச் சென்றாள். எனது மூத்தமகள் சாந்திதான் B. A. பாஸ் பண்ணியதை எனக்குச் சொல்ல எண்ணி மோட்டார் காரில் வேகமாக வந்தபோது..... மோட்டார் லாரி ஒன்று... நடந்தவைகளை மறக்க முயற்சிக்கின்றேன்.

ந. சுதர்சன்,
12 கலை

# NORTHERN BEST INSTITUTE

卐 G. C. E. (O./L.) (A./L.)

卐 H. N. C. E.

卐 I. A. B. (London Exam)

卐 I. C. M. A.

வகுப்புகள் யாவும்

அனுபவமும் திறமையும் வாய்ந்த

ஆசிரியர்களால் நடாத்தப்படுகின்றன

விபரங்கட்கு :

# நொதேண் பெஸ்ற் இன்ஸ்ரிரியூட்

தலைமை அலுவலகம் :

391, நாவலர் வீதி,

நல்லூர்,

யாழ்ப்பாணம்.

கிளை நிலையம் :

பிரதான வீதி,

(பஸ்ரியன் சந்தி)

யாழ்ப்பாணம்.

# V. APPAIAH & SONS,

29/3, STANLEY ROAD,

JAFFNA.

சகல விதமான மோட்டார் உதிரிப்பாகங்களுக்கும்

மற்றும்

தண்ணீர் பம்புகளின் உதிரிப் பாகங்களும்

குறைந்த விலையிலும் நியாயமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு கொள்ளவும்.

களஞ்சியம் :
ஆடியபாதம் வீதி,
நல்லூர்.

வ. அப்பையா அன்ட் சன்ஸ்,
29/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

---

**வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறன்**

**කියවීමෙන් මිනිසෙකු සම්පූර්ණ කෙරේ**

**READING MAKES A MAN PERFECT**

By Courtesy: MILK WHITE SOAP WORKS, Jaffna (SRI LANKA)

மில்க் வைற் தயாரிப்புக்களுக்கு நீங்கள் கொடுக்கும்
ஆதரவு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு
கொடுக்கும் ஆதரவாகும்.

கிளை :
மெசஞ்சர் வீதி,
79, கொழும்பு - 12
தொலைபேசி: 36063

## மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ எண் 77, யாழ்ப்பாணம்.

தந்தி : ''மில்க்வைற்'' தொலைபேசி : 7233

# ஜனநாயக சமூகம்

**மா. லோகேஸ்வரன் 11 'கலை'**

மனிதர்கள் தனித்து வாழ முடியாதவர்கள் என்பதினால் தம்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகச் சமூகமாக ஒன்று கூடி வாழ்கிறார்கள். பாதுகாப்பாகவும், சுதந்திர மாகவும் வாழ்வதற்குச் சமூகம் இடமளிக்குமானால் அதனை நாம் ஒரு ஜனநாயக சமூகம் எனலாம். ஜனநாயகம் என்பது மிகவும் பரந்த பொருளைக்கொண்ட சொல் லாகும். சுருக்கமாகக்கூறின் அதனை ஒரு சிறப்பான வாழ்க்கைத்தத்துவம் எனக் கூறலாம். பாதுகாப்பு, சுதந்திரம், நேர்மை, பரோபகாரம், மற்றையவர்களுடைய அபிப்பிராயங்களுக்கு இடமளித்தல்போன்ற நல்ல இலட்சியங்களை உள்ளடக்கியதே ஜனநாயகமாகும். இந்த இலட்சியங்கள் சமூகத்தில் காணப்படுமாயின் அதனை ஒரு ஜனநாயக சமூகம் எனலாம்.

ஒரு சமூகம் ஜனநாயக சமூகமாயின் அங்கு சில நல்லியல்புகள் காணப்படும். மக்களுடைய உடமைக்கும், உயிருக்கும் போதிய பாதுகாப்பு அளிக்கப்பட்டு இருக் கும். மேலும் அங்கு தனிமனித சுதந்திரங்கள் வலியுறுத்தப்பட்டிருக்கும் தனிமனித சுதந்திரங்கள் ஆவன சிந்தனை, பேச்சு, எழுத்து, விரும்பிய மதத்தைப் பின்பற்று தல், விரும்பிய தொழிலைச் செய்தல் முதலியனவாகும். தனிமனித சுதந்திரங்கள் சட்டத்தினால் மட்டும் உறுதிப்படுத்தப்பட்டது போதாது. அவை நடைமுறையிலும் பிரயோகிக்கப்பட வேண்டும். சமூகத்தில் ஏற்படுகின்ற தீர்மானங்கள், செயல்கள் என்பன சமூக அங்கத்தவர்களால் கலந்து விவாதிக்கப்பட்டதாகவும், பெரும் பான்மையினருடைய விருப்பத்திற்கேற்ப நிறைவேற்றப்பட்டனவாகவும் இருக்க வேண்டும். எனவே, ஜனநாயக சமூகத்தில் கலந்து பேசுவதற்கும் விவாதிப்பதற் கும் தத்தம் அபிப்பிராயங்களைப் பயமின்றி வெளியிடுவதற்கும் இடமுண்டு.

ஒரு சமூகம் தனக்குத் தேவையான சட்டத்தையும், மரபையும் ஏற்படுத்திக் கொள்கின்றது. அவ்வாறு ஏற்படுத்தப்படுகின்ற சட்டங்கள் பாரபட்சமற்றனவாக வும் எல்லோர்க்கும் பொதுவானவையாகவும் நீதியானவையாகவும் காணப்படும். எனவே, சட்டத்தின்முன் எல்லோரும் சமம் என்ற கொள்கை ஜனநாயக சமூகத் தில் காணப்படுகின்றது. சட்டத்தை மீறுவோர் எவராயினும் சட்டப்படி தண்டனை பெறுவர். ஆகவே சட்டத்தின் ஆட்சி ஜனநாயகத்தின் சிறப்பு அம்சமாகும்.

அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள அர சாங்கம் மக்களால் தெரியப்பட்டதாகவும், மக்களுக்காகத் தெரியப்பட்டதாகவும், மக்களைக்கொண்டு அமைக்கப்பட்டதாகவும் காணப்படும். தற்காலத்தில் வாக்குரி மையின்மூலம் மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து அவர்கள்மூலம் ஆட் சியை நடாத்துகிறார்கள். எனவே அரசாங்கத்தை அமைக்கவும், அழிக்கவும் ஜன நாயக சமூகத்தில் மக்களால் முடியும். இவ்வாறு செய்வதற்கான வல்லமை சர்வ சன வாக்குரிமை மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. எனவே, சர்வசன வாக்கு ரிமை என்பது ஜனநாயக சமூகத்தின் மற்றொரு சிறப்பம்சமாகும்.

ஜனநாயகம் பல்வேறு நல்லியல்புகளைக்கொண்டிருந்தாலும் அவை சில கட்டுப் பாடுகளுக்கு உட்படுத்தப்படவேண்டியும் இருக்கின்றது. இக்கட்டுப்பாடுகள் சமூகம் அமைதியாகவும் நிலையானதாகவும் விளங்குவதற்கு அவசியம் வேண்டப்படுகின்றன.

உதாரணமாக: தனிமனிதன் சுதந்திரங்கள் ஜனநாயகத்தில் வலியுறுத்தப்படுகின்றன. பேச்சு, எழுத்து, தான் விரும்பிய தொழிலைச் செய்தல் ஆகிய சுதந்திரங்கள் வழங்கப்பட்டிருந்தாலும் அவை சில கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்படுகின்றன. தனியொருவரின் சுதந்திரம் மற்றையவருக்கோ அல்லது சமூகத்திற்கோ தீங்கு விளைவிப்பதாக அமையக்கூடாது. பேச்சுச்சுதந்திரம் இருக்கிறது என்பதற்காகத்தான் விரும்பிய எல்லாவற்றையும் பேசிவிட முடியாது. அதுபோலவே, ஒருவர் தான் விரும்பிய தொழிலைச் செய்யலாம் என்பதற்காகச் சட்டவிரோதமான தொழில்களில் ஈடுபட முடியாது. அரசாங்கம் அமைதியை ஏற்படுத்துவதற்காகச் சமுகத்திற்குப் பாதுகாப்பான சட்டங்களை உருவாக்குகின்றது. எனவே, ஒரு சமுகத்தில் எந்த அளவிற்குத் தனிமனித சுதந்திரங்கள் இருக்கவேண்டும், கட்டுப்படுத்தப்படவேண்டும் என்பதையெல்லாம் அரசாங்கம் சட்டத்தின்மூலம் வரையறை செய்கின்றது.

ஜனநாயக சமுகத்தில் மக்கள் தங்களுக்காகவே தாங்களே அரசாங்கத்தை அமைக்கின்றனர். எனினும் இவ்வாறு அமைப்பதற்குரிய சர்வசன வாக்குரிமையென்பது மட்டுப்படுத்துகின்றது அதாவது குறிப்பிட்ட வயது வந்தவர்களுக்கு மாத்திரம்தான் வாக்குரிமை உண்டு என்னும்போது கட்டுப்பாடு ஏற்படுகின்றது. அதுபோலவே மக்கள் எல்லோரும் இணைந்து அரசாங்கத்தை நடாத்துவதில்லை. பொதுத்தேர்தலின் மூலம் தங்கள் பிரதிநிதியை அனுப்பி ஆட்சியை நடாத்துகின்றனர். இத்தகைய ஜனநாயக கட்டுப்பாடுகள் சாத்திய நடைமுறை கருதியே ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஜனநாயகம் பல நல்ல இயல்புகளைக் கொண்டிருந்தபோதிலும் ஒரு சமுகத்தில் வாழுகின்ற மக்கள் ஒற்றுமையற்றவர்களாகவும் இன மதரீதியான பிரிவினைகொண்டவர்களாகவும் வாழ்வார்களாயிருந்தால் ஜனநாயக உரிமைகள் துஷ்பிரயோகம் செய்யப்படலாம். மேலும், ஜனநாயகத்தின் தத்துவத்தைப்பற்றிய விளக்கமும் ஜனநாயகத்தின் சிறப்பைப்பற்றிய ஞானமும் இல்லாத பாமரமக்களால் ஜனநாயக உரிமைகள் பிழையாக உபயோகிக்கப்படலாம். இத்தகைய சந்தர்ப்பங்களில் ஜனநாயக ஆட்சி என்பது நாம் கருதுவதுபோன்ற நல்ல பயன் தரமாட்டாது.

உங்களுக்குத் தேவையான சகல
அச்சு வேலைகளையும்
குறித்த தவணையில்
சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள

"கங்கா பிறின்டேர்ஸ்"

தொடர்பு கொள்ளவும்

கங்கா பிறின்டேர்ஸ்
150, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்,

*With best Compliments*
*from*

JEGARAJASUTHAN

★ N. JEGATHEESAN
★ K. PARIMALARAJAH
★ N. SUTHERSAN

# அவன் தான் மனிதன்

கவிதை

ஆங்காரம் எனை ஆண்டதில்லை - உயர்
ரீங்காரம் எனை விட்டதில்லை
சிங்காரி எனைத் தொட்டதில்லை - நான்
சிரிக்க என்றும் மறந்ததில்லை.

நீரோடை எனைக் குளிப்பாட்டும் - நல்ல
நிலமடந்தை எனைத் தாலாட்டும்
காட்சிகள் கோடி களிப்பூட்டும் - நெஞ்சக்
கவலைகள் மாற்றிச் சிரிப்பூட்டும்.

செலவுக்கும் வரவுக்கும் இல்லை - நான்
செல்லாக் காசாகவும் இல்லை
உயிருக்கு பயந்து நானில்லை - நல்ல
உணர்வினை மறந்து நானில்லை.

நினைப்பேன் அதை முடிப்பேன் சரியாய் - இங்கு
நிதமும் நான் தனியாக நினைப்பேன்
அமைதியே என்றும் என் சொத்து - அதை
அடுத்தவர் கேட்டில் வரும் பித்து.

க. சுந்தரமூர்த்தி
II கலை

# உயிரை மறந்து படி

கவிதை

உயிரை மறந்து படி
உனக்கு நான் சொல்வதடா

பத்து மணிக்கு முன்னே பாயில் படுக்கின்றாய்
இப்படி நீ படித்தால் எப்படித்தான் வாழ்வாயடா
படியடா சோதனைக்கு பாதி வருடம் இன்னும்
படியாது யோசித்தும் பயனேதும் உண்டோடா.

உயிரை மறந்து படி

உனக்கு நான் சொல்வதடா
என்னேரமும் சினிமாக் காட்சிக்கேன் - போகின்ருய்
மண்ணுய் போகுது பார் மணித்தியாலம் உனக்கு
அரைச்சல்லிக் கென்ருலும் ஆகும் பயன் இருக்கோ
வீண் வேலே பார்த்து விளையாட்டில் போகாதே

உயிரை மறந்து படி

உனக்கு நான் சொல்வதடா
உருண்டு உருண்டு உறங்காதே எப்போதும்
இரண்டு மணி நேரம் இனித்தூக்கம் போதுமடா !
கண்ணைக் கழுவு மண்ணெய் விளக்கேற்று
என்னுடைய சொற்கேட்டு இனியாகிலும் படிப்பாய்
ஓங்கும் எதிர் காலம் ஒளிமயமாய் உன் - காலம்.

ப. செந்தில்செல்வன்
G. C. E. A/L Arts

Donated by

THE JAFFNA LAW CENTRE

*Branch :*
**B. M. C. Lane,**
Clock Tower Road,
JAFFNA.

*Head Office :*
Main Street,
JAFFNA.

# நுண்ணுயிர் கொல்லிகள்

எமது உடலுக்குக் கேடுவிளைவிக்கக் கூடிய, கண்ணுக்குத் தெரியாத பல நுண்ணங்கிகள் எப்படியோ உடம்பினுள் சென்று விடுகின்றன. உதாரணமாக மனிதனில் சின்னமுத்து, மஞ்சட் காய்ச்சல், அர்மை, பொக்கிளிப்பான், பிடிசுரம், சிறுபிள்ளை வாதம் போன்ற கொடிய நோய்களையும், தாவரங்களில் இலையில் சித்திர வடிவு அல்லது புள்ளி விழுதல், வளையப் புள்ளி இறப்பு நோய்கள் என்பனவற்றையும் உண்டாக்குவது வைரசு என்னும், சாதாரண நுணுக்குக் காட்டியினாலும் பார்க்க முடியாத ''நுண்ணங்கி''யாகும். ஆகவே, இப்படியான கொடிய நோய்களை உண்டாக்கும் நுண்ணங்கிகளை அழிப்பதற்குப் பயன்படுவதுதான் ''நுண்ணுயிர் கொல்லி''. ஆகவே, நாம் நுண்ணுயிர் கொல்லியைப் பற்றி அறிவது அவசியமாகும்.

நுண்ணுயிர் கொல்லிகளைப்பற்றி முதன் முதலில் அறிந்தவர் அலெக்சாண்டர் பௌமிங் என்னும் விஞ்ஞானியாவார். 1939ம் ஆண்டுவரை நுண்ணுயிர் கொல்லிகளின் சிகிச்சைத் தன்மை அல்லது அவைகளின் எதிர்ப்புத்தன்மைகளின் முக்கியத்துவம் முற்றாக உணரப்படவில்லை. 1939ம் ஆண்டு மனிதரிலும், வளர்ப்பு விலங்குகளிலும் பல நோய்களைத் தடுப்பதற்கு நுண்ணுயிர் கொல்லிகள் உபயோகிக்கப்பட்டன. ''பென்சிலியம் என்னும் பங்கசு'' சுரந்த பென்சிலியம் எமது உடலினுள் ஏற்பட்டால் அது அங்குள்ள ''பற்றீரியா'' என்னும் நுண்ணங்கியின் கலச் சுவரை அழிக்கின்றது. இதனால் இந்நுண்ணங்கியின் உடலினுள் நீர் உட்புக அது வெடித்து இறக்கின்றது. இதனால் எமக்கு வரக்கூடிய நோய்கள் தடை செய்யப்படுகின்றன.

1939ம் ஆண்டுக்குப்பின் பல்வேறு நுண்ணங்கிகளைப் பரிசோதனை வளர்ப்பு மூலம் வளர்த்து அவற்றின் நுண்ணுயிர் கொல்லும் தன்மை ஆராயப்பட்டுள்ளது. இவை போன்ற ஆராய்ச்சிகளில் ''தெத்திரோமைசிசு – சிறிசியக் என்னும் ஒரு பங்கசுவில் இருந்து ''தெத்திரோமைசின்'' என்றழைக்கப்படும் ஒரு நன்மை பயக்கக் கூடிய நுண்ணுயிர் சொல்லி கண்டுபிடிக்கப்பட்டது.

சில நுண்ணுயிர் கொல்லிகள் எதுக்குத் தீமை விளைவிக்கக் கூடியனவாயும் உள்ளன. உதாரணமாக, சிறு குழந்தைகளுக்குச் சாதாரண தடிமன், காய்ச்சல் ஏற்படும்போது சிலர் வைத்தியரின் உதவியை நாடாமல் 'ரெற்றே–சைக்கிளின்', என்னும் மருந்தைக் கொடுக்கின்றார்கள். இது சில வேளைகளில் குழந்தைகளின் பல்லைப் பாதிக்கின்றது. அதாவது பல் மஞ்சள் நிறமடைந்து, முறியும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. ஆகவே, நாமாக எந்தவொரு நுண்ணுயிர் கொல்லிகளையும் பாவிக்கக் கூடாது. வைத்தியரின் உதவியை நாடுதல் வேண்டும்.

நோயைக் கட்டுப்படுத்த உபயோகிக்க முடியாத நுண்ணுயிர் கொல்லிகளை வேறு வழிகளில் உபயோகிக்கலாம். உதாரணமாக ''சப்றலின்'' மிகவும் வலிமை வாய்ந்த ஒரு கிருமியழிக்கும் பொருளாகையால் உணவுப் பாதுகாப்பில் இதை உபயோகிக்கலாம். பயிர்களை அழிக்கும் எலிகளையும் இவற்றை உபயோகித்து அழிக்கலாம். சில நச்சுத்தன்மை வாய்ந்த நுண்ணுயிர் கொல்லிகள் உள்ளெடுக்கப்படாமல் வெளியில் பூசுவதற்கு மட்டும் பாவிக்கப்படும். அநேக நுண்ணுயிர் கொல்லிகளை குறிப்பிட்ட தேர்விற்குரிய நுண்ணங்கி இனங்களை அழிக்கவல்லன.

**K. கிருஷ்ணவதனி**
*11 விஞ்ஞானம்*

*Space Donated By :*

# BOND'S INSTITUTE

274/2, Hospital Road,
JAFFNA,

அன்பளிப்பு :

## மலாயன் கபே

36, 38, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

உங்கள் மங்களகரமான
வைபவங்களுக்கு சிறந்த ஸ்டீரியோ
முறையில் பழைய புதிய பொப்பாடல்களை
கேட்டு மகிழ்ந்திட ஒருமுறை
அழைத்துப்பாருங்கள்

## ராஜா சவுண்ட் சேவிஸ்

விபரங்கட்கு :

K. சிவராஜா
34, பிரவுண் வீதி,
1 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

T. வரதராஜா
கொக்குவில் மேற்கு,
பிடாரி அம்மன்
கோவில்,
கொக்குவில்.

# உள்ளக் குமுறல்கள்....

நண்பகல் பன்னிரண்டு மணியிருக்கும், அமைதியாக இருந்த கடலைக் கிழித்துக் கொண்டு, கடற்கரையிலிருந்த படகுகள் ஆழ்கடலை நோக்கி விரைந்து சென்று கொண்டிருந்தன. படகுகளின் இரைச்சல் ஓய்ந்தது கரையின் எதிர்ப் பக்கத்தில் நின்ற இன்னொரு படகு அந்நேரம் தான் தனது ஆழ்கடற் பயணத்தைத் தொடர்ந்தது.

''வேளாங்கன்னி'' இதுதான் அந்தப்படகின் பெயர் அழகாக எழுதப்பட்டுள்ள இதன் பெயரைப் பார்பபவர்கள் ஒரு முறைக்கு இரு முறை பார்க்கத் தவற மாட்டார்கள்.

அந்தப்படகு தனது கண்ணிலிருந்து மறையும்வரையும் வைத்தகண் வாங்காமலே பார்த்துக் கொண்டிருந்தார். சின்னப்புச் சம்மாட்டியார். இவர் தான் அந்தப் படகின் சொந்தக்காரர்.

சென்ற மாதம் தொடக்கம் இவரின் ''வேளாங்கன்னி''க்கு உழைப்பு அதிகமில்லை. ஆனால் மற்றைய படகுக் காரர்களுக்கு இவரைவிட மிகவும் கூடுதலான மீன் அகப்பட்டிருந்தது.

நேற்றுக்கூட வில்சலோஸ் சம்மாட்டியினது தொழிலுக்கு படகு சுமந்து வர முடியாத அளவு மீன் அகப்பட்டிருந்தது.

ஓரிடத்தில் ஒரு படகுக்கு அதிகம் மீன் பிடிபட்டால் காணும், மறுநாள் அதே இடத்தை நோக்கிப் பல படகுகள் செல்லும் இந்தப் பழக்கம் சின்னப்புச் சம்மாட்டியிலும் இருந்தது. இன்று படகு அனுப்பும் போதுகூட அதை அவர் சொல்லத் தவறவில்லை.

ஆழ்கடலை நோக்கி விரைந்து கொண்டிருந்த ''வேளாங்கன்னி''யில் மொத்தம் எட்டுப்பேர் அங்கத்தவர்கள். இவர்களுள் சமையல் வலை பொத்து என்று போக மிகுதி ஆறுபேர்தான் மீன் பிடிக்கப் போவார்கள். இவர்களில் ஐந்துபேர் இளைஞர்கள். மற்றைய ஒருவர் குடும்பப் பொறுப்புடையவர். இளைஞர்களுக்கு மீன் பிடிபடாவிட்டாலும் கவலை அதிகமிராது, மனதைத் தேற்றியபடி ''போடா போ, இன்றில்லாவிடில் நாளைக்கு'' என்ற வைராக்கியம். ஆனால் குடும்பப் பொறுப்புள்ள பேதுரு என்ன செய்வான்? சென்ற கிழமை கஷ்டப்பட்டுக் கிடைத்த கூலி முப்பது ரூபா தான் அதுவும் நாளா வட்டம் பேதுரு வீட்டுச் செலவுக்காக உழைப்பில்லா விடினும் ஐந்து, பத்து என்று வாங்கி விடுவான். சென்ற கிழமை மட்டும் சின்னப்புச் சம்மாட்டிக்கு மேலதிகமாக இருபது ரூபாய் கொடுக்க வேண்டும்.

மனைவிக்குச் சேலை, மூத்தவனுக்கு பாடசாலை அப்பியாசக் கொப்பி இளையவனுக்குச் சட்டை, கடைசிப் பையனுக்குக் குழந்தைக் கூப்பன் லக்ஸ்பிறே இப்படியெல்லாம் சென்ற அவனது சிந்தனையை அப்படகிலிருந்த மரியதாஸ் குலைத்தான். ''அண்ணே அதிகம் யோசிக்காதே'' நமக்கு ஒரு காலம் வரும், வாங்க சாப்பிட என்ற மரியதாஸின் குரல் மரியதாசுக்கு நம்பிக்கை ஊட்டுவதாய் இருந்தது, ஆனால் பேதுருவுக்கு மறுநாட் காலை வழக்கம் போல கடற்கரையில் ஜனங்கள் கூடி விட்டனர். சம்மாட்டிமார் ஒவ்வொருவரும் தூரத்திலே வரும் படகுகளிலே தம் பார்

வையைச் செலுத்திக் கொண்டிருந்தனர். அவர்களில் சின்னப்புச் சம்மாட்டியாரும் ஒருவர்.

அன்று ''வேளாங்கன்னிக்கு'' மற்றைய படகுகளையும் விட கூடுதலான மீன் பட்டிருந்தது. ஏனைய மீனவர்களையும்விட, பேருதுவுக்கு இது இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுத்தது அந்த மகிழ்ச்சி பேதுருவையும், சக மீனவர்களையும் தொழிலில் அலுப்புத் தட்டி விடுவதை நீக்கியது.

சின்னப்புச் சம்மாட்டிக்குப் பலநாட்களாக அவரது படகில் பிடிபட்டிருந்த மீன் போக்குவரத்துச் செலவுக்கே போதாது இருந்தது.

அன்று சனிக்கிழமை ''வேளாங்கன்னி'' மீனவர்கள் ஆறு பேரும் சின்னப்புச் சம்மாட்டியினது வீட்டில் அமர்ந்திருந்தனர். சனிக்கிழமைகளில் தொழிலுக்குச் செல்லும் வழக்கம் அந்தப்பகுதி மீனவர்களுக்குக் கிடையாது. காரணம் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாளாக இருப்பதே ஆகும். ஞாயிற்றுக்கிழமை காலை ஆலயத்திற்குச் சென்றதன் பின்னர்தான் மீண்டும் தமது தொழிலுக்குச் செல்வார்கள். இப்பழக்கம் முன்னர் எல்லாம் மீனவர்களிடையேயும் காணப்பட்டது. ஆனால், இன்றோ ஒரு சிலர் சனி என்றும் பாராது தொழிலுக்குச் செல்வார்கள்.

சின்னப்புச் சம்மாட்டியார் தொழில் ஆரம்பித்ததிலிருந்து இந்தப் பழக்கத்தைக் கையாண்டு வருகிறார். அத்துடன் தொழில் கணக்கு வழக்குகளையும் வாரத்துக்கு ஒரு முறைதான் பார்ப்பது வழக்கம். எல்லா மீனவர்களும் ஊரில் நிற்கும் நாளாகிய சனிக்கிழமைகளிலே தான் அதையும் பார்த்துக் கொள்வார்.

''இந்த வாரம் சின்னப்புச் சம்மாட்டியாரின் தொழிலுக்கு நல்ல உழைப்பு'' ''தொழில் சென்ற ஆறு நாளும் அவரது படகுக்கு நிறைய மீன் பட்டிருந்தது'' இவ்வாறு அந்தக் கரையோரப் பகுதி மீனவர்களது வாயிலிருந்து வந்தவையெல்லாம் சின்னப்புச் சம்மாட்டியாரின் தொழிலைப் பற்றியதாகவே இருந்தது.

''வேளாங்கன்னி''யில் போகும் மீனவர்களில் பேதுரு குடும்பப் பொறுப்பு உடையவனாக இருந்தாலும் ஓரளவு கல்வியறிவு உள்ளவன். அவன் சனிக்கிழமை தொழிலைக் கட்டிவிட்டு வந்தால், எப்படியும் அவ்வூர்ச் சனசமூக நிலையத்திற்குச் சென்று, அந்த வாரப் பத்திரிகைகளை எல்லாம் படிக்காவிட்டால் அவனுக்கு உணவே இறங்காது. அவ்வளவிற்கு அவன் அப்பழக்கத்தை ஆரம்பம் முதல் கைக்கொண்டு வருகிறான். அத்துடன் மற்றைய மீனவர்களை விடத் தொழிற்கணக்கு பார்ப்பதிலே அவன் மிகவும் கெட்டிக்காரன். அந்த வாரத்தில் பிடிபட்ட மீன்கள் என்ன விலைக்குச் சென்றன என்பதை மட்டும் வைத்துக் கொண்டு, ஒவ்வொருவருக்கும் எவ்வளவு கூலி கிடைக்கும் என்பதை மிகவும் எளிதில் கணக்குப் பார்த்துச் சக மீனவர்களிடம் கூறிவிடுவான். இவனது கணக்கும் தொழிலுக்குச் சென்றதிற்குக் கிடைக்கும் கூலியும் கிட்டத்தட்ட ஒரேயளவாகவே இருக்கும். இதனால், சக மீனவர்கள் இவனிடம் ஓர் தனிப்பற்று வைத்திருக்கின்றனர். இந்த வாரத்திற்குக் கிடைக்கும் கூலியை அவன் தொழிலை விட்டு இறங்கியதும் சகமீனவர்களிடம் கூறியதுடன் மகிழ்ச்சியும் அடைந்தான்.

நேரம் காலை பதினொரு மணியிருக்கும். சின்னப்புச் சம்மாட்டியினது வீட்டிலிருந்து ஒவ்வொரு மீனவர்களும் வெளியேறிக் கொண்டிருந்தனர். என்றுமில்லாதவாறு அன்று அவர்களது முகம் சற்று வாடியிருந்தது. சந்தோசப்பட வேண்டிய

அன்றைய நாளில் அவர்களது முகம் வாடியிருக்கக் காரணம் இல்லாமலில்லை. பேதுரு கூறிய கணக்கிற்கும், சின்னப்புச் சம்மாட்டி கொடுத்த கூலிக்கும் என்றுமில்லாத வேறுபாடு இருந்தது.

''அண்ணே, என்றைக்கும் இல்லாதவாறு இன்று சம்மாட்டி கணக்குப் பார்த்திருக்கிறார். நீங்க சொல்லும் கணக்கிற்கும், சம்மாட்டி தரும் கூலிக்கும் முன்னர் வேறுபாடே இருக்க வில்லை. நானும் கணக்குப் பார்த்தேன். அதுவும் உங்களதை ஒத்ததாகவே இருந்தது. ஆனால் இன்று எங்களது சம்மாட்டியார் எமது கூலியிலேயும் கையை வைத்து விட்டார்'' என்று தனது உள்ளக் குமுறலை வெளிப்படுத்தினான் செபஸ்தியான்.

''மீன் கூடுதலாக அகப்பட்டதும் தருணம் பார்த்து இருந்தவன்போல் நமக்கே விளையாடிப் போட்டான்'' பொங்கிவரும் ஆத்திரத்துடன் கூறினான் மரியதாஸ்.

''காற்று மழையுடன் கடலிலே போராடி, எமது உயிரையும் அற்பணித்துப் பாடுபட்ட எமக்குக் கிடைக்கும் கூலியில் கூட கைவைத்தவனுக்கு நாம் ஒரு பாடம் கற்பித்தாக வேண்டும். என்றார் ஜேம்ஸ் அழாக்குறையாக

இவற்றை எல்லாம் கேட்ட பேதுரு, சற்று அமைதியான குரலில் ''தம்பிமாரே, நாம் எவ்வளவு கஷ்டப்பட்டு மீன்பிடித்தோம், என்பது பற்றி உங்களுக்குத் தெரியும். ஆனால், நாம் நாம் பட்ட துன்பங்கள் எங்கே தெரியப்போகுது. வீட்டிலே சொகுசாக இருந்து தொழிலாளியைச் சுரண்டி செல்வந்தராக வாழும் அவர்களுக்கு வறுமையிலே வாழும் எங்களைப் பற்றி எங்கே தெரியப்போகிறது. இதற்கு ஒரே வழி நாமே நேரில் சென்று, எமது குறைகளை சொல்லி நியாயம் கேட்பது தான்'' அதிகம் படிக்காது விட்டாலும், எது சரி, எது பிழை, என்பதை உணர்ந்து செயல்படக் கூடியவன் பேதுரு. அவன் கூறியதை சக மீனவர்களும் ஏற்றுக்கொண்டு சின்னப்புச் சம்மாட்டியார் வீட்டிற்குச் செல்ல ஆயத்தமானார்கள்.

சின்னப்புச் சம்மாட்டியார் எதையும் சாதுரியமாக சமாளிக்கக்கூடிய ஆற்றல் உடையவர். அந்த ஆற்றல் ஒவ்வொரு சம்மாட்டியிலும் இருக்கவே செய்கிறது. அவ்வாற்றல் இல்லாது விட்டால் அவன் உண்மையிலே ஓர் செல்வந்தன் ஆவது கடினம். அத்துடன் அவன் என்றும் முதலாளி என்ற வர்க்கத்திலிராது, தொழிலாளி என்ற வர்க்கத்திலேதான் இருப்பான்.

பேதுருவும் சக மீனவர்களும் அன்று கேட்ட நியாய பூர்வமான கேள்வியைச் சம்மாட்டியார் சாதுரியமாகச் சமாளித்து விட்டார். அவர் கூறிய பதில், உண்மையிலே மீனவர்களுக்கு மனதிலே கோபம் இருந்தாலும் அவற்றை அடக்கிக் கொண்டு சின்னப்புச் சம்மாட்டியார் வீட்டிலிருந்து புறப்பட்டனர்.

இந்தச் சம்பவம் அந்தப்பகுதி மீனவர்களுக்கும் எட்டவே செய்தது. ஆனால், பேதுருவும் சக மீனவர்களும் இதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் மீண்டும் தொழிலுக்குச் செல்லத் தொடங்கி விட்டனர்.

சக மீனவர்கள் படகிலிருக்கும் போது இதைப்பற்றிச் சம்பாஷித்தால் பேதுரு அவர்களுக்குக் கூறுவது ''சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது'' என்பது தான் அந்தளவு தூரத்திற்குப் பேதுரு நம்பிக்கை வைத்திருந்தான். இந்தச் சம்ப

வத்திலிருந்து சின்னப்புச் சம்மாட்டியார் தமது கூலிப்பணத்திலே கைவைக்க மாட்டார். என்ற நம்பிக்கை சக மீனவர்களுக்கு படிப்படியாக ஏற்பட்டது.

ஆனால், மீனவர்கள் எதிர்பார்த்தது போல் நடைபெறவில்லை. மீண்டும் மீண்டும் சின்னப்புச் சம்மாட்டியார் தமது மீனவர்களுக்கு அநீதி இழைக்கத் தொடங்கி விட்டார். மீன் கூடுதலாகப் பட்டபோது தான் தொழிலாளின் கூலியில் கைவைத்தார். ஆனால் இன்றோ, உழைப்புக் குறைந்த நாளில் தொழிலாளரின் கூலியில் கைவைத்தால் அவர்கள் பாடு என்னவாகும்.

இதைப் பற்றி ஒரு முறை தனது மனைவி பிலோமினாவிடம் கூறிய போது அவள் ''இந்தத் தொழிலை விட்டு இறங்கி வேறு யாருடையதும் தொழிலுக்குப் போவது தானே'' என்று அறிவுரை கூறினாள். ஆனால் பேதுரு அதற்கு விரும்பவில்லை. காரணம், தாம் அத்தொழிலை விட்டு இறங்கினால் சக மீனவர்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே, அவன் எப்படியும் இதற்கு ஒரு வழி கண்டே தீர வேண்டும். என்று வைராக்கியத்துடன் இருந்து விட்டான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை தொழிலுக்கு போவதற்கான நேரம் வந்து விட்டது. பேதுருவும் சக மீனவர்களும் அன்று ஒன்று கூடி ஓர் தீர்மானம் எடுத்திருந்தனர். அவர்கள் தீர்மானம் எடுப்பதற்கு முக்கிய காரணம், ''எம்மை மனிதனாக மதியாது. மடையர்களாக எண்ணி, எமது கூலிப்பணத்திலே கைவைத்தவனுக்கு எப்படியும் நாம் ஓர் பதிலடி கொடுத்தே தீரவேண்டும்'' என்ற செபஸ்தியானின் ஆவேசப் பேச்சுத்தான்.

பேதுரு அந்தத்தீர்மானத்தைச் சக மீனவர்களுக்கும் விளக்கமாகக் கூறினான் ''இன்று முதல் நாம் ''வேளாங்கன்னி'' படகில் தொழிலுக்குச் செல்வதில்லை. எமது நியாயமான கோரிக்கையைச் சின்னப்புச் சம்மாட்டியார் ஏற்றுக் கொண்டு எமது கூலியைச் சரியாகத் தரும்வரைக்கும் நாம் போராடுவோம். அதே நேரம் ''வேளாங்கன்னி''யில் வேறுயாரும் தொழிலுக்கு செல்வார்களாயிருந்தால் அவர்களுக்கு நாம் நடந்ததைக் கூறித் தடுக்க வேண்டும். இவற்றையெல்லாம் நாம் செய்யாது மீண்டும் தொழிலுக்கு போவோமாயிருந்தால் உண்மையிலே நாம் பரம்பரையில் வந்த மீனவர்கள் அல்ல; இவ்வாறு நாம் செய்வதன் மூலம் ஏனைய மீனவர்களும் தமது சம்மாட்டிமாருக்கு நல்லதொரு பாடம் படிப்பிக்க, அதன் மூலம் மீனவ சமுதாயம் தமது உழைப்பைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்'' என்றான் ஆக்ரோஷமாக இவனது பேச்சை சக மீனவர்களும் ஏற்றுக் கொண்டு விடைபெற்றனர்.

நண்பகல் ஒருமணியாகியும் தமது தொழிலாளர்களைக் காணாத சின்னப்புச் சம்மாட்டியார். பேதுருவின் வீட்டிற்கே வந்து விட்டார். தனது சம்மாட்டியாருக்கு பேதுரு கூறிய பதில், ''இனிமேலும் நாம் உமது படகில் தொழிலுக்குப் போவதாயிருந்தால் அது எங்களுக்கே கேவலம் எமது நியாயமான கூலியை நீங்கள் தருவதாகக் கூறும் வரை நாம் தொழிலுக்குச் செல்வதில்லை,'' எனபதே

சின்னப்புச் சம்மாட்டியாருக்குக் கோவம் வந்தாலும், எல்லோரும் ஒன்றுபட்டிருப்பதையுணர்ந்து ஒன்றும் பேசாது வந்த வழியே திரும்பிப் போய்விட்டார். அவர் போகிற திசையைப் பார்த்தான் பேதுரு, அவர் ஏனைய மீனவர்களிடம் தான் செல்கிறார், என்பதை அறிந்து கொண்டு பேசாதிருந்து விட்டான்.

ஒரு வாரமாகி விட்டது ''வேளாங்கன்னி'' கடலிலே நின்ற இடத்திலேயே ஆடி அசைந்த வண்ணம் காட்சி கொடுத்தது.

அன்று திங்கட்கிழமை பேதுருவும் சக மீனவர்களும் ஒன்று கூடி அளவளாவும், ஆலமரத்தின் கீழ் அமர்ந்திருந்தனர். இவர்களுடன் ஏனைய சில மீனவர்களும் இவர்களுக்கு ஆதரவாக உரையாடிக் கொண்டிருந்தனர்.

தூரத்திலே சின்னப்புச் சம்மாட்டியாரும், அவ்வூர் விதானையார் சிதம்பரப்பிள்ளையாரும் வந்து கொண்டிருந்தனர். சிதம்பரப்பிள்ளை அவ்வூருக்குப் புதியவராயினும் அவ்வூரில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் வெற்றி கண்டவர். அவ்வூர் மக்கள் அவர் மேல் ஒரு தனி அன்பு வைத்துள்ளனர். அவரை எதிர்த்துக் கதைக்க யாரும் முன்வர மாட்டார்கள். அதே போல் அவரும் மக்களின் பிரச்சினைகளை அறிந்து அதற்கேற்ப, சுமூகமான வழிகளை ஏற்படுத்திக் கொடுப்பார். அவர் முன்னின்று தீர்த்து வைத்த எந்தப் பிரச்சினையும் இதுவரை தோல்வி கண்டதில்லை.

சிதம்பரப்பிள்ளையும் சின்னப்புச் சம்மாட்டியாரும் வருவதைக் கண்ட பேதுருவும், சக மீனவர்களும் தாங்கள் மேற்கொண்ட நியாயமான கோரிக்கை நிறைவேறப் போகின்றது என்னும் மகிழ்ச்சியுடன் இருக்க, பேதுரு எழுந்து அனைவருக்கும், ''நாம் கடலிலே தான் உயிருக்காகப் போராடி வெற்றி கொண்டோம். ஆனால், கரையிலேயும் நாம் எமது நியாயமான கூலிக்காகப் போராடி வெற்றி கொண்டுள்ளோம்.'' என்று கூறவும், விதானையாரும், சின்னப்புச் சம்மாட்டியாரும் அவ்விடம் வரவும் சரியாக இருந்தது.

''யாவும் கற்பனை''

எழுதியவர்:
**வி. அலோசியஸ்**

''நாம் போராடுவோம். இந்தத் தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கும் போராடிக் கொண்டேயிருப்போம்.

ஹோஷிமின்

✲ ✲ ✲

# வாழ்த்துக் கவிதை

**A. P. குமரன், B. A.**

மாணவ உலகின் மணிப்பெரு விளக்காய்
ஆனதோர் குரலே அகிலமதில் — பூணரும்
பெருமை பெற்றிங்கு பேர்புகழ் தன்னுடனே
அருமையாய் வாழ்க அமர்ந்து.

# கலாசாலைக்கு செல்ல கல்விகற்பதா! தொழிற் கல்வி கற்பதா! எது சிறந்தது?

இத்தலையங்கத்தைக் கொண்டு ஆராயும் போது, இதன் கருத்து ஒரு தர்க்கரீதியில் அமைகின்றது. என்னவெனில் முன்பு கல்வி கற்போருடைய நோக்கமும் கல்வி கற்பிக்கும் பெற்றோருடைய நோக்கமும் ஒன்றாகவே இருந்தது. அதாவது தனது பிள்ளை சிறப்பாகக் கல்வி கற்கவேண்டும். கலாசாலைக்குச் செல்ல வேண்டும், பட்டதாரியாக வேண்டும் என்பதேயாகும். ஆனால், முன்னர் கலாசாலைக்கு செல்வோர் மிகவும் குறைவாகவே இருந்தனர். பெற்றோரின் எண்ணம், தனது பிள்ளை பல்கலைக்கழகம் போக வேண்டும். என்பதால், அவர்கள் அதிக பணம் செலவு செய்து பிள்ளையைக் கற்பிக்கின்றனர். இதனால் பிள்ளைகளின் எண்ணமும் தாம் வெள்ளை உடையுடுத்து மேசை கதிரை மேல் உட்கார்ந்து வெள்ளைக் காகிதத்தில் பேனாவால் எழுதவேண்டும் என்பதேயாகும்.

இருந்தும், செல்வந்தர்களின் வசதி படைத்த பிள்ளைகளே அதிகமானோர் கல்விகற்றுப் பல்கலைக்கழகம் சென்றனர். இதனால் ஏழை மக்கள் பலர் பாதிக்கப்பட்டனர். பலர் கல்வியையும் கைவிட்டனர். ஆனால், பல்கலைக்கழகம் சென்று அங்கும் இலவசக் கல்வியைச் சில வருடங்களில் முடித்துக் கொண்டு வெளியேறுகின்றார்கள். ஆனால், வெளியேறியவர்கள் நாட்டில் தொழில் பார்த்துத் தமது கல்வியை கொடுத்த தாய் நாட்டுக்குச் சேவை செய்கின்றார்களா? இல்லை; அவர்கள் வெளியேறியதும் நாம் இந் நாட்டில் பிறந்தோம். இங்குகல்வி கற்றோம் இந்நாட்டுக்குச் சேவை செய்யவேண்டும் என்ற எண்ணம் மனதில் சிறிதளவுகூட இல்லாமல், நன்றி கெட்டவர்களைப் போல வெளிநாடுகளுக்கு வேலை பார்க்கச் செல்கின்றார்கள். இதனால் தனது பணத்தை விரயம் செய்து கல்வி கற்பித்து விட்ட இந்நாடு ஏமாற்றம் அடைகின்றது பல நிபுணர்களை இழக்கின்றது. சொந்த மண்ணில் இருந்து தொழில் செய்யாமல் போவதால், தாய் நாடு மேன்மையின்றி அப்படியே இருந்து ஒரு பின்தங்கிய நாடாக ஒதுக்கப்படுகின்றது. இதனால். இலவசக் கல்வியைக் கற்பித்து, அவர்களைப் பல்கலைக்கழகம் மட்டும் செல்ல உதவிபுரிந்து அவர்களைச் சிறந்த வைத்தியர்களாகவோ, பொறியலாளர்களாகவோ முன்னேற்றி நாடு என்ன பயனைக் கண்டது? இதனால் தானே கீழ்நிலையை அடையவேண்டி இருக்கின்றது.

ஆனால், இன்று எந்த நாட்டிலும் தொழிற்கல்வியை பலர் கற்கின்றனர். பலர் விரும்புகின்றனர். எமது நாட்டிலும் அதிகமானோர் தொழிற்கல்வியையே விரும்பிக் கற்கின்றனர். பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பில்லாவிடினும், தொழில் நுட்ப நிலையங்களை நாடித் தொழிற் பயிற்சி பெறுகின்றனர். இதன் காரணத்தால், தொழில் நுட்ப நிலையங்களில் பயிற்சி பெறுவோர் தொகை ஆண்டுக்கு ஆண்டு அதிகப்படியான வீதத்தால் அதிகரிக்கின்றது. தற்போது எம் நாட்டில் படித்த எல்லோரும் பல்கலைக்கழகம் செல்கிறார்களா? பலர் செல்ல வாய்ப்பிருந்தும் செல்ல முடியாமல் இருக்கின்றது. ஏன்?

இதனால் பலர் விரக்தி அடைந்தார்கள் எல்லோரும் தொழில் நுட்ப நிலையங்களை நோக்கிப் படையெடுக்கிறார்கள். முன்பு தொழில் நுட்ப நிலையம் என்றால் என்ன என்று கூடத்தெரியாதவர்கள், தாம் சுயமாக ஒரு தொழிலைக்கற்றுக் கொண்டால் தான் மற்றவனுக்கு அடிமையின்றிச் சுய மரியாதையுடன் வாழலாம் என்றும், எப்போதும், யாருக்கும் பயப்படத்தேவையில்லை என்றும் குறுகிய காலத்தில் சீவனோபாயம் தேடலாம் எனவும்.

மகிழ்ச்சி அடைகின்றான் தாய் நாட்டில் கல்வி கற்று விட்டு வெளியே சென்று வேற்று நாட்டில் சேவை செய்வோரைப் போல அல்லாது இவன் தனது நாட்டிலேயே சேவையையோ அல்லது உற்பத்தியையோ அல்லது தொழிலையோ சுயமாக ஆரம்பிக்கின்றான் இதனால், நாடு முன்னேறுகின்றது. உற்பத்தி பெருகுகின்றது. அன்னியச் செலாவணி மீதப்படுத்தப்படுகின்றது.. வேலையில்லாமல் வீதியில் அலைவோருக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கக் கூடியதாக இருக்கின்றது. இதனால் படித்தவர்களிடையேயும் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்குகின்றது நாட்டின் வளங்கள் பாவிக்கப்படுகின்றன.

எமது நாடும் வேற்று நாட்டுடன் ஒப்பிடக்கூடிய வகையில் முன்னேறுகின்றது. ஒவ்வொருவரும் நாட்டுக்குச் சேவை செய்வோராகக் கருதப்படுகின்றனர். நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைப்பவர்களே நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள். இதனால் பாடசாலைகளில் கூடப்பகுதி நேரப்பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்கள் நன்மை அடைகின்றார்கள். பலவித தொழிற் பயிற்சிகளைப் பெறுகின்றார்கள் இதனால் இவர்கள் வெளிநாடு செல்ல வேண்டிய நிலை ஏற்பட இடம் இல்லை. இங்கேயே தொழில் வசதிகளைச் செய்து அபிவிருத்தி செய்தால் மக்களும் அடைவார்கள் இவர்கள் மக்களை மகிழ்விப்பதோடு தாமும் சுபீட்சமாக வாழ்ந்து இந்நாட்டுக்குச் சேவை செய்யும் உத்தமர்களாகின்றார்கள்.

ப. செந்தில் செல்வன்
*11 கலை*

மாணவர் சமுதாயத்திற்கோர் வரப்பிரசாதம்
தமிழ் மாணவர் பேரவை

**கனகரத்தினம் ம. ம. வித்தியாலயத்தின் வருடாந்த ஏடான**
**மாணவர் குரலை**

**மென்மேலும் வளர்ச்சியடைய வாழ்த்துகிறது**
**தமிழ் மாணவர் பேரவை**

*அலுவலகம் :*
37, செட்டித் தெரு
நல்லூர்.

# சனத்தொகையும் சமுகவியல் பிரச்சினைகளும்

மனிதனின் கூட்டு அமைப்பே சமுகமாகும். ஆகவே, சமுகத்தையும் மனித னையும் பிரிக்க முடியாது. ஆரம்ப காலத்தில் சமுகங்கள் ஆற்றங்கரை ஓரங்களில் நிரந்தரமாகத் தோன்றியபோது மக்கள் மிகக் குறைவாகவே இருந்தனர். இவர்க ளின் முக்கிய தொழில் விவசாயமே. காலப்போக்கில் வர்த்தக, வியாபார வளர்ச் சியின் காரணமாகப் புதிய நகரங்கள் தோன்றலாயின. நகரங்கள் முக்கியமாகத் துறைமுகங்களை ஒட்டியதாக வளர்ச்சி அடைந்தன. கிராமங்களிலும் பார்க்க நக ரம் அமைப்பில் வேறுபட்டிருந்தது. 18-ம் நூற்றாண்டில் கைத்தொழிற் புரட்சி ஐரோப்பாவில் ஏற்பட்டது. தொழிற்சாலைகளை மையமாகக்கொண்ட புதிய நகரங் கள் தோன்றின நகரங்களின் உணவுத் தேவையைக் கிராமங்களே நிறைவு செய்ய வேண்டியிருந்தது. கிராமம் நகரத்திலும் தங்கியிருக்க வேண்டி ஏற்பட்டது. வியா பார வர்த்தக, கைத்தொழில் வளர்ச்சி ஆகியவற்றால் மட்டுமல்லாமல் சனத் தொகை அதிகரிப்பால் மக்கள் இடம்பெயரலாயினர். பல்வேறு சமுக இயல் பிரச் சனைகளும் தோன்றலாயின. காரணம் சனத்தொகை பிரச்சனைக்குரிய அளவுக்கு அதிகரிப்பாலதே.

இலங்கையிலும் சனத்தொகை அதிகரிப்புப் பிரச்சனைகளைத் தோற்றுவித்துள் ளது. 25,000 — 332 ச. மைல் பரப்பளவைக்கொண்ட எமது நாடாகிய இலங்கை யிலேயே ஒருகோடியே 27 இலட்சம் மக்கள் தற்போது வாழ்கின்றனர். இவர்கள் சமமாக பரம்பிக் காணப்படவில்லை இலங்கையில் சராசரி சன அடர்த்தி ஒருசதுர மைலுக்கு 508 பேர் ஆகும். எனினும் கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் சராசரி அளவிலும் பார்க்கச் சன அடர்த்தி மிகக் கூடுதலாகக் காணப்படுகின்றது. இதற்கு மாறாக வவுனியா, மன்னார், மாவட்டங்களில் சராசரி யிலும் பார்க்கக் குறைவாகக் காணப்படுகின்றது. 1871-ம் ஆண்டு முதன் முறை யாகச் சனத்தொகை கணக்கெடுக்கப்பட்டபோது இலங்கையின் சனத்தொகை 24 இலட்சமாக இருந்தது. 1971-ல் அது 1 கோடி 27 இலட்சமாக அதிகரித்தது. சனத்தொகை அதிகரிக்க இரண்டு அடிப்படைக் காரணங்கள் உண்டு. (I) இயற் கையான அதிகரிப்பு. (II) குடிப்பெயர்ச்சி, வர்த்தகம் காரணமாகவும் அந்நியர் ஆட்சி காரணமாகவும் குடிப்பெயர்ச்சி ஏற்படக்கூடியது; எமது நாட்டைப் பொ றுத்தளவில் சுதந்திரம் அடைந்தபின் குடிப்பெயர்ச்சி, சனத்தொகை அதிகரிப்பைப் பாதித்தமை குறைவாகும். வேலை தேடி வெளிநாடு செல்வோரால் ஸ்ரீமா—சாஸ் திரி ஒப்பந்தத்தினாலும் இப்போது குடிபெயர்ச்சி ஓரளவு இடம் பெறுகின்றது என லாம். சனத்தொகை வேகமாக அதிகரிப்பதால் நிலம், உணவு, உறையுள், சுகா தாரம், கல்வி ஆகிய துறைகளிவ் பாதிப்பு ஏற்படுகின்றது. இலங்கையின் சனத் தொகை வயதடிப்படையில் நோக்கும்போது 39·3 வீதம் 14 வயதுக்கு உட்பட்ட வர். 4·4 வீதம் ஆனோர் 65 வயதுக்கு மேற்பட்டவர் ஆவார். இவர்களை மனித வளமாகக் கருதமுடியாது. அதாவது இவர்கள் உழைக்கும் சக்தி அற்றவர்களா வர். இவர்கள் அண்டி வாழ்வோராவர் எமது நாட்டின் சனத்தொகையில் உழைப்பு சக்தியில் 12 வீதம் வேலைவாய்ப்பு அற்றவர்கள் தொழிலாளர் ஒவ்வொரு 100 பேருக் கும் 7 பேர் அண்டி வாழ்வோராக இருக்கின்றனர். அண்டி வாழ்வோர் தொகை அதிகரித்ததோடு அரசாங்கத்தின் செலவினங்கள் அதிகரிக்கின்றன. இதனால் பொரு

ளாதார அபிவிருத்திக்குச் செலவிட முடியாத நிலை ஏற்படுகின்றது. அபிவிருத்தி குறைந்த நாடுகள் உற்பத்திப் பெருக்கத்துக்காகச் செலவிடும் நேரத்தில் பெருகி வரும் சனத்தொகைக்கும் தேவைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டி இருக்கின்றது. இம்முரண்பட்ட போக்கு பொருளாதார அபிவிருத்தியில் பெரும் தடையாக இருக்கின்றது. பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்பச் சனத்தொகை வளர்ச்சியும் சமமாக அதிகரிக்க வேண்டும் என்பதற்காகச் சனத்தொகைக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தி உள்ளனர்.

இலங்கையில் மாத்திரமன்றி, உலகின் சனத்தொகையும் வேண்டாத அளவுக்கு அதிகரித்து வருகின்றது. இதனல், சர்வதேச ரீதியில் உலக அமைதிக்கே சனத்தொகை பெரிய சவாலாக அமைகின்றது ஆகவே, சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் ஏற்படுத்துவதற்கு உறுதுணையாக உள்ள ஐக்கிய நாடுகள் நிறுவனம் சனத்தொகைக் கட்டுப்பாடு சம்பந்தமான ஸ்தாபனங்களை ஏற்படுத்தி உள்ளது. அண்மையில் இந்த நடவடிக்கைக்காகப் பெருநிதித் திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்நிதித்திட்டம் சுகாதாரம், கல்வி, தொழில் முதலிய அமைச்சுக்களிலுள்ள சனத்தொகைக் கட்டுப்பாட்டு அமைப்புக்களின் தொழிற்பாடுகளுக்காகச் செலவிடப்படும்.

ப. செந்தில் செல்வன்
G. C E. A/L (II கலை)

NEW PLACE - புதிய இடம்

**BRIGHT CENTRE**

Clock Tower Road, B. M C. Lane (வெலிங்டன் அருகில்)

**JAFFNA.**

**B.A., B. Com, G.A.Q., G.S.Q., G.C.E. (O/L), (A/L)**

**A/L. துரித மீட்டல் வகுப்புகள் ஆரம்பம் 30-11-77**

**விசேட விரிவுரையாளர்களால்**

**நடாத்துப்படுகிறது.**

# 12-ம் கலைக் கூடம்

செல்வி கலைவாணி பொன்னுத்துரை
12 கலைப்பிரிவு

மனிதருள் மாணிக்கம் அரியரட்னம் எம் அதிபர்
அவர் ஆசியுடனேயே ஆண்களும் பெண்களும்
அன்புடன் அமைத்த அரிய கலைக் கூடம்
கனகரெத்தினக் கலைக் கூடம் எம் கூடம்.

பன்னிரண்டாம் தரம் படித்தாலும் பண்புடன் நாம்
பணிவான வகுப் பென்று பாராட்டில்லா விடினும்
பணிவற்ற வகுப்பென்றும் பெயர் நாம் எடுக்காது
பண்புடனே தம்வகுப்புப் பெயர்பேணும் மாணவர்நாம்.

தர்மகுணமுடைய தரமான மாணவரும்
தங்கியுள்ளார் இங்கே சரித்திர மாணவர்க்குத்
தரித்திரம் வராமல் சிரித்திருப்பார் திரு. செல்லப்பா.

பகிடியுடன் புவியியலை விஜயகாந்தன் விரைந்தளிப்பார்
கணக்கியலைக் கடுமையாகக் கற்பிக்க ஓடிவரும்
உபயசேகரமும் உத்தமரே
வர்த்தகத்தை அன்புனே அளிப்பார் திரு - நாகராஜா

கண்மணிபோல் எம்மையவர் காத்திடுவார் கண்ணியமாய்
இந்து நாகரீகம்தனை இன்பமுடன் எமக்கூட்டி
இன்பம் அளித்திடுவார் செல்வி தம்பிப்பிள்ளை அவர்கள் -
கல்விதனை மட்டுமின்றி கண்ணியத்தையும் பார்ப்பார்
கண்டிப்பாயும் நிற்பார் கதைத்தும் சிரித்திடுவார்.

சுந்தரத் தமிழ் தனையே சுத்தமாய் சுவையூட்டி
வந்து தரும் சூசைப்பிள்ளையாம் சூரர் ஐயா
ஆனந்த முடனேயே ஆங்கிலம் தனை எமக்கு
அளிப்பார் திருநாவுக் கரசர் பெரியர் ஐயா.

கண்டிப்பு இல்லாமலே கணிதக் கலையூட்டும்
சாம்பசிவனும் சாந்தமுள்ளார்
சாந்தகுணம் தாங்கும் சபா நடேசன் பொருத்தம் ஐயா
பொருளியலுக்கு
இத்தனை பேருமப்பா எமக்கறிவு நல்குகின்றார்.

FOR YOUR NEXT SUIT

卐 Slacks 卐 Shirts 卐 Shorts
卐 Children Garments

REFINE & CO.

40, Grand Bazaar, JAFFNA.

Gents & Ladies Fashionable Tailoring

REFINE

DRESS MANUFACTORY

6, Jummah Mosque Lane, JAFFNA.

With Best Compliments From :

S. V. KUNAPALAN

Makers in : Rubber Stamps, Sign Board,
Cinema Slides, Key Tags, Plastic Boards Etc.

( VASI WATCH WORKS )

Front of Shanti Cinema, JAFFNA.

# HIJAKING

In todays world we hear of many hijakings taking place. Some of these acts seem to be more thrilling than other cases. It is an indisputable fact that the freedom and comfort available in eertain air-ports, are the main causes to admit such incidents like these The hijakers easily enter the plane with weapons, and easily escape from the customs checkings. It can't be stopped, for if the customs authorities attempt to be strict with the passengers, they may not be able to deal with the entire number of passengers within the scheduled time Unlike Ceylon, countries like England, Italy, France, U. S. S. R., U. S. A. etc., have to deal with a great number of passengers. So the officers there have to be very lenient as far as possible in managing their work.

Actually hijakings can be described as forcible acts to get something needed by a movement or by a certain nation We heard, two months back about a hijaking incident by the Guerillas. They bailed the passengers in that plane for the release of their fellow mates. This act seems to be morally correct. But we can't call this as a non-violent war or 'Ahimsa( because here the violence is applied on the passengers who travel from various Countries.

Hijaking gives a lot of trouble to the passengers. There may be some who are deeply involved in business and the time may be their valuable factor In such cases, like these, hijaking becomes one of the worst incidents. When the lives of the passengers are bailed for their needs there might be danger to their lives at any time. If hijaking take place frequently, the number of passengers will decrease by rather a big fraction. This may result in the air-companies trying to run their services at a loss.

On the other hand it is a useful weapon to control the high handed actions of well developed countries such as helping certain countries with weapons etc.

Putting in a nut shell, we can say that if hijaking is purposed for any peaceful actions or to help to maintain peace without any wars, then it may be welcomed by certain backwatd nations and underdeveloped countries.

*N. Suthersan*
*12 Arts*

★ ★ ★

# நன்றி

எமது மன்றத்தின் இம்மலரை வெகுசிறப்புடன் வெளியிட விளம்பரங்கள் மூலமும், நன்கொடைகள் மூலமும், நிதியுதவிபுரிந்த சகல ஸ்தாபனங்களுக்கும், கல்லூரி அதிபர்-உப- அதிபர் அவர்களுக்கும், துணை ஆசிரியர்களுக்கும், மன்றப் போஷகர்களுக்கும்; சக மாணவ மாணவிகளுக்கும். மலரை வெகுவிரைவில் சிறப்புடன் அச்சிட்டு உதவிய யாழ்/மா. ப. நோ. கூட்டுறவு அச்சக முகாமையாளருக்கும், சக ஊழியருக்கும் எமது மன்றத்தின் நன்றிகள் உரித்தாகுக.

உயர்தர மாணவர் மன்றம்

கனகரத்தினம் ம ம. வித்தியாலயம்.

# நீ உடனிருக்க நானெழுத வேண்டும்

i. பார் முழுதும் தூங்கிவிட வேண்டும் - எந்தன்
ஆடலும் அடங்கிவிட வேண்டும்
புவிமுழுதும் கவலையின்றித் தூங்க — நான்
கவியெழுத வந்தமர வேண்டும்
வேப்பங்கிளை அசைய வேண்டும் — இன்பாய்
வீசு தென்றல் சேர்ந்து வர வேண்டும்
சின்னமலர் மொட்டவிழ வேண்டும் — சுகந்தம்
சிரித்து மருவ வேண்டும்.

ii. வெள்ளி எங்கும் பரந்திருக்க வேண்டும் — விண்
வீதியில் மலர்தூவ வேண்டும்
நள்ளிரவு நேரம் வரவேண்டும் — நீ
உடன் இருக்க நானெழுத வேண்டும்
நிழல் போலென் நித்தி (ரா) தேவி — என்
வாழ்வில் நான் கண்டெடுத்த தேவி
புன்னகை விட்டொழிய வேண்டும் — நீ
உடனிருக்க நானெழுத வேண்டும்.

iii. பால் நிலாக் கதிர் சிதற வேண்டும் — என்
பக்கத்தில் வந்து விழ வேண்டும்
கால் தளர்த்திக் கையசைத்துத் தென்றல் — வந்து
கைவிளக்கை நூர்த்துவிட வேண்டும்
ஒளி அகல இருள் சூழ வேண்டும் — கவி
ஓய்ந்து கரம் சோர வேண்டும்
கலகலத்து நீ சிரிக்க வேண்டும் — உன்
கை அணைப்பில் நான் துடிக்க வேண்டும்.

iv. போதுமென நான் நடுங்க வேண்டும் — எனைப்
புன்னகையால் நீ பொசுக்க வேண்டும்
சேர்ந்து நான் மெய்மறக்க வேண்டும்—உன்கண்
சேர்ந்து எனைத் தழுவ வேண்டும்
கை சோர்ந்து கால் சோர வேண்டும் — என்
கண்களுடன் நீ கதைக்க வேண்டும்
மெய்முழுதும் சோர்ந்துவிட வேண்டும் — கவி
என் மேனியிலே நீ எழுத வேண்டும்.

செல்விகள்: க. நித்தில கீத்தகுமாரி.
வகுப்பு- 12 வர்த்தக கலை பிரிவு

# ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்

நம். 8, மக்கள் நவீன சந்தை,

யாழ்ப்பாணம்.

எங்களிடம் :

நவநாகரீக மங்கையர் விரும்பும்

கிளாஸ் வளையல், பிளாஸ்ரிக் வளையல்,

முத்துமாலைகள், றேந்தைகள்,

நூல்வகைகள்

மற்றும்

வீட்டுப் பாவனைப் பொருட்களான

டொலர் அலுமினியம்,

எனுமல், பித்தளைப் பாத்திரங்களையும்

எம்மிடம் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

கிளைகள் ;

ஜீவா பன்சி கவுஸ் அன் டெக்ஸ்டைல்ஸ்,
248, மெயின் வீதி,
கொழும்பு - 11

ஜீவா பிரதர்ஸ் சோப் இன்டஸ்ரீஸ்,
18. சவுண்டர்ஸ் பிளேஸ்,
கொழும்பு - 12.

# மணப் பெண்

மானைஒத்த மருளோடு மங்கை நீ நடந்து வர
மாமகள் வாழ்கவென மற்ருேரும் வாழ்த்துரைக்க
மங்குகின்ற நிலவொளியில் தங்கரதம் வருவதுபோல்
பங்குகொண்டு வாழ பணிவாக நீ வருவாய்.

மணப்பெண்ணுய் நீயும் மலர் கையிற்கொண்டு
மணவாளன் அருகில் மகிழ்வோடு சென்று
கணமான பொழுதில் கனியாகி நின்று
கனலாகி நீயும் தடுமாறுகின்ருய்.

இளசான ஜாலத்தில் எண்ணங்கள் கோடி
உளமார ஒன்றும் உனக்கென்றும் இல்லை
தளமான வாழ்வைத் தரணியிற் கொண்டு
வழமாக வாழ வாழ்த்துவேன் தோழி.

எழுதியவர் — செல்வன் சந்திரா ரகுபதி
11 கலைப்பிரிவு

# என் அருமைக் காதலி

என்னருமைக் காதலியே — உன்னை
என்னென்று விளித்துரைப்பேன்
கள்ளமிலா உளங்கொண்ட — கன்னித்தமிழ் நாயகியே
எள்ளளவும் உனைமதியார் ஏனிந்தப் புவியினிலே,
வெள்ளனவே நீ சொல்வாய் வேற்றுமையில்லாத்தமிழே.

கனியாகிச் சுவையாகிக் காவியமாய் வந்திடுவாய்
காதலனை மகிழ்விக்கும் காதலியாய் நீ வருவாய்
கம்பனின் காதலியே கன்னியே நானுன்னைக்
கணப்பொழுதும் மறவேனே காவியத்தின் நாயகியே.

பாரதியின் புதுமையளே பாவையே நானுன்னைப்
பார்க்கும் நாள் தூரமில்லை, பாவாய் எனை அழைப்பாய்
தமிழ்த்தாயே தலைகூர்ந்து தழுவியே எனைநோக்கு
அடியேனை மறவாதே அணைத்திடுவாய் அடியேனை.

செல்வி-கலைவாணி பொன்னுத்துரை
12 கலைப்பிரிவு

# துள்ளி எழுந்தேன்

மாலைப்பொழுதில் ஒரு மலையடியில்
வானையும் மதியையும் நோக்கியிருந்தேன்
நீலப்பட் டாடை யொன்று நெஞ்சமறிந்து
நேரில் எனை அணைந்து நோக்கி என்னையே
வான மதியினிடை மனம் விடுத்து
வாடி இருக்குமிந்த வடிவென்னடி?
கான மலர் பறித்துக் கரம் கொடுப்பேன்
கட்டிடுவாய் அவற்றைக் கரம் கொடுத்து.

மோனம் உனக்கு வந்த மோகம் என்னடி?
முகத்தை மறைத்திருக்கும் ஞானமென்னடி?
வான நதியில் வந்த வண்ணம் என்னடி?
வாழ்க்கை கசந்துவிட்ட வார்த்தை சொல்லடி
பாங்கியர் தம்குரலில் பசப்புகின்றாய் பழந்-
தமிழ் மகள் பாடுனக்குப் பதைப்பில்லையோ
மூன்று அரசரும் முன் வளர்த்து வந்தார்
முனிவரும் அறிஞரும் போற்றி வந்திட்டார்.

சங்கப்புலவர்களும் தழைக்க வைத்தார்
பண்புடன்
தமிழர் பெருமையுடன் வாழவும் செய்தார்
இங்கப் பெருமை ஒரு சிறிதும் இல்லை
இதனை உணர்த்த உனக்கொருவரில்லை
மங்கும் பெருமை என்று யாரடி சொன்னாள்?
மனத்துக் கவலை இனி மாற்றுவை பெண்ணே
பொங்கும் தமிழ்ப் பெருமை புவிமிசையே
புதிய அரசுமினிப் பூத்திட வைக்கும்.

என்ற மொழி எனக்கு அவள் தரவே
ஏனடி எனக்கிந்தப் பொய்யுரை என்றேன்
அன்று முனிவர்களும் அறைந்ததுண்டு
அறிஞர் பலரும் எமக்குரைத்ததுண்டு
இன்று எமக்குலகம் கூறுப கண்டாய்
ஈழத்தமிழருக்கு வாழ்வினி என்றே
சென்றென் செவியிலிது சேர்ந்திடுமுன்னே
சேர்ந்த உவகையில் நான் துள்ளி எழுந்தேன்.

கலாயினி. செ.
11 விஞ்ஞானம்

# கம்பளிச் சட்டை

பருப்புக்கறி, வெண்டைக்காய் குழம்பு, தயிர், ஊறுகாய், பப்படப்பொரியல் மிக எளிய உணவுதான். ஆனல் தங்கைக்கென்று மிகக் கவனமாய்த் தயாரித்திருந்த உணவில், அக்காவின் அன்பு, வெள்ளிடை மலைபோல் பிரகாசித்துக் கொண்டிருந்தது. சாப்பாட்டு அடுக்கில் அனைத்தையும் எடுத்து வைத்தபின் சுமதி கடிகாரத்தை எட்டிப்பார்த்தாள். பத்துமணிக்கு இன்னும் ஐந்து நிமிடங்கள் மாத்திரம் இருந்தன.

பாடசாலையில் உயர்தர வகுப்பில் படிக்கும் காந்திக்குச் சாப்பாடு எடுத்துப் போகவரும் தங்கம்மாப்பாட்டி பத்துநிமிடங்கள் முந்திவருவாளே. ஏன் இன்று ஐந்து நிமிடங்கள் தாமதம்? இவ்வளவு நாட்களும் இப்படி நடந்ததில்லையே. சாப்பாடு அனுப்பியதும், அலுவலகத்திற்குப் புறப்பட வேண்டும் என்று சிந்தித்தவாறு பாட்டியின் வருகையை எதிர்பார்த்துக் கதவைத்திறந்த சுமதியின் முகத்தில் குளிர் காற்று ‘சில்’லென்று மோதிற்று. கண்டியில் மார்கழி மாதக் குளிர். கம்பளியால் போர்த்துக்கொண்டு படுத்துத் தூங்கினல் மிக ஆனந்தமாக இருக்கும். ஆனல் மழையிலும், பனியிலும் நனைந்து, தமது ஒரு சாண் வயிற்றுக்காக உழைக்கவேண்டியிருக்கும் தங்கம்மாப்பாட்டி போன்ற ஏழைகளுக்கு!.....

தூரத்தில் வந்துகொண்டிருந்தாள் பாட்டி. முதிய மெலிந்த உருவம். தள்ளாடிச்சோர்ந்த நடை. வழக்கத்தைவிட அவள் அதிகமாகத் தளர்ந்திருப்பதாகச் சுமதிக்குத் தோன்றியது. பாட்டியும் மிகத் தள்ளாடிய நடையில், சுமதியை அணுகினள். ஏன் பாட்டி சுகமில்லையா, என்று மிகப்பரிவுடன் கேட்டாள். ஆமாம் பிள்ளே. ராத்திரியெல்லாம் குளிர் தாங்க முடியல்லே. உடம்புவலி; காய்ச்சலிருக்குமோ, என்னமோ.........

சுமதி தொட்டுப் பார்த்தாள். உடம்பு சுடுவதுபோல் தோன்றிற்று. உடனே அறையினுள் நுழைந்தவள், உடல் வெப்பமானியுடன் வெளியே வந்து, பாட்டி வாயைத்திறந்து நாக்கை மேலே உயர்த்துங்கள் என்று கூறியவாறு வெப்பமானியைப் பாட்டியின் வாயினுள் நுழைத்து, வாயை மூடும்படி கூறினள். சிறிது நேரத்தின்பின் வெப்பமானியை எடுத்து நோக்கினள். பாட்டியின் உடல் வெப்பநிலை நூற்றொன்றில் இருக்கிறது, ‘இருபாட்டி வருகிறேன்’, என்றுகூறிச் சமையலறையுள் விரைந்த சுமதி, சுடச்சுடக்காப்பியும், ஒரு பனடோல் குளிசையும் எடுத்து வந்து கொடுத்தாள்.

ஏனே தெரியவில்லை: இம்மூதாட்டிக்கும் சுமதிக்குமிடையே சிறந்ததொரு பாசப் பிணைப்பு உருவாகியிருந்தது. வயதிலே, பண்பிலே, குடிப்பிறப்பிலே வித்தியாசமிருந்தபோதிலும், பலநாட்களாகத் தம்மிடையேயுள்ள பாசப்பிணைப்பினல், மனம் விட்டு உரையாடியதுண்டு. கிழவி ஆவலுடன் காப்பியருந்துவதைக் கண்டு, சுமதியின் உள்ளம் உருகிற்று. பாட்டிக்கு உதவிசெய்யவேண்டும் என்ற ஆவல் உந்த, அவள் மீண்டும் உள்ளறைக்குள் சென்ருள்.

அங்கு, அவள் பொக்கிஷம்போல் பாதுகாத்து வந்ததொரு பொருள் இருந்தது. கரும் பச்சைவர்ணக் கம்பளிச்சட்டை அது. அச் சட்டையை அவள் விலைமதிப்புள்

ளதாகவே கருதி வந்தாள். அச் சட்டையைப் பார்க்கும் பொழுதெல்லாம், அதைக் கிறிஸ்மஸ் பரிசாகக்கொடுத்தவரின், அன்பு அவள் உள்ளத்துக்குச் சாந்தியையும், ஆறுதலையும் அளிக்கத்தவறியதில்லை. ஆனால், இன்று தன்னுடைய ஆசையைவிட அக்கிழவியின் தேவை பெரிதென்று உணர்ந்தாள். அன்று காலை சுமதி வாசித்த வேதாகமப் பகுதி அவள் சிந்தனையைத் தூண்டியது.

''பசியாய் இருந்தேன் எனக்குப் போஜனங் கொடுத்தீர்கள்; வஸ்திரமில்லா திருந்தேன் வஸ்திரம் கொடுத்தீர்கள், சிறியவராகிய என் சகோதரராகிய இவர் களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்'' என்ற பகுதி அவள் மனதில் தோன்றியது. கம்பளிச்சட்டையை எடுத்து வந்து பாட்டியிடம் கொடுத்தாள் சுமதி.

சுமதியிடம் இருந்து அதைப் பெற்றுக்கொண்டபோது, கிழவியின் கரங்கள் மேலும் நடுங்கின. உணர்ச்சியால் கண்களிலிருந்து நீர் துளித்தது. 'என் ராஜாத்தி, நீ நல்லாயிருக்கணும். உன் மனசுக்கேத்த மகாராஜன் சீக்கிரமே வரணும்' என்று வாயார வாழ்த்தினாள். கம்பளிச்சட்டையை அணிந்து கொண்டவள் அது அளித்த கதகதப்பில், சற்றே மிடுக்காகக் கையில் சாப்பாட்டுப் பாத்திரத்துடன் நடப்ப தைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள் சுமதி. அவள் வாழ்த்துரை இன்னும் சுமதி காதிலே ஒலிந்தது. அந்த மகாராஜன் மனமுவந்து அளித்த பரிசுதான் கம்பளிச் சட்டை.

சுமதியின் மனதில் நினைவலைகள் மோதத்தொடங்கின. சீரிலும் செல்வச் சிறப் பிலும் அன்புப் பெற்றோரின் அணைப்பிலும் கழிந்த இளம் பராயத்து இனிமை அவள் மனதில் தோன்றியது. யாழ்ப்பாணத்திலேயே பெரும் வணிகரான அவள் தந்தை, செல்லத்துரையின் ஈகை. பெருந்தன்மை, தயாளகுணம், தாய் மனோன்ம ணியின் கனிவான பேச்சு, கருணையுள்ளம், கிறிஸ்தவ பக்தி, தங்கை சாந்திக்குட்டி யின் சுட்டித்தனம், சாமர்த்தியம் ... ...

இத்தகைய இன்பச் சூழ்நிலையில், ஒருநாள் துன்பப்புயல்ஆன சூறாவளி அவர் கள் வாழ்க்கைப்படகைத் தாக்கியது. வியாபாரம் திடீரென நொடிந்து போனதால், மனமுடைந்து மரித்தார் செல்லத்துரை. பிள்ளைகள் இருவரையும் தவிக்கவிட்டுத் தாய் மனோன்மணியும் கணவனைப் பின்தொடர்ந்து செல்லத் தாமதிக்கவில்லை. படகை ஓட்டுபவன் இல்லாமல் படகு நடுக்கடலில் தத்தளிப்பது போன்று, அவர் கள் இருவரது படகுகளும் அலைமோதும் நடுக்கடலில் தத்தளித்தன. சுமதியும், சாந்தியும் யாருமற்ற அனாதைகள் ஆனபோது, அவர்களைப் பாதுகாக்கும் பொ றுப்பு கண்டியில் வசிக்கும் அவர்கள் மாமா சத்தியநாதன் மீது விழுந்தது. சிறுமி களை வீட்டுக்கு அழைத்துச் செல்ல அவர் அரை மனதுடன் தான் வந்தார். பாவம், அவரைக் குறைசொல்லிப் பயன் இல்லை. அவர் நல்லவர்; அவர் வாயில்லாப் பூச் சியாக்கப்பட்டார், இல்லாள் அன்பம்மாளின் கொடுமைப் பிடிவாதத்தினாலும், கண்டிப்பினாலும் என்றே கூறலாம். அவள் பெயர்தான் அன்பு; மனமோ இரும்பு. பெற்றோரை இழந்து தவிக்கும் பிள்ளைகளைக்கண்டு, மனம் உருகுவதற்குப் பதில், அவள் எரிமலையெனச் சீறி வெடித்தாள். ''தண்டச்சோறு, தரித்திரச் சனியன்'' என்று வாய்க்கு வந்தபடி திட்டினாள். வீட்டுவேலைக்காரியை நிறுத்திவிட்டு, வேலை அனைத்தையும், சிறுமிகள் தலைமீது சுமத்தினாள். வேலை செய்வதறியாது இருந்த கரங்கள், காய்த்துப் போயின.

என்ன செய்வார் சத்தியநாதன்? பாவம்; அன்பம்மாளை அதட்டியடக்கும் திறன் அவருக்குஇல்லை. இரவு வேளையில் அன்பம்மாள் குறட்டை ஒலி, வீட்டையே உலுக்கிக் குலுக்கும்போது, சமயலறையில் இன்னமும் பாத்திரங்களைக் கழுவிக் கொண்டிருக்கும் சுமதியையும், பாதிவயிறு தான் நிரம்பிய நிலையில், மிச்ச உணவு ஏதேனுமுண்டோ என்று ஆராய்ந்து கொண்டிருக்கும் சாந்தியையும், தைரியமாய்த் தேடி வருவார் சத்தியநாதன். தனது சட்டைப்பையினுள் மறைத்து வைத்திருக்கும் கடலை, மிட்டாய்களைக் கொடுத்துவிட்டுக் கன்னத்தையும் வருடி விட்டு மறைவார். தங்கையின் செல்வங்களுக்கு அவர் காட்டக்கூடிய பரிவு இவ்வளவு தான். தங்கள் நிலையைவிட, அவர் கதிபேலும் பரிதாபம் என்று நினைத்து வேதனைப்படுவாள் சுமதி.

இந்நிலைக்கும் ஒரு திருப்பம் வந்தது. அன்பம்மாள், சத்தியநாதன் தம்பதிகளின் ஒரேயொரு மகன், கருணாகரன் பேராதனை வளாகத்தில் வைத்தியக் கல்லூரியில் கல்வி கற்று வந்தவன் விடுமுறைக்கு வீட்டுக்கு வந்தான். சேற்றில் செந்தாமரையாக, சிப்பியில் முத்தாக அன்பம்மாளுக்கு உதித்திருந்தவன். அவன் இனிய இயல்பும், வசீகரத் தோற்றமும் உடைய அவன், உயர்ந்த சிந்தனைகளும், உன்னத இலட்சியமும் உடையவன். அவனுக்கு மாமா செல்லத்துரையிலும், அத்தை மனோன்மணியிலும் மட்டில்லா மதிப்பு.

ஒரு தடவை அவன் கோடை விடுமுறையில் அத்தை வீட்டுக்கு யாழ்ப்பாணம் வந்தபோது, அவன் சாந்தியை உப்புமூட்டை தூக்கி விளையாடியதும், சுமதியுடன் ஊஞ்சலாடிக் கழித்ததும், இப்பொழுது அவன் நினைவுக்கு வந்தது. இரு தரப்புப் பெற்றோரும் சுமதியையும், தன்னையும் சேர்த்துப் பொருத்தமான ஜோடி என்று பேசி மகிழ்ந்ததையும் அவன் நினைத்துக் கொண்டான். ஏன் இந்த அன்பம்மாள் கூட, ''என் மருமகள் சுமதி கெட்டிக்காரத் தங்கம்'' என்று பசப்பியதையும் அவன் மறக்கவில்லை. இப்போது காலம் மாறிவிட்டது. சுமதி வறுமையின் கொடுமையில் தவிக்கும்போது, மருமகளாவது, மண்ணாங்கட்டியாவது?

சுமதியையும். சாந்தியையும் அவனுக்கு முதலில் அடையாளமே தெரியவில்லை. சிட்டுக்குருவிபோல் குதித்துத் திரிந்த சாந்திக்குட்டியா இப்படிச் சோகத்தின் வடிவாய்க் காட்சியளிக்கிறாள்? ரோசாப்பட்டுப் பூவாடையில். வண்ண ரோசாப்பூப்போல் சிவந்த நிறத்தில் திகழ்ந்த சுமதியா, இப்படிக் கந்தையணிந்து. கறுத்து மெலிந்து உருமாறித் தனது தாயின் அடிமைப் பெண்ணாய் இருந்து குற்றேவல் செய்கின்றாள்? ஒரு கணம் சிந்தித்தான் ... ......

கருணாகரன் ஒரு முடிவுக்கு வந்து விட்டான். பட்டப்படிப்பு முடிந்து வேலை பெற்றதும், சுமதியையே தன் துணைவியாகக் கொள்வது. சுமதிக்கோ கருணாகரனின் வருகை பாலைவன மத்தியில் கண்ட பசுஞ்சோலையாகத் தோன்றிற்கு அவள் புகுமுக வகுப்புவரை கற்றிருந்ததால், ஆங்கில நாவல்கள் வாங்கி வந்து கொடுப்பான். அவள் குறைநிறைகளையெல்லாம் அவளுடன் கலந்தாராய்வான். மனதை மகிழ்விக்கும் அணிமணிகள், அழகு சாதனங்களை அவளுக்காக வாங்கிவந்து அன்புடன் அளிப்பான். நடுங்கும் பனிக்காலத்திலும் சுமதி ஐந்து மணிக்கு எழுந்து. அடுப்பு மூட்டுவதைக் கண்டவன், அந்த ஆண்டு கிறிஸ்மஸ் பரிசாகத் கரும்பச்சை வர்ணக் கம்பளிச் சட்டையொன்றை உவந்தளித்தான்.

பையனின் போக்கு சரியில்லை என்று கண்டு கொண்டாள் அன்பம்மாள். இதை முளையிலே கிள்ளியெறிந்து விடத்திட்டமிட்டாள். கண்டி மக்கள் வங்கி மனேஜர் இராஜரத்தினத்தின் ஒரே மகள். பெயர் பிரேமா. பெயருக்கேற்ற அழகு மூன்றரை இலட்சம் சொத்து அவளுடையது அத்துடன் லட்சம் நன்கொடையாகவும் பெற லாம் என்று திட்டமிட்டாள் அன்பம்மாள். அவளைத் தன்வீட்டுக்கு அடிக்கடி அழைப் பதும், விருந்தளிப்பதும் கருணாகரனுக்குப் பிடிக்கவில்லை.

''அம்மா, அந்த பிரேமாவை என் தலையில் கட்டத்திட்டமிடவேண்டாம்'' என்று சீறினன் திடீரென்று. ஏனடா? அவளுக்கென்ன குறை? அழகு இல்லையா? பணமில்லையா?, படிப்பில்லையா? அவள் பியானோ வாசித்தால் பிரமாதமாய் இருக் கும் என்று அடுக்கிக் கொண்டேபோனுள் அன்பம்மாள்.

ஆகா! பிரமாதம்! கண்ட கண்ட பையன்களோடு 'பீச்சுக்கும்', 'பிக்னிக்'குக் கும் போவது பிரமாதம். கருணாகரன் தொனியில் ஏளனம் தொனித்தது- அது சரி அவள் எப்படியோ போகட்டும். அவன் முகம் கெஞ்சும் பாவனையில் தாயை ஏறிட் டுப் பார்த்தான். ஏனம்மா, நான் கலியாணம் செய்து கொள்ளத்தான் வேண்டுமா? வேண்டுமென்றால், ..... ... ஏன் சுமதியில்லையா? சுமதியின் பெயரைக் கேட்டதும், குய்யோ, முறையோ என்று ஓலமிட்டாள். அவள் போட்ட கூச்சலில் கருணாகரன் மனம் கசந்துபோனுன். விடுமுறை நாட்களைக் கத்தரித்துக் கொண்டு வளாக விடு திக்கே சென்றுவிட்டான்.

அவன் சென்றபின் அன்பம்மாள் தன் கோபத்தையெல்லாம் ஒன்று கூட்டி, சுமதி மீது காட்டினுள். ஓயாமல் பேசுவாள். அவளைக் கடிந்துரைத்தபோது. அவள் இதயமும் இடிந்தது செல்வக்குடும்பத்தில் வசிக்கும் கருணாகரனுக்குத் தன்னைப் போன்ற ஏழைகள் எம்மாத்திரம் என்று நினைத்துக் கவலைப்படுவாள் சுமதி. அப் போது, தங்கை சாந்தி அழுதுகொண்டு அவளிடம் வந்தாள். ''அத்தை ஓயாமல் திட்டிக்கொண்டே இருக்கிறார். நாங்கள் இங்கிருக்க முடியாது அக்கா எங்கேயாவது போய்விடலாம் என்று கெஞ்சினுள். எங்கே சென்றாலும் இம்மானுவேல் என்னும் இயேசு இரட்சகர் தங்களுடனே கூட இருப்பார் என்ற நம்பிக்கையில், வீட்டை விட்டு வெளியேறத் திட்டமிட்டாள். அவசரத்தேவைகளுக்கென்று மைத்துணன் கருணா கரன் அவளிடம் வற்புறுத்திக் கொடுத்த ரூபா இருபது அவள் கைவசம் இருந்தது.

சுமதியின் நம்பிக்கை வீண்போகவில்லை. கலங்கித் திகைக்கும் உள்ளத்துடன், அவ்விருவரும் வெளியுலகில் காலடியெடுத்து வைத்தபோது, கடவுள் அவர்களுடனே கூட இருந்து காரிருளில் தீபமாக அவர்களுக்கு வழிகாட்டினார்.

வெளிநாட்டிலிருந்து, சுவிசேடத்தை இலங்கையிலும் கூறுவதற்காக, இலங் கைக்கு வந்த பெண்மணி, செல்வி கட்சின்ஸ் அவர்களை இலங்கையிலே அறியாத மக்கள் இல்லையென்றே கூறுமளவுக்கு, இம்மாதம் பத்தாம் திகதியே அவர் இலங் கைக்கு வந்த, ஐம்பது ஆண்டு முடிவுவிழா கிளிநொச்சியில் கொண்டாடுகின்றார். அவ்வம்மையார் அந்நாட்களில் ஏதோ அலுவலாகக் கண்டி சென்றிருந்தார். அம் மையார் கடவுள் சித்தப்படி இவ்விரு சகோதரிகளையும் சந்தித்தார். ஏழை, எளிய வர்களுக்கே உதவி செய்வதும், தாய் தகப்பனற்ற அநாதைகளைத்தானே எடுத்துப் பராமரிப்பதும் அவருடைய சேவையாகும். சகோதரிகளுடைய சோகக் கதையைக் கேட்ட அம்மையார் அவர்களைத் தன்னுடன் அழைத்துச் சென்று சுமதிக்குத் தட் டெழுத்து, சுருக்கெழுத்து என்பனவற்றில் பயிற்சி அழித்ததுமன்றி, சாந்தி தன் படிப்பைத் தொடரவும் வழிசெய்தார். படிப்பு முடிந்ததும், கொழும்பில் இலங்கை

ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அலுவலகத்தில் சுமதிக்கு வேலை கிடைத்தது: காலி வீதியிலுள்ள, பெரியமாடி வீட்டில் மூன்ருவது மாடியில், ஓர் சிறிய அறையில், சகோதரிகளுடைய வாழ்க்கை அமைதியாகக் கழிந்தது கொண்டிருந்தது.

நினைவுகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட சுமதி, அவசரம் அவசரமாய் உடுப்பை மாட்டினுள். அலுவலகத்திற்கு நேரமாகி விட்டதே!

தங்கம்மாப்பாட்டி தன்னுல் இயன்றவரை வேகமாய் நடந்தாள். ஆனுல், வேதனை மேலிடக் கால்கள் தள்ளாடச் சாப்பாட்டுப்பாத்திரத்தை இறுகப்பிடித்துக்கொண்டு மிஷனரிமாரின் ஆஸ்பத்திரிக் கட்டிடத்தின் முன் மயங்கி விழுந்தாள். பணியாட்கள் அவளை உள்ளே கொண்டுபோய்க் கட்டிலில் கிடத்தியபோது, அவளைப் பரிசோதிக்க வந்தார் ஒரு இளம் டாக்டர். 'ஸ்டெதெஸ்கோப்' புடன் அவளருகே குனிந்தவரின் கண்கள் திடீரென நிலைகுலைந்து நின்றன. கம்பளிச் சட்டையின் பொத்தானை அகற்றிக் கழுத்துப் பக்கத்தைத் திருப்பிப் பார்த்தபோது, அவர் கைவிரல்கள் நடுங்கின. அங்கே பொறிக்கப்பட்டிருந்த பெயர் அவர் உள்ளத்தில் நீங்காத கீதமாய் ரீங்காரம் செய்துகொண்டிருந்தது. கரும்பச்சைக் கம்பளிச் சட்டைமேல் தைக்கப்பட்டிருந்த, மஞ்சள் நிறப்பூக்கள், அவர் மனம் கவர்ந்தவரின் கைவண்ணமாயிற்றே. பாட்டியின் மயக்கம் தெளிந்ததும். டாக்டர் தன் படபடப்பை ஒருவாறு அடக்கிக்கொண்டு, அவளிடம் சகல விடயங்களையும் கேட்டு அறிந்து, கம்பளிச் சட்டையின் விபரத்தையும் பெற்றுக் கொண்டார். கண்களில் பிரகாசமும், புத்துணர்வும் இடம்பெற்றன. அடுத்த பத்து நிமிடங்களுள் நீலவர்ணமும் ஏழு ஸ்ரீ இலக்கமும் கொண்ட மோட்டார் கார் ஒன்று சுமதியின் வீட்டின் முன் நின்றது.

அவரைக் கண்டதும் சுமதி வாயடைத்து நின்ருள். சுமதியை எங்கு காண்பேன் என்று தவித்த கருணுகரன் உள்ளம் ஆண்டவா தோத்திரம், தோத்திரம் என்று பிரார்த்தித்தது. இடைக்காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைச் சுமதிக்குக் கூறினுன்.

பிரிந்தவர் கூடினுற் பேசவும் வேண்டுமா? சுமதியின் பிரிவின் பின், விடுமுறை நாட்களில் வீட்டுக்கு வருவதை நிறுத்திக்கொண்டார் கருணுகரன். மக்கள் வங்கி மனேஜர் மகள் பிரேமாவும், ஹிப்பிகள் கூட்டத்துடன் சேர்ந்து ஓடிய பின்தான், அன்பம்மாளுக்கு ஞானேதயம் உண்டாகியது. அன்பம்மாள் நோய்வாய்ப்பட்டுப் படுத்தபடுக்கையானுள். ஒருவாய் தண்ணீர் தர ஆளின்றித் தவித்தாள். அவளுக்குப் பணிசெய்ய வந்தவர்களின் திருட்டுப் புரட்டுக்களையும், அட்டகாச அதட்டல்களையும் தாங்கமுடியாமல் திணறியபோது தான் சுமதியின் அன்பும், பொறுமையும், அடக்கமும் அவள் கண்முன் தோன்றின. நற்குணப்பெண்ணைத்தான் வருத்தியதை எண்ணி மனம் வருந்தினுள். ஆண்டவரிடம் மன்னிப்புக்கேட்டாள். சுமதியைத் திரும்பக் கூட்டிக்கொண்டு வருவார் இல்லையா? அவளை இந்த வீட்டு எஜமானி ஆக்கி விடுகிறேன்; என்று புலம்பத் தொடங்கினுள்.

திடீரென நடந்து முடிந்தது திருமணம். மணமகனையும், மணமகளையும் பெரியோர்கள் வாழ்த்தினர். இன்னிசை முழங்கியது; தங்கம்மாப் பாட்டியின் வாழ்த்தொலியை நினைத்து சந்தோஷப்பட்டாள் சுமதி. ஆனுல், தங்கம்மாப்பாட்டி இவ்விடத்தில் இல்லையே என்று எண்ணித்துக்கப்பட்டாள். டாக்டர் கருணுகரன் விலையுயர்ந்த பட்டாடைகளைச் சுமதிக்கு வாங்கி வழங்கினுர். அவை அந்தக் கம்பளிச் சட்டைக்கு நிகராகுமா?

ப. அற்புதராஜா
12. விஞ்ஞானம்.

சிறு கதை

# கடமை

ரெலிபோன் மணி அலறியது ; அதே நேரம் சுவர்க்கடிகாரம் நள்ளிரவு ஒரு மணி என்பதையும் தெரிவித்து விடைபெற்றுக்கொண்டது. தனது கடமையில் இருந்து வந்த ராஜன் அப்போதுதான் படுக்கையில் சாய்ந்து கண்ணயர்ந்தான் ஆனால் ரெலிபோன் மணியின் ஓயாத அலறலால் விழித்துக் கொண்ட பொலிஸ் அதிகாரி ராஜன் கட்டிலில் இருந்தபடியே 'றிசீவரை' எடுத்தார். மறுமுனையில் ஒரு குரல்... அதுவும் அந்த நேரத்தில் ஒரு பெண்ணின் குரல் – பதட்டத்துடன் பேசியது. அப்பெண் தனது வீட்டில் கொலை ஒன்று நடந்திருப்பதையும் தனது வீட்டு விலாசத்தையும் குறிப்பிட்டு விட்டுப் பட்டென 'ரெலிபோனை' வைத்து விட்டாள். சிந்திப்பதற்கு இது நேரமில்லை என்பதை உணர்ந்த ராஜன், தனது கைக்கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்துவிட்டு, உடனடியாக உடையை மாற்றிக் கொண்டு மோட்டார் சைக்கிளில், குறிப்பிட்ட அந்த இடத்துக்கு விரைந்தார். மோட்டார் சைக்கிள் இருளைக் கிழித்துக்கொண்டு பறந்தது.

வயது ஐம்பதை தாண்டிவிட்ட போதிலும் தளராத உடலும், மன உறுதியும் கொண்டவர் ராஜன். கடமையில் கண்ணியமும் கட்டுப்பாடும் உள்ள ராஜன் தனது நாற்பத்தைந்தாவது வயதிலேயே, தனது அருமை மனைவியைக் காலனிடம் பறிகொடுத்துவிட்டுத் தனது ஒரே மகளான 'தீபா'வை நல்ல இடத்தில் மணம் முடித்து வைத்துவிட்டு, மனைவியுடன் தான்' சுழித்த காலங்களின் நினைவுகளுடன் வாழ்த்து கொண்டிருப்பவர். கடமையில் கண்ணியம் உள்ள இவரது பெயருக்குப் பொலிஸ் இலாக்காவில் மட்டுமல்ல, எங்குமே ஒரு தனிமதிப்பும் மரியாதையும் இருந்து வந்தது.

யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்பை நோக்கிப் புறப்பட்டு வவுனியா பிரதான வீதியில் ஓடிக்கொண்டிருந்தது அந்த கடுகதி பஸ்வண்டி. தூங்கி விழுந்து கொண்டிருந்த வயதானவர்களும், சனநெருசலினுள் கண்களால் மட்டும் கதைகள் பேசிக் கொண்டிருந்த இளந் தம்பதிகள் சிலரும், பெறுமதி உள்ள பொருட்களை பஸ் வண்டியினுள் வைத்திருப்பதால் திருடர் பயம் பிடித்துக் கோழித்தூக்கம் தானும் தூங்க முடியாமல் மிரள மிரள விழித்திருந்த பலரும் அந்த கடுகதி பஸ் வண்டியுள் இருந்தனர். சாரதி பொன்னம்பலம் பழக்கமும், வழக்கமுமாகி விட்ட தனது கடமையைத் தூங்கி விழாமல் திறமையாகச் செய்து கொண்டிருந்தார். தூக்கம் நிரம்பிய கண்களுடன் அவருக்கு அருகில் மின்கலப் பெட்டிமீது அமர்ந்து கொண்டு பாதையையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தார், நடத்துநர் தியாகு:

அந்த வண்டியைக் கடந்து சென்றது அசுர வேகத்தில் வந்த ராஜனின் மோட்டார் சைக்கிள். பாதையில் கவனத்தை வைத்திருந்த சாரதி பொன்னம் பலத்தினதும், நடத்துநர் தியாகுவினதும், மற்றும் சில பிரயாணிகளதும் பார்வை அந்த மோட்டார் சைக்கிலிற் சென்ற மனிதரின் மேலே பதிந்தது. சிட்டாய்ப் பறந்துபோன அம்மோட்டார் பட்டென அனைவர் பார்வையில் இருந்தும் மறைந்து

போய்க்கொண்டிருந்தது. மோட்டார் சைக்கிள் அந்த வண்டியைக் கடந்து போய்ச் சிலமணி நேரங்ககளுக்குப் பின் காட்டுப்பாதை வழியே போய்க்கொண்டிருந்த போது. திடீர்எனப் பஸ்வண்டிக்கு முன்னால் ஒரு உருவம் கைநீட்டியபடி நின்று கொண்டிருந்தது. அந்த உருவம்... சில விநாடிகளுக்குமுன் பறந்து சென்ற மோட்டார் சைக்கிளில் இருந்த அந்த மனிதரின் உருவம்தான். இருளில் அவர்சள் சரியாக அந்த மனிதரை மட்டிடாவிட்டாலும், தடித்த அவர் உருவும் அவர் அணிந்திருந்த தொப்பியும் சாட்சியம் கூறின. இவ்எண்ணங்கள் யாவும் எண்ணி முடிவதற்குள் ஒருகண நேரம்கூட இருக்காது, மூன்று அடிதள்ளி நின்ற அந்த மனிதரை, வேகமாக வந்த அக்கடுகதி வண்டி முட்டி மோதியது போன்ற ஓர் பிரமை அனைவருக்கும் ஏற்பட்டது. அடுத்து ஓர் அவலக்குரல் வேகமாக வந்த கடுகதி பஸ்ஸை நிறுத்த, உடன் நிறுத்திகள் கையாளப்பட்டன இதன் விளைவாக, தூங்கி விழுந்து கொண்டிருந்த பிரயாணிகள் உசாராகினர். முண்டியடித்துக் கொண்டு இறங்கிய சாரதியும் நடத்துநரும் சில பிரயாணிகளும் விபத்து ஒன்றுதான் நடந்துவிட்டது என்ற எண்ணத்தில் பாதையைப் பார்வையிட்டபோது அங்கு விபத்தோ, அன்றி வேறு எந்தவித அசம்பாவிதமோ நடைபெற்ற மாதிரியான அடையாளம் காணப்படவில்லை. பஸ் மோதிய அந்த உருவம்......

இன்ஸ்பெக்டர் ராஜனை வீடொன்றில் கொலை நடந்து விட்டதாக அழைத்ததே அந்தக் கொடிய விதிதான். பாய்ந்து சென்ற மோட்டார் சைக்கிளின்மீது, பாதை ஓரத்தில் நின்ற பிரமாண்டமான காட்டு மரம் ஒன்று சரிந்து விழுந்தது. அந்த மாம் அந்த நேரத்திலா விழவேண்டும்? தன்மீது மரம் விழுந்து உயிர் பிரியப்போகும் நேரத்திலும் ராஜனின் மனம் கடமையை நினைத்தது. பின்னால் வந்து கொண்டிருக்கும் அந்த பஸ் வண்டியைத் தடுத்து நிறுத்த வேண்டியது பொலிஸ் அதிகாரி ஆகிய தனது கடமை என்று நினைத்தார். அவரது கடமையும் முடிந்தது, உயிரும் உடலை விட்டுப் பிரிந்தது.

பாதையைப் பார்வையிட்டவர்களுக்கு அதிர்ச்சியும், ஆச்சரியமுமாக இருந்தது. காரணம் விபத்துக்கான அடையாளம் ஒன்றும் காணப்படாமையே. மூளையைக் குழப்பிக்கொண்ட அவர்கள் சிறிது தூரம் முன்னேறி நடந்தனர். அப்போது அவர்களது பார்வையில், பிரமாண்டமான மரம் ஒன்று பாதையின் குறுக்கே விழுந்து கிடந்தது தெரிந்தது. கண்கள் கூர்மையாகின. கால்கள் முன்னேறி நடந்தன. விழுந்து கிடந்த மரத்தின் அகலமான அடிப் பகுதிக்குள் அகப்பட்டு மோட்டார் சைக்கிளுடன் பிணமாகிக் கிடந்த ராஜன்மீது அனைவரது பார்வையும் பதிந்தது. அந்த உருவம் – அவர்களுக்கு பஸ் வண்டியின் முன்னே தெரிந்த அந்த மனித உருவம் – பாதையின் குறுக்கே நின்றிராவிட்டால் வேகமாக வந்த அந்த வண்டி விழுந்த மரத்துடன் மோதி அத்தனை உயிர்களும் பலியாகி இருக்குமல்லவா?

ஒரு கடமைக்காகப் போய்க்கொண்டிருந்த அந்த உருவம், அக் கடமையைச் செய்ய முடியாத பட்சத்திலும் வேறு ஒரு கடமையைச் செய்துவிட்ட களிப்பில் மறைந்து விட்டது. அது பொலிஸ் அதிகாரி ராஜனின் உருவம்தான் என்பதைக் கண்டுபிடிக்க அதிக நேரம் எடுக்கவில்லை.

செல்வி. ப. திலகா
*12 வர்த்தகப் பிரிவு.*

# ஒரு நாட்டின் பண நிரம்பலை, வணிக வங்கிகளுடாக மத்திய வங்கி எவ்வகையில் கட்டுப்படுத்துகிறது ?

நாம் வாழும் இன்றைய சமுதாயத்தில் பணம் ஒரு முக்கிய கருவியாக இருக்கின்றது எதை மக்கள் பணம் எனக் கருதுகின்றார்களோ, அதுவே பணமாகும். சாதாரணமாகப் பண நிரம்பல் என்று கூறும்போது நாட்டில் புழங்கப்படும் நோட்டுக்கள், நாணயங்கள் என்பனவற்றின் அளவைக் குறிக்கும். அதாவது, பணம் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ அமையலாம். பணத்தொகை அதிகரிக்கு மானல் மக்களின் வாங்கும் சக்தி அதிகரிக்கும். இச்சக்தியின் பொருள் உற்பத்தி, அதிகரிக்கும் விகிதத்திற்கு மேலாக அதிகரிக்கும் பொழுது நாட்டின் பணவீக்க நிலைமை ஏற்படும். இப் பணவீக்க நிலைமை பணத்தொகை அதிகரிப்பால் ஏற்படுகின்றது. பணவீக்க நிலைமையால் பல பிரச்சனைகள் தோன்றுகின்றன. எனவே, நாட்டின் நிதிக்கொள்கையைக் கட்டுப்படுத்தும் அவசியம் ஏற்படுகின்றது. இதன் காரணத்தால், மத்திய வங்கியானது கடன் கொள்கையை நிர்ணயித்தல், நாணயத் தாள்களை வெளியிடுதல், அரசாங்கத்தின் வங்கியாகச் செயற்படுதல், வங்கிகளின் வங்கியாகச் செயல்படுதல் போன்ற தமது கடமைகளைச் செய்வதன் மூலம் மறைமுகமாகவும் நேரடியாகவும் ஒரு நாட்டின் பணநிரம்பலைக் கட்டுப்படுத்துகின்றது.

மத்திய வங்கிகளின் அதிமுக்கிய கடமைகளுள் ஒன்று நாணயங்களை வெளியீடு செய்தலாகும். இவ் வெளியீடுகளைப் பல வங்கிகளிடம் விட முடியாது. இவ்வாறு, வெளியீடு செய்யாவிட்டால் பண நிரம்பலை நிர்ணயிக்க முடியாது. எனவே நாணயங்களை விநியோகித்தல் ஒரு கையில் அமையவேண்டும். இந்தப் பிரதான கடமையைச் செய்தல் மூலம் தனது அதிகாரத்தையும் சக்தியையும் பயன்படுத்தி மறைமுகமா நாட்டின் பண நிரம்பலைக் கட்டுப்படுத்துகிறது

மத்தியவங்கி கட்டுப்படுத்த எமக்கும் நடவடிக்கைகளுள் பிரதானமானது, கடன் கட்டுப்பாடாகும். வங்கிகள் கடன் கொடுக்கும்போது மக்களின் வாங்கும் சக்தி அதிகரிக்கும். ஆகையால், கடன் கொடுக்கும் தொகையை, நாட்டின் பொருள் உற்பத்திக்கு அமையக் கட்டுப்படுத்துவது அவசியமாகும். இவ்வாறு கட்டுப்படுத்த மூன்று ஆயுதங்களைப் பயன்படுத்திக் கட்டுப்படுத்தலாம். முதலாவது ஒதுக்கு விகிதத்தை மாற்றுவதுமூலம் பண நிரம்பலைக் கட்டுப்படுத்தும். அதாவது பணவீக்க காலங்களில் வங்கிகளின் வைப்புத்தொகையை அதிகரிக்கும்போது, மத்திய வங்கியில் வைத்திருக்கும் ஒதுக்கு விகிதத்தைக் கூட்டவேண்டும். என மத்திய வங்கி விதிக்கும். உதாரணமாக ஒரு வங்கியில் உள்ள பணத்தில் 10 வீதம் மத்திய வங்கியிடம் ஒதுக்க வேண்டுமென்பது பொதுவான கருத்து. மிகுதி 90 வீதம் கடனைக் கொடுக்கும். உள்ளதிலும் 10 மடங்கு கடனைக் கொடுக்கும்போது நாட்டின் பண நிரம்பல் கூடுகிறது. எனவே, பணத்தைக் கடன் கொடுக்கும் போது பணநிரம்பல் கூடுகிறது. கடன் கொடுக்கும் பணத்தைக் குறைக்க முன்னரிலும் 10 வீதம் ஒதுக்கத்தை மேலும் அதிகரிக்கவேண்டும். ஒதுக்கு விகிதத்தை அதிகரிக்க கடன் கொடுக்கும் பணத்தொகை குறையும். எனவே, நாட்டில் பணம் குறையும். நாட்டில் பணம் குறைவாக இருக்குமாயின் ஒதுக்கு விகிதத்தைக் குறைப்பதன் மூலம் பண நிரம்பலைக் கூட்டலாம். இவ்வாறு ஒதுக்கு விகிதத்தை மாற்றுவதன் மூலம் மத்திய வங்கி, வணிக வங்கிகளுடாகப் பணநிரம்பலைக் கட்டுப்படுத்துகின்றது.

திறந்த சந்தை நடவடிக்கைமூலம் பண நிரம்பலை மத்திய வங்கி கட்டுப் படுத்துகிறது. சந்தையில் சொத்துக்களை விற்றல் அல்லது வாங்கல், திறந்த சந்தை நடவடிக்கை எனப்படும். மத்தியவங்கி திறைசேரிகளை விற்கும். வணிக வங்கி வாங்கும். வணிக வங்கி இதற்காகக் காசோலைகளை எழுதிக் கொடுக்கும் மத்தியவங்கி காசோலைகளை வாங்கி வணிக வங்கியின் ஒதுக்கு விகிதத்திலிருந்து கழிக்கும் இத் தொகை குறைய, கடன் வழங்கும், கொடுக்கும் தொகை குறையும். உ—ம்: 100000 ரூபா வணிக வங்கி ஒதுக்கல் பணமாக இருந்தால், அதில் 1000 காசோலை கொடுக்கும்போது கழிவு செய்யப்படும் எனவே மிகுதி 90,000 ரூபா மட்டும் இருக்கும். எனவே, 90,000 ரூபா கடன் கொடுக்கும்போது முன்னையதை விடக் குறைவாக இருக்கும். மத்தியவங்கி திறைசேரிகளை விற்றல் மூலம் மட்டுமின்றி அவற்றை வாங்குவதன் மூலமும் வங்கிகளின் பணத்தொகை கூடுமாதலால், கடன் தொகையும் கூடும். எனவே பணத்தின் பெறுமதி குறைய விலை உயரும். இதனால் நாட்டின் பண நிரம்பல் குறையும். இவ்வாறு திறந்த சந்தை நடவடிக்கை மூலம் பண நிரம்பல் மத்திய வங்கி வணிக வங்கிகளுக்கூடாகக் கட்டுப்படுத்துகிறது.

கழிவு விகிதத்தை மாற்றுவதன் மூலம் பணத்தைக் குறைக்கலாம். அதாவது கடன் வாங்குபவர்களின் வட்டியில், மத்திய வங்கி தனது கழிவு விகிதத்தை உயர்த்திக் கடனை வர்த்தக வங்கிகளிடம் கொடுக்கும். வணிக வங்கி மக்களுக்குக் கடன் கொடுக்கும்போது கழிவு விகிதத்தை உயர்த்தும். உ—ம்: முன்பு 10 வீதம் கொடுத்தது, இப்போது 15 வீதம் ஆக உயர்த்தினால், கடன் வாங்கும் பணம் குறையும். இதனால் நாட்டில் பணம் குறையும். இந்த முறையில் பண நிரம்பலைக் கட்டுப்படுத்துகின்றது.

வங்கிகளின் திரவத்தன்மை ஒரு முக்கிய அம்சமாகும். மக்கள் பணம் கேட்ட போது உடனே கொடுத்துத் திரவத் தன்மையைப் பாதுகாக்க முடியாத சந்தர்ப்பத்தில், மத்திய வங்கியிடம் பணம் கேட்கும். இதனால் மத்திய வங்கி இறுதிக் கடன் கொடுக்கும் ஸ்தாபனமாக அமைவதுடன் அந்த வங்கியைத் தண்டிக்கும் முகமாகக் கூடிய வட்டி வீதத்தை விதிக்கும். இவ்வாறு, கூடிய வட்டி விதிப்பதன் மூலம் மத்திய வங்கி வங்கிகளை மறைமுகமாகக் கட்டுப்படுத்துகின்றது.

இவ்வாறு மறைமுகமாகக் கட்டுப்படுத்தும் பல காரணிகளுடன் நேரடியாகக் கட்டுப்படுத்தும் பல காரணிகள் உள. உ-ம்: சில நாணயங்களைச் செல்லாக் காசாக்குதல் மூலம் இறுதிக் கட்டுப்பாட்டைக் கையாண்டு பணநிரம்பலைக் கட்டுப் படுத்து இவ்வாறான கட்டுப்பாட்டை எல்லா நாடுகளிலும் காண முடியாது, இது மரபு வழியாக வந்த கட்டுப்பாடு, இதனைத் தொகைவாரியாக வந்த கட்டுப்பாடு என்றும் அழைப்பர். இக் கட்டுப்பாடு தற்போது கையாளப்படுவதில்லை. ஆனால், இப்போது பண்பு வாரியான முறைகளையே பண நிரம்பலைக் கட்டுப்படுத்தக் கையாளுகின்றனர். ஒரு நாட்டுக்குச் சில கடன்கள் அத்தியாவசியம். சில நாட்டிற்குக் கடன் அத்தியாவசியமில்லை எனவே, நாட்டின் வளர்ச்சிக்கு உதவியான முறையில் கடன் கோரினால், அதனை மத்திய வங்கி கொடுக்கும். இவ்வாறு தற்காலத்தில் பண்பு வாரியான கட்டுப்பாட்டைக் காணலாம்.

மேற்கூறியவற்றில் இருந்து, நிதிக்கொள்கையில், நிதி நிலைமையில் மத்திய வங்கி முதன்மை ஸ்தானத்தை வகித்துக்கொண்டு வருகிறது என்பதை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

சி. சிவகாந்தன்
11 வர்த்தகம்.

# தொழிற் கல்வி

கல்வி மக்களுக்கு இன்றியமையாதது. பற்பல பிறவிகளுள்ளேயும் மனிதப் பிறவியில் மாத்திரம்தான் கல்வியின் அறிவைப் பெருக்க முடியும். ''கல்வியறிவில்லாதவர் கண்ணில்லாதவர்க்குச் சமம்'' என்ற பொன் மொழியை மெய் மொழியாகக்கொண்டு ஏழை, செல்வந்தர், ஆண், பெண் என்ற பாகுபாடின்றி மக்களாய்ப் பிறந்த அனைவரும் கல்வியறிவைப் பெற முயலவேண்டும். கல்வியின் அவசியத்தை நன்குணர்ந்த நம் அரசாங்கம் நம் நாட்டில் இலவசக் கல்வித்திட்டத்தைப் புகுத்தியுள்ளது.

கல்வியறிவை ஏட்டின்மூலமும் தொழிலின்மூலமும் பெறலாம். புத்தகங்களைப் படித்து அவற்றின்மூலம் அறிவைப் பெருக்குவது ஏட்டுக் கல்வியாகும். தொழிற்கல்வியாவது பலபட்ட தொழில்களைப்பற்றிக் கல்வி கற்று அத்தொழில்களைச்செய்து பழகுவதாகும். உதாரணம்: தும்புத்தொழிலில் ஒரு தும்புத்தடியை எப்படிச் செய்வது எனப் படிக்கப்படுகின்றது. நம் நாட்டில் இவ்வளவு காலமும் ஏட்டுக்கல்வியே பயிற்றப்பட்டு வந்தது. இந்நிலை 1972ஆம் ஆண்டிற்குப் பின்பு முற்றாக மாற்றியமைக்கப்பட்டுத் தொழிற்கல்வி புகட்டப்பட்டு வருகின்றது. முன்பு மாணவர்கள் ஏட்டுக்கல்வியையே விரும்பிக் கற்றனர். தொழிற் கல்வி நாகரீகமற்றது என உதறித்தள்ளினர். ஏட்டுக்கல்வியைக் கற்று அரசாங்க உத்தியோகம் பெற்றுச் சுகமாக வாழ்க்கையை நடத்தி ஈற்றில் இளைப்பாற்றுச்சம்பளமும் பெற்று வாழ்வதே பெரும்பாலோரின் வழக்காருயிற்று. சனத்தொகை அசுரவேகத்தில் பரவி வரும் இக்காலத்தில் இந்நிலை ஏற்றதாகவில்லை.

இன்றைய குடியரசு நிலையில் நமது நாட்டில் ஒரு புதிய சகாப்தம் உதயமாகியுள்ளது. பாலர்வகுப்பு முதல் பல்கலைக்கழகம்வரை இலவசத் தொழிற்கல்வி புகட்டப்பட்டு வருகின்றது. முன்பிருந்த ஏட்டுக்கல்வியைக் கற்பதினுல் நம் நாட்டில் பல பிரச்சனைகள் தலைவிரித்துத் தாண்டவமாடுகின்றன. மாணவர் பலர் கல்லூரிப்படிப்பை முடித்துக் கொண்டு வேலை தேடி அலைகின்றனர். வேலையற்று வீதிவழியில் திரியும் அனைவரிலும் கணிசமானோர் ஏட்டுக்கல்விமூலம் க. பொ. த. உயர் தரம் படித்தவர்களேயாகும். இவர்கள் பெரும்பாலும் ''வெள்ளை அங்கி அணிந்த அரசாங்க உத்தியோகத்தை விரும்புகின்றனர்'' ''கோழி மேய்த்தாலும் கோறணமேந்தில்'' என்பது நாட்டுப்பேச்சாகும். இதன்

படி க. பொ. த. உயர்வகுப்புப் படித்த மாணவன் ஒருவன் கமத்தொழில் மேற்கொண்டால் அவனைச் சமுதாயம் பரிதாபக்கண்கொண்டு நோக்கு கின்றது. அவனுக்குச் சமுதாயத்தில் மதிப்பில்லை. ஆகவே, ஏட்டுக் கல்வியால் வரும் பயனை ஒரு சிலர் மாத்திரமே அனுபவிக்கின்றனர். ஆனால், தொழிற்கல்வி கற்ற அனைவரும் பயன் அடைகின்றனர்.

அமெரிக்கா, யப்பான், ரூஷியா முதலிய நாடுகளில் தொழிற்கல்வி கற்பிக்கப்பட்டு வருவதனால்தான் அந்நாட்டில் வேலையில்லாத்திண்டாட்டம் ஓரளவு குறைந்திருக்கின்றது. இதேபோல் நம்நாட்டிலும் தொழிற் கல்வி புகுத்தப்பட்டதன்நோக்கம் ஏட்டுக்கல்வி முறையால் வேலையற்று வீதி வழியில் திரியும் மாணவர் சமுதாயத்தைப்போன்று வரும் காலச் சந்ததியினரும் வேலையற்று வீதியில் அலையக்கூடாது என்ற ஒரே நோக் கத்துக்காகவும், வேலைவாய்ப்பை எல்லோரும் பெறுவதற்காகவும் நமது நாட்டில் தொழிற்கல்வி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. பள்ளிப்படிப்பை முடித்ததும் மாணவர்கள் தாம் பெற்ற கல்வியைக் கொண்டு கமத்தொழிலோ அல்லது கைத்தொழிலோ செய்யக்கூடிய வாய்ப்பு இத்தொழிற்கல்வி முறையில் ஒவ்வொருவரும் பெற்றுத் தங்கள் வேலையில்லாப் பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ளக் கூடியதாக இருக் கின்றது.

ஏட்டுக் கல்வியில் சரித்திரம் சம்பந்தமான விடயங்களையும், விஞ் ஞான சம்பந்தமான விடயங்களையும் நாம் படிக்கக்கூடியதாக இருக்கின் றது. ஆனால், நாம் தொழிற்கல்வியைக் கற்பதனால் ''வெள்ளை அங்கி அணிந்த உத்தியோகம் கிடைக்காவிட்டாலும் கைத்தொழிலோ, கமத் தொழிலோ செய்து எம் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கலாம். இந்தத் தொழிற்கல்வி நமது நாட்டில் தொடர்ந்து நடைபெற்றால் நம் நாட்டில் வரும் காலத்தில் வேலையற்றோர் என்ற வர்க்கமே முற்றாக ஒழிந்துவிடும், வேலையில்லாப் பிரச்சனைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விடும். நாடு சுபிட்சமடையும் நம் நாடு பொருளாதாரத்துறையில் மேம் பட்ட நாடுகளுள் ஒன்றாகக் கணிக்கப்படலாம். நாமும் எமது தொழிற் கல்வியால் பெற்ற கைத்தொழிற் பொருட்களை வேறு நாடுகளுக்கு ஏற்று மதி செய்து மற்றைய நாடுகளைப்போல தன்நிறைவுபெற்ற பெரிய அபி விருத்தி நாடாகத் திகழலாம் என்பது வெள்ளிடைமலையாகும்.

தி. அலெக்ஸ்லம்பேட்
க. பொ. த. உயர்தர வகுப்பு
கலை 11B

# சுதந்திர வர்த்தக வலயம்

ந. பேரின்பநாதன்
உதவி விரிவுரையாளர்
இலங்கைப் பல்கலைக் கழகம்
பொருளியல் துறை
யாழ் வளாகம்.

1976 ம் ஆண்டுப் பொதுத் தேர்தல் கூட்டங்களில் அரசியல் கட்சிகளினால் மக்கள் முன் வைக்கப்பட்ட அரசியல் விஞ்ஞாபனங்களில் சுதந்திர வர்த்தக வலயம் என்பதும் ஒன்றாகும். பொதுத் தேர்தலின்பின் சுதந்திர வர்த்தக வலயம் என்ற சொல்லானது நாட்டின் பல பாகங்களிலும் வாழ்கின்ற சாதாரண மக்கள் மத்தியிலும் அடிபட்டது. எனினும் சுதந்திர வர்த்தக வலயம் பற்றிப் பல ராலும் பலவிதமாகப் பேசப்பட்டது; சுதந்திர வர்த்தக வலயம் பற்றிய தெளிவான விளக்கமின்மையே இதற்குக் காரணம். இக் கட்டுரையானது, சுதந்திர வர்த்தக வலயம் என்றால் என்ன? சுதந்திர வர்த்தக வலயம் அமைவதற்கான தகுந்த சூழ்நிலைகள் யாவை? சுதந்திர வர்த்தக வலயத்தினை அமைப்பதனால் ஒரு நாடு பெறக்கூடிய நன்மைகள் யாவை? என்பது பற்றிய விடையங்களையும், இவ்விடையங்களுக்கும் இலங்கைக்கும் உள்ள பொருத்தம் யாது? என்பதையுமே ஆராய்கிறது.

வர்த்தகப் பிரதேசம் என்பது ஏற்றுமதி, இறக்குமதி நடைபெறுகின்ற அல்லது பொருட்கள் கொடுப்பனவு, கொள்வனவு ஏற்படுகின்ற ஒரு பிரதேசத்தைக் குறிக்கும். சாதாரணமாக, இறக்குமதி, ஏற்றுமதி ஏற்படுகின்ற போது இறக்குமதி, ஏற்றுமதி வரிகள், இறக்குமதிக் கட்டுப்பாடுகள், அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகள், சுங்கத் தடைகள் போன்றவை இருப்பது இயல்பு. இதன் காரணமாக, சுதந்திரமாக வர்த்தகம் நிகழக் கூடிய நிலைமை இல்லாமல் போகின்றது ஆனால், சுதந்திர வர்த்தகப் பிரதேசமாக ஒரு இடத்தைப் பிரகடனப்படுத்தியபின், அவ்விடத்திற்குள் எவ்வித வரி விதிப்போ, அன்னியச் செலாவணிக் கட்டுப்பாடோ, இறக்குமதிக் கட்டுப்பாடோ, இல்லாமல் உள் நாட்டிற்கு மூலதனம் இலகுவாகப் பாய முடியும். இத்தகைய விடயம் இலங்கைக்குப் புதிதாக இருப்பினும் ஏனைய சில நாடுகளைப் பொறுத்த வரையில் இது புதிய தொன்றல்ல. 1956 ம் ஆண்டில், அயர்லாந்தில் ஷனன் (Shannon) என்ற இடத்தில் முதன் முதலில் சுதந்திர வர்த்தக வலயம் தோற்றுவிக்கப்பட்டது. இதன் பின்னர் பல நாடுகளில் சுதந்திர வர்த்தக வலயங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. 1978 ம் ஆண்டு ஜனவரியில் இலங்கையில் கட்டுநாயக்கா என்னுமிடத்தில் சுதந்திர வர்த்தக வலயம் ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இன்று உலகின் ஏறக்குறைய 40 சுதந்திர வர்த்த வலயங்கள் காணப்படுகின்றன. ஐரோப்பாவிலும், மத்திய கிழக்கிலும், அரபு, எகிப்துக் குடியரசு, கிரீஸ், அயர்லாந்து, சிரியா, அரபு லெபனன் குடியரசு, ஆகிய இடங்களிலும் ஆபிரிக்காவில் மொறிஷியஸ், செனகல், மொடுக்கோ, லிபேரியா, ஐவரிகோஸ்ட், கானா, கென்யா, நைஜீரியா, ஆகிய இடங்களிலும், மத்திய அமெரிக்காவில் மெக்சிக்கோ, சல்வடோர், நிகாறகுவா, பெலிஸ், குவாட்டமாலா, பனமா ஆகிய இடங்களிலும்,

தென் அமெரிக்காவில், கொலம்பியா, வெனிசியூலா, பிறேசில், சில்லி, உருகுவே
ஆகிய இடங்களில் ஆசியாவில் தென்கோரியா, தைவான், பிலிப்பையின்ஸ், இந்
தோனேசியா, தாய்லாந்து, இந்தியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களிலும், கரிபியன்
பகுதியில் யமேக்கா, பாபடோஸ் ஆகிய இடங்களிலும் காணப்படுகின்றன எனவே
சுதந்திர வர்த்தக வலயங்கள் உலகின் உள்ள கண்டங்களிலும் பரந்து உள்ளன. பல்
வேறு வகையான அமைப்புக்களின் பொருளாதார விடையங்களுடன் தொடர்பு
பட்ட அமைப்புக்கள், வயதுடன் ஒப்பிட்டு நோக்குகின்ற போது இவற்றின் வயது
குறைவாக இருப்பினும் இவை பல இடங்களிலும் அமைக்கப்பட்டிருப்பதற்குக்
காரணம், இவை அமைக்கப்பட்ட இடங்கள் வளர்ச்சி பெற்றமையும், இத்தகைய
வலயங்களில் முதலீடு செய்தோர் அதிக நன்மை பெற்றமையுமாகும். அமைக்கப்
பட்ட எல்லா இடங்களிலும் இச் சுதந்திர வர்த்தக வலயங்கள் திறமையாக
வளர்ந்தன என்றும், அவற்றில் முதலிட்டோர் யாவரும் நன்மை பெற்றார்கள் என்
றும், பொதுவாக கூறிவிட முடியாது. விதி விலக்குகளும் உண்டு. உதாரணமாக
இந்தியாவிலும், பிலிப்பைன்சிலும் அவ்வலயங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில்
திறமையாக இயங்கவில்லை. என்பது குறிப்பிடத்தக்கது. எனவே வர்த்தக வலயங்
கள் ஆரம்பத்திலிருந்தே திறமையாக வளர்ச்சி அடைய வேண்டுமாயின், சில அடிப்
படைச் சூழ்நிலைகள் இருத்தல் அவசியம். அவை யாவை என்று நோக்குவோமாக.

அரசியல் ஸ்திரம் என்பது சுதந்திர வர்த்தக வலயம் அமைக்கப்பட இருக்கும் நாட்டில் முக்கியமாக இருக்க வேண்டிய நிலைமைகளில் ஒன்றாகும். சுதந்திர வர்த்தக வலயங்கள் பற்றி ஆய்வு செய்தவர்கள் இவ் வலயங்களில் முதலீடு செய்ய விரும்புகின்ற அந்நிய முதலீட்டாளர்கள் அரசியல் ஸ்திரம் என்ற விடையத்தினை நன்கு கவனிக்கிறார்கள் என்ற கருத்தினைத் தெரிவித்துள்ளார்கள். இவ்வலயங்களில் பெரிதும் வெளிநாட்டவரே முதலீடு செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் வர்த்தக வலயத்தை அமைக்கும் நாடு கொண்டுள்ள முக்கிய நோக்கங்களில் இதுவும் ஒன்றாகும். இலங்கையும் இதுக்கு விதிவிலக்கல்ல. வெளிநாடுகளில் இருக்கும் முதலீட்டாளரை கவரச் செய்யும் பல சூழ்நிலைகள் நாட்டில் இருக்க வேண்டும். தாம் செய்யும் முதலீட்டில் இருந்து அதிக சிரமமின்றித் தமது முதலீடுகளுக்குப் பங்கம் ஏற்படாத வகையில் இலாபம் பெறக்கூடிய நிலைமை இருந்தால்தான், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இவ்வலயங்களில் முதலீடு செய்ய முன் வருவர். நாட்டில் அடிக்கடி அரசாங்கங்கள் மாற்றமடைவதன் பலனாக அரசியல் கொள்கைகளில் அடிக்கடி பெரிய மாற்றங்கள் நிகழக்கூடிய சூழ்நிலைகள் இருக்கின்ற போதோ, அல்லது புரட்சிகள் நடக்கக் கூடிய சூழ்நிலைகள் இருக்கின்ற போதோ, குறிப்பிட்ட நாட்டில் முதலீடு செய்வதற்கு முயற்சியாளர் தயங்குவர். எனவே, தமது முதலீட்டுக்குப் பாதிப்பு ஏற்படக் கூடும் என்ற பயம் இல்லாமல் செய்வதற்கு நாட்டில் அரசியல் ஸ்திரம் இருக்க வேண்டும்.

வர்த்தக வலயம் அமைந்திருக்கின்ற இடத்தில் உள்ள புவியியல் சார்ந்த நிலைமைகளும் இவ்வர்த்தக வலயத்தின் வளர்ச்சியை நிர்ணயிப்பதாக அமையும். வெளிநாட்டு முதலீட்டாளரோ, வெளிநாட்டு தொழில் நுட்ப வல்லுனர்களோ வாழ்வதற்கு ஏற்ற காலநிலை இருத்தல் வேண்டும்: அத்துடன் அப் பிரதேசம் சிறந்த துறைமுகம் இருக்கக்கூடிய இடத்திலும் அமைந்திருத்தல் வேண்டும். துறைமுக வசதி முக்கியமானதாகும். ஏனெனில் இச் சுதந்திர வர்த்தக வலயத்திற்குள் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் பெரும்பாலும் ஏற்றுமதியாகவே செய்யப்படுகின்றன.

போதுமான அளவு அடிப்படைக் கைத்தொழில் வசதியும் அப்பிரதேசத்திற்குள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பெரிய அளவிலான தொழிற்சாலைகளே இவ்வர்த்தக வலயத்திற்குள் அமைக்கப்படும். இத்தொழிற்சாலைகள் வளர்வதற்குத் தேவையான சில சிறிய அடிப்படைப் பொருட்கள் இலகுவாகக் கிடைக்கத் தக்க வசதி இருத்தல் வேண்டும். இல்லாவிடில் அப்பிரதேசம் விரைவில் வளர்ச்சியடைய மாட்டாது. அப்பிரதேசத்திற்குள் சிறந்த சமூகப் பொது முதலீட்டு வசதிகள் இருத்தல் வேண்டும். அது வைத்தியசாலை வசதி, பாடசாலை வசதி, நீர் விநியோக வசதி, மின்சார வசதி, புகையிரதப் பாதை, தெருப்பாதைகள் என்பன இருத்தல் வேண்டும்; இவ் வசதிகள் எல்லாம் ஆரம்பத்திலேயே இருக்க வேண்டும். இத்தகைய வசதிகளை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தாமே அமைத்து முயற்சியில் ஈடுபடுவார்கள், என எதிர்பார்க்க முடியாது. காரணம், இவ்வசதிகளை ஏற்படுத்துவதற்கான செலவு கூடுதலாக இருப்பதும், இவற்றின் மூலம் தனிப்பட்ட முயற்சியாளன் அதிக லாபத்தினைப் பெற்றுக் கொள்ள முடியாது இருப்பதும் ஆகும். எனவே, இவ் விடயங்களைக் குறிப்பிட்ட நாட்டின் அரசாங்கம் செய்து கொடுக்க முன்வர வேண்டும்; ஏனெனில், சுதந்திர வர்த்தக வலயம் வளர்வதற்கு இவை அத்தியாவசியமானவை;

குறைந்த கூலியில், சிறந்த தொழில் நுட்ப அறிவுடன் கூடிய நிறைந்தளவு தொழிலாளர் இருப்பதும், சுதந்திர வர்த்தக வலயம் சிறப்பான முறையில் வளர்ச்சி அடைவதற்குத் தேவையான அடிப்படை நிபந்தனைகளில் ஒன்றாகும். வளர்ச்சி குறைந்த நாடுகளில் உள்ள சுதந்திர வர்த்தக வலயங்களில் முதலீடு செய்ய வருகின்ற வளர்ச்சி அடைந்த நாடுகளில் உள்ள முதலீட்டாளர்கள் எதிர்பார்க்கின்ற வாய்ப்புக்களில் இது முக்கியமானதாக அமைகின்றது. தைவானில் மூன்று இங்களில் சுதந்திர வர்த்தக வலயங்கள் திறமையாக இயங்குவதற்குக் காரணம் அங்கு குறைந்த கூலியில் அதிகளவு தொழிலாளர்களைப் பெறக்கூடியதாக இருப்பதாகும். வளர்ச்சி அடைந்த நாடுகளில் தொழிலாளருக்கான கூலியானது வளர்ச்சி குறைந்த நாடுகளில் தொழிலாளருக்கு உள்ள கூலியுடன் ஒப்பிட்டு நோக்குகின்ற போது பத்து அல்லது பதினைந்து மடங்கு அதிகமானதாகும். தொழிலாளருக்கான கூலி, உற்பத்திச் செலவில் அதிக இடத்தைப் பிடித்துக் கொள்கிறது. எனவே, குறைந்த கூலியில் தொழிலாளரைப் பெறின் குறைந்த உற்பத்திச் செலவில் பொருட்களை உற்பத்தி செய்து கொள்ளலாம். இவ்வர்த்தக வலயங்களில் ஈடுபட்டிருக்கின்ற முயற்சியாளர்களில் கணிசமான பகுதியினர் தமது தாய் நாட்டிற்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருக்கின்றனர். எனவே தாம் உற்பத்தி செய்யும் பொருட்களைத் தாய் நாட்டில் உள்ள சில நிறுவனங்கள் உற்பத்தி செய்த போதும், குறைந்த கூலியில் தொழிலாளரை வேலைக்கமர்த்துவதன் மூலம் குறைந்த செலவில் பொருட்களை உற்பத்தி செய்து தாய் நாட்டு நிறுவனங்களின் உற்பத்தியுடன் போட்டியிட்டு விற்கலாம், என்பதனாலேயே அவர்கள் சுதந்திர வர்த்தக வலயங்களில் முதலீடு செய்ய முன்வருகின்றனர். எனவே, குறைந்த கூலியில் தொழிலாளர் கிடைக்க வேண்டியது அவசியமான நிலைமையாக அமைகின்றது. சில முயற்சியாளர்கள் தாம் உற்பத்தி செய்கின்ற பொருட்களைத் தாய் நாட்டுக்குத் தான் அனுப்ப வேண்டும் என்ற நோக்கம் இல்லாது அருகாமையில் சிறந்த சந்தை வசதியைக் தரக்கூடிய நாடுகளுக்கும் தமது உற்பத்திப் பொருட்களை விற்கிறார்கள். இவர்கள் தாய் நாட்டில் உள்ள கம்பனியிலும் பார்க்கக் குறைந்த கூலியில் தொழிலாளரை வேலைக்கமர்த்தி உற்பத்தி செய்வதனால் குறைந்த செலவில் உற்பத்தியினைச் செய்ய முடிவதோடு அருகாமையில் உள்ள சந்தைகளில்

பொருட்களை விற்பதன் மூலம் அதிக லாபமும் பெற முடிகின்றது. எனவே, சுதந்திர வர்த்தக வலயங்களில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான சந்தைகள் அண்மையிலிருப்பதும் முதலீட்டாளரைக் கவரக் கூடிய ஒரு விடையமாக அமையும்.

சுதந்திர வர்த்தக வலயத்திற்கான நிருவாக அமைப்பானது, திறமையான தாகவும், விரைவில் செயற்படக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். சுதந்திர வர்த்தக வலயம் தொடர்பாக எழுகின்ற பிரச்சனைகள் உடனடியாக அதற்குப் பொறுப்பாக உள்ள நிருவாகக் குழு செய்து முடித்தல் வேண்டும். சுதந்திர வர்த்தகவலயத்தில் முதலிட விரும்பும் முயற்சியாளருக்கு அது தொடர்பான விடயங்களை உடனுக்குடன் அறிவித்தல் வேண்டும். தைவானில் சுதந்திர வர்த்தக வலயத்தில் வேலை செய்யும் தொழிலாளர் தொடர்பான விடயங்களைக் கவனிப்பதற்கு தனியே ஒரு சபை உண்டு. இதனைவிட, தபால் தொலைபேசிக் காரியாலயங்கள், தொழில் இலாகா, விமானப் போக்கு வரத்து. பிரதிநிதிகள் வசதி போன்றவையும் அங்கு அமைந்துள்ளன. நிருவாகம் சம்பந்தமான விடயங்கள் உடனடியாக நிறைவேற்றப் படாவிடில் சுதந்திர வர்த்தக வலயம் வளர்ச்சி பெறக்கூடிய கால அளவும் பின் போடப்படலாம்.

நிதி வசதிகளை அளிக்கத்தக்க நிறுவனங்கள் இருப்பதும் அவசியமானதாகும். சுதந்திர வர்த்தக வலயம் உருவாகு முன்னர் அவை இல்லாவிடினும் அப்பிரதேசத்தைச் சுதந்திர வர்த்தக வலயமாக ஒதுக்கிய பின்னர், அவ்விடத்தில் அவ்வசதிகளை ஏற்படுத்த வேண்டும். தென் கோரியாவில் அமைக்கப்பட்ட பிரதேசம் நன்கு வளர்ச்சி அடைந்ததற்கான காரணங்களில் ஒன்று, அங்கு சுதந்திர வர்த்தகப் பிரதேசம் அமைந்துள்ள மாசன் என்ற இடத்தில் நிதி நிறுவன வசதிகள் (அந்நிய செலாவணி, மாற்று வங்கிகள்) போன்ற வசதிகள் ஏராளமாக அமைந்திருப்பதே யாகும்.

மேலே கூறிய பல வசதிகள் நல்ல முறையில் அமைந்திருக்குமாயின் சுதந்திர வர்த்தகப் பிரதேசமானது திறமையாக வளரும். ஆனால், எல்லா வலயங்களிலும், எல்லாச் சூழ்நிலைகளும் திறமையாக அமைந்துள்ளன என்றும், கூறுவதற்கில்லை. பெரும்பான்மையான சூழ் நிலைகள் அமைந்திருத்தல் போதுமானது. இன்று சிங்கப்பூர், கொங் கொங் ஆகிய இடங்களில் உள்ள சுதந்திர வர்த்தக வயலங்கள் சிறப்பானவையாகத் திகழ்கின்றன. இனி, சுதந்திர வர்த்தக வலயம் பற்றி எழக்கூடிய சில சந்தேகங்களை நோக்குவோம்.

குறிப்பிட்ட ஒரு நாட்டின் சுதந்திர வர்த்தக வலயத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று வெளிநாட்டார் பெருமளவு முதலீட்டினைச் சுதந்திர வர்த்தகவலயத்துள் செய்து கொள்வர் என்பது இதனால் வெளிநாட்டவர் மட்டும்தான் குறிப்பிட்ட வலயத்துள் முதலீட்டினைச் செய்ய முடியும் என்பது கருத்தல்ல, வெளிநாட்டு முயற்சியாளருடன் சேர்ந்து, உள்நாட்டு முயற்சியாளரும் குறிப்பிட்ட வலயத்திற்குள் முதலீடு செய்யலாம். சுதந்திர வர்த்தக வலயத்திற்குள் முதலிட விரும்புகின்ற வெளிநாட்டு முயற்சியாளர்கள் அவ்வலயம் பற்றிய தகவல்களை அரசாங்கத்திடம் இருந்து பெறுவதிலும் பார்க்க குறிப்பிட்ட வலயம் அமைக்கப்பட உள்ள நாட்டில் உள்ள முயற்சியாளராகிய தமது நண்பர்களிடம் இருந்து பெறுவதிலேயே அதிக ஆர்வம் காட்டுகின்றனர். எனவே, உள்ளூர் முதலீட்டாளர்களும், வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் சேர்ந்து குறிப்பிட்ட வலயத்தில் முதலீடு

செய்வதற்கான விருப்பத்தினைத் தெரிவிக்கின்றபோது அத்தெரிவிப்பானது வெளிநாட்டு முயற்சியாளர்களுக்கு நம்பிக்கையையும், ஆர்வத்தையும் அளிக்கும் ஒரு விடயமாக அமையும்.

சுதந்திர வர்த்தக வலயம் அமைப்பதன் காரணமாக வெளிநாட்டார் பலர் வந்து சேர்வர். வெளிநாட்டார் பலர் வந்து சேருவதால் நாட்டினுடைய இறைமைக்குப் பங்கம் ஏற்பட்டுவிடக் கூடுமோ என்ற பயம் அல்லது எண்ணம் சிலருக்கு ஏற்படலாம். ஆனால், அவ்வாறான அச்சம் நியாயமற்றதாகும். ஏனெனில் அச் சுதந்திர வர்த்தக வலயத்திற்குள் சொந்த நாட்டினது அதிகாரம் எப்போதும் இருந்துகொண்டே இருக்கும். ஏதாவது சமயத்தில் சுதந்திர வர்த்தக வலயத்திற்குள் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் நிறுவனங்கள் நாட்டின் இறைமைக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய வகையில் தொழிற்படுமாயின், அவற்றினை நாட்டிலிருந்து வெளியேற்றக் கூடிய அதிகாரம் குறிப்பிட்ட நாட்டிற்கு உண்டு.

சுதந்திர வர்த்தக வலயத்தினை இலங்கையில் அமைப்பதனால் பல விதமான ஆடம்பரப் பொருட்களையும், எதிர்காலத்தில் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள முடியும் என்ற ஒரு தப்பெண்ணத்தினை மக்கள் மனதில் வைத்திருக்கலாம் அது இலகுவாக முடியாத காரியமாகும். சுதந்திர வர்த்தக வலயத்திற்குள் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் ஏற்றுமதியை நோக்கமாக வைத்தே செய்யப்படுகின்றன. உள்ளூர் மக்கள் அங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வாங்க வேண்டுமாயின் சுதந்திர வர்த்தக வலயத்திற்கு வெளியில் தான் வாங்கமுடியும். சுதந்திர வர்த்தக வலயத்தின் எல்லையினை விட்டுப் பொருட்கள் வெளியேறுகின்ற பொழுது அவற்றின் மீது வரி விதிக்கப்படுகின்றன. உள்நாட்டுக் கைத்தொழில் வளர்ச்சி தடைப்படாமல் இருப்பதற்கு இவ் வரி விதிப்பு அவசியமானதாக அமைகின்றது.

அடுத்து, சுதந்திர வர்த்தக வலயத்தினை அமைப்பதனால் அவ் வலயம் அமைந்துள்ள நாடானது எவ்வகையான நன்மைகளைப்பெற முடியுமென்று நோக்குவோம். சுதந்திர வர்த்தக வலயத்தினை அமைப்பதனுடாகக் குறிப்பிட்ட நாடானது, பொருளாதார வளர்ச்சியைப் பெற்றுக் கொள்ளும் என்பதை நடைமுறை ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

சுதந்திர வர்த்தக வலயத்திற்குத் தேவையான தொழிற்படை அப்பிரதேசத்தில் இருந்தே பெறப்பட வேண்டும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் வேலையின்மை என்பது முக்கிய பிரச்சனையாக இருந்து வருகின்றது வளர்ந்து வருகின்ற வேலைப்படைக்கு ஏற்ப, வேலை வாய்ப்பினை வழங்க முடியாத நிலைமை அந்த நாடுகளில் காணப்படுகின்றது. வேலை வாய்ப்பினை அதிகரிக்கத்தக்க வகையில் கைத்தொழில் சேவைத்துறைகள் வளர்ச்சி அடைய முடியாமல் இருக்கின்றன. காரணம், முதலீட்டுப் பற்றுக்குறையாகும். உள்நாட்டவரால் அல்லது உள்நாட்டு அரசாங்கத்தால் முதலீடு செய்து வேலை வாய்ப்பை வழங்க முடியாத பட்சத்தில், சுதந்திர வர்த்தகப் பிரதேசங்கள் வெளிநாட்டவரின் முதலீடுகளின் மூலம் உள்நாட்டு மக்களுக்கு, வேலை வாய்ப்பினைக் கொடுக்கக் கூடிய வசதியினை அளிக்கின்றன.

சுதந்திர வர்த்தக வலயம் இயங்கத் தொடங்க, அங்கு வேலை செய்கின்ற தொழிலாளர்கள், முதலீடு செய்த வெளிநாட்டவரின் வருகை போன்றவற்றினால்.

அங்கு சன அமுக்கம் ஏற்படத் தொடங்கும். அவர்களுக்கான சுகாதார வசதிகளை அமைப்பதற்கு வைத்தியசாலைகள் கட்டப்படும். அங்குள்ள தொழிலாளர்களினதும் முயற்சியாளர்களினதும் நிருவாக உத்தியோகத்தினரதும் பிள்ளைகள், படிப்பதற்காக, பாடசாலைகள், அமைக்கப்படும். வேறுபல அரசாங்க காரியலயங்களும் அமைக்கப்படும். இதனால் குறிப்பிட்ட பிரதேசமானது வளர்ச்சியடையும்.

சுதந்திர வர்த்தக வலயத்திற்குள் முதலீடு செய்வோர் அனைவரும் தமக்குத் தேவையான பொருட்களை எல்லை இடப்பட்ட குறிப்பிட்ட பிரதேசத்துக்குள், இருந்தே பெற்றுவிட முடியாது. எனவே நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் சென்று தமது தேவையினைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய அவசியம் இருக்கும். வெளிநாட்டவர்கள் தமது பணத்தைச் செலவிடுவதன் மூலம் இலங்கைப் பொருட்களை வாங்குவர். இதனால், இலங்கைக்கு அன்னியச் செலாவணி கிடைக்கிறது. இதனைவிட புதிதாக வேலைக்கு சேர்ந்த மக்கள் உற்பத்திப் பணியில் ஈடுபடுவார்கள். உற்பத்திப் பணியில் ஈடுபடுவதன் காரணமாக, அவர்களுக்கு வருமானம் கிடைக்கிறது. தாய் நாட்டு மக்களுக்கு வருமானம் கிடைப்பதால் தேசிய வருமானமும் அதிகரிக்கிறது. இதன் பயனாகப் பொருளாதார வளர்ச்சி ஏற்பட வழிபிறக்கிறது.

சுதந்திர வர்த்தக வலயங்கள் அமைக்கும் போது வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் இருந்து, தேவையான, தொழில் நுட்ப அறிவுடன் கூடிய விற்பன்னர்களையோ, நிருவாக அறிவுடன் கூடிய விற்பன்னர்களையோ, இலகுவாகப் பெற்று விட முடியாது. எனவே, அவர்களை வளர்ச்சியடைந்த நாடுகளில் இருந்தே பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறான, விற்பன்னர்கள் வெளிநாடுகளில் இருந்து வந்து வேலை செய்யும் போது, அவர்களின் கீழ் வேலை செய்யும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் மக்கள் நிருவாக நுணுக்கங்களையும், தொழில் நுட்ப நுணுக்கங்களையும், அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. இவற்றை விட, அரசாங்க வருமானம் பெருகுதல் ஏற்றுமதிப் பெருக்கம் ஏற்றுமதி பன்முகப்படுத்தல் போன்ற நன்மைகளும், சுதந்திர வர்த்தக வலயம் அமைப்பதன் காரணமாக ஏற்படுகின்றன.

இலங்கையின் கட்டுநாயக்காவை சுற்றியுள்ள இரண்டாயிரம் ஏக்கர் நிலங்களே சுதந்திர வர்த்தக வலயத்துக்குரிய பிரதேசமாக, ஒதுக்கப்படப் போகிறது. என்று அறிவிக்கப் பட்டுள்ளது. கொழும்புத் துறைமுகம் அண்மையில் இருப்பதும், நீர் வசதி மின்சார வசதி என்பன கிடைப்பதும் ஆகாய விமானத் தரிப்பிடம், இருப்பதுமே கட்டுநாயக்காவைத் தெரிவு செய்தமைக்கான காரணங்கள் எனச் சில அரசியல் அதிகாரிகளால், கூறப்படுகின்றது இலங்கையில் குறைந்த கூலியில் தொழிலாளரைப் பெறுவதற்காக, வாய்ப்பு இருப்பதும், இலங்கையுடன் அண்மையில் அதிக வர்த்தகத் தொடர்புகளை வைத்துள்ள மத்திய கிழக்கு நாடுகளில் சந்தை வாய்ப்புகள், அமைந்திருப்பதும், இலங்கையில் அமைக்கப்பட இருக்கும் சுதந்திர வர்த்தக வலயம் நன்கு வளர்வதற்கான. சாத்திய நிலைமைகளை, ஏற்படுத்தும் என்று சிலர் அபிப்பிராயப் படுகின்றர். இவ்வபிப்பிராயங்களின் உண்மை நிலைமையினை அறிவதற்கான காலம் வெகு தூரத்தில் இல்லை.

# உயிர்த் தோற்றம்

இன்று கூட எம்மிற் பலர் முட்டையில் இருந்து கோழி வந்ததா அல்லது கோழியில் இருந்து முட்டை தோன்றியதா என்று வேடிக்கையாக விவாதிப்பதைக் காணலாம். எவ்வாறு இந்த உயிர் தோன்றியது என்பதை இன்றைய விஞ்ஞானிகள் கூடத் திட்டவட்டமாய் நிரூபிக்க முடியாமல் இருக்கிறார்கள். ஆனால், பல அறிஞர்கள் இதைப்பற்றிப் பல கருத்துகோள்களைக் கூறியுள்ளார்கள். அவர்கள் தம் கருத்துக்களைப் பரிசோதனை ரீதியாக நிரூபிக்கவும் முயன்றுள்ளார்கள்.

ஆதிகாலத்தில் உயிர் உயிரில்லாதவற்றில் இருந்து தோன்றியது என்று பொதுவாகப் பலரும் நம்பிவந்தார்கள். அழுகும் இறைச்சியிலிருந்து புழுக்களும் வண்டுகளும், பழைய துணிகளில் இருந்து எலிக்குஞ்சுகளும் பிறப்பதாகக் கூறியுள்ளார்கள். இதனை அக்காலத்து அறிஞர்கள் கூட ஆதரித்தார்கள் எனக் குறிப்புக்கள் கூறுகின்றன. இவ்வாறு, உயிர் உயிரில்லாதனவற்றில் இருந்து தோன்றிய என்பது ''தன்னிச்சைப் பிறப்பாக்கக் கொள்கை'' எனப்படும். இதனை இன்றுகூட ஆதரிப்பவர்களும் உண்டு. இவர்கள் அழுகும் இறைச்சியில் இருந்து புழுக்கள் நெளிவதைக் காண்கின்றார்களே அன்றி அவை எவ்வாறு உற்பத்தி ஆகின்றன என்பதை அவதானிக்கத் தவறிவிடுகிறார்கள். இதனை நாமும் ஆழ்ந்து கவனிக்கும்போது இவர்கள் போதிய தரவுகள், ஆதாரங்கள் இன்றி இம் முடிவுக்கு வந்திருக்கிறார்கள் என்பது புலனாகும்.

ஆனால் 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த ''பிரான்சிஸ்கோ ரெடி'' என்பவர் நடத்திய ஒரு பரிசோதனையினால் உயிர், உயிர் பொருளில் இருந்தே உற்பத்தியாகின்றது என்பதை நிரூபித்துள்ளார். அவர் இரண்டு வாய்திறந்த அகலமான பாத்திரங்களை எடுத்து அவற்றை வெந்நீரில் இட்டு அவித்துத் தொற்றுநீக்கி ஒன்றினுள் இறைச்சித் துண்டை இட்டு மெல்லிய துணியினால் அதன் வாயை மூடிக்கட்டினார். மற்றையதனுள் இறைச்சியை வைத்துத் திறந்தபடியே விட்டிருந்தார். சில நாட்களின் பின் அவதானித்தபோது துணி கட்டப்படாமல் விடப்பட்ட இறைச்சித் துண்டில் புழுக்கள் காணப்பட்டன. துணியினால் மூடிக்கட்டிய பாத்திரத்தினுள் இருந்த இறைச்சித்துண்டில் கீடங்கள் காணப்படவில்லை. இது இறைச்சியின் மணத்தினால் கவரப்பட்ட ஈலையான்கள் துணியின்மேல் இட்ட முட்டையில் இருந்து தோன்றியவை ஆகும். இவர் இப்பரிசோதனையின் கண்டுபிடிப்புக்களை 1668ம் ஆண்டு பிரசுரித்தார். இதனைத் தொடர்ந்து மக்களுக்கிடையே நிலவிய தன்னிச்சைப் ''பிறப்பாககற் கொள்கை'' படிப்படியாகக் கைவிடப்பட்டது. இதன் பின்வந்த உயிரின அறிஞர்களின் ஆராய்வினால் ஒவ்வொரு சந்ததியினதும் இனப்பெருக்கம் பற்றிய ஆராய்வுகள் விரிவடையத் தொடங்கியதால் அங்கிகள் அங்கிகளில் இருந்து மட்டுமே உற்பத்தியாகின்றது. எனும் கருத்து மேலும் மேலும் வலுவடையத் தொடங்கியது. இக்கொள்கை ''உயிர் பிறப்புக் கொள்கை'' என அழைக்கப்படும்.

ஆனால், பிற்காலத்தில் அன்ரன் வான்லியூவென்கூக் என்பவர் ஓர் எளிய நுணுக்குக் காட்டியினூடாகப் பார்த்தபோது எண்ணற்ற நுண் அங்கிகளையும் பற்றீரியாக்களையும் அவதானித்தார். அவர் அதனைப்பற்றி ஒரு முடிவான தீர்மானத்தையும் எடுக்கவில்லை. இதனை மற்றவர்கள் தீர்க்கும்படி விட்டுவிட்டார். இதனைத் ''தன்னிச்சைப் பிறப்பாக்கற் கொள்கை''யாளர்கள் தமக்குச் சாதகமாகத் திரித்துக் கூறத் தொடங்கினார்கள். இதனால் இது மீண்டும் அறிவியலாளர் இடையே பிரச்சனைக்குரிய விடயமாக மாறிற்று. அப்போது வாழ்ந்து வந்த லூயி பாஸ்ரர் எனும் விஞ்ஞானி, ஒரு காற்று உறிஞ்சியில் பஞ்சை வைத்து அதன்மீது வளிமண்

டல வளியை உறுஞ்சியின் ஊடாக 24 மணி நேரம் இழுத்தார். பின் இதனை அற்க கோலில் கரைத்து நுணுக்குக்காட்டியின் கீழ் அவதானித்தபோது எண்ணற்ற நுண் அங்கிகள் இருப்பதை அவதானித்தார். இதில் இருந்து, வளிமண்டலத்தில் ஏராள மான நுண் அங்கிகள் உண்டு என்றும், இவை தன்னிச்சையாகப் பிறக்கவில்லை என்றும் வலியுறுத்தினார். இதுவே இன்றைய பெரும்பாலான அறிவியலாளரின் கருத்தும் கூட.

இன்று வரை எந்த ஒரு விலங்காவது தன்னிச்சைப் பிறப்பாக்கல் மூலம் பிறந்தது என யாரும் கண்டுபிடிக்கவில்லை. அங்கிகள் பெற்றோர் சந்ததியில் இருந்து தோன்றுகின்றன என்பதையே இன்று அறியக்கூடியதாயுள்ளது. ஆகவே ''உயிர் பிறப்புக் கொள்கை''யே பொதுமைப்பாடு அடைந்த கொள்கை என்று இன்றைய விஞ்ஞானிகள் கருதுகின்றார்கள்.

இக்கொள்கைகள் இவ்வாறு இருந்தபோதும் பூமியில் ஆரம்பத்தில் உயிரினங் கள் காணப்படவில்லை எனப் புவிசரிதவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இவர் களின் கருத்துப்படி அக்காளப்பூமி நெருப்புக் கோளமாகக் காணப்பட்டது. இந் நிலையில், பூமியின் மேற்பரப்பில் இன்று திண்மமாகக் காணப்படும் உலோகங்கள் திரவ நிலையில் இருந்தனவென்றும் இன்றைய வளிமண்டல அமைப்புக்கும் அன் றைய வளிமண்டல அமைப்புக்கும் இடையே வேறுபாடுகள் காணப்பட்டன என வும் அறியக்கூடியதாய் உள்ளது.

இந் நிலைமைகளால் உயிரற்ற பொருள்களில் இருந்து எளிய உயிரினங்கள் தோன்ற ஆரம்பித்திருக்கலாம் என உயிரினவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். இது கூட ஒருவகையில் தன்னிச்சைப் பிறப்பாக்கமாக இருப்பினும் முன் குறிப்பிட்ட வர்கள் கூறுவது போன்றமுறையில் சிறத்தலடைந்த அங்கி தோற்றவில்லை.

எனவே, தீக்கோளமாகக் காணப்பட்ட இந்நிலையில் இரசாயனத் தாக்கங் கள் நிகழ்ந்தவண்ணம் இருந்தன. படிப்படியாக, பூமி குளிர ஆரம்பித்தது. அப் போது மேலும் புதுச்சேர்வைகள் தோன்ற ஆரம்பித்தன ஐதரசனும், ஒட்சிசனும் பல புதிய மூலக்கூறுகளை உதாரணமாக மீதேன், அமோனியா, நீர் போன்றவற்றை உருவாக்கியது. இம்மூலக்கூறுகள் ஒன்று சேர்த்து மேலும் சிக்கலான மூலக்கூறு கள் தோன்றலாயின. இச் சிக்கலான மூலக் கூறுகள் புதிய இயல்புகளையுடைய தொ குதிகளை ஏற்படுத்தின. இத்தொகுதிகள் தம்மைப்போன்ற வேறு தொகுதிகளை உருவாக்கும் திறனைப்பெற்று இயங்கின. இதுவே ஆதி உயிர் ஆகும். ரஷ்சிய நாட் டைச் சேர்ந்த ஒபாரின் எனும் விஞ்ஞானி இக்கருத்தைத் தெரிவித்தார்.

இக்கருத்தைப் பின்பற்றி ஸ்ரான்லி மிலர், கால்ட்யும்ர போன்ற விஞ்ஞானி கள் சிறந்த ஆய்கருவிகளில், மீதேன், அமோனியா, நீர் ஐதரசன் ஆகிய கலவை களுள் உயர் மின்னழுத்தத்தைச் செலுத்தி வெடிக்கவைத்து ஒரு வாரத்தின் பின் அவதானித்தபோது அக்கலவையினுள் பல அமினோ அமிலங்கள் காணப்பட்டதை அவதானித்தனர்.

இதிலிருந்து, அக்காலத்தில் இருந்த உயர்வெப்ப, மின் அழுத்தம் காரண மாக, அமினோ அமிலங்களும், அமினோ அமிலத்திலிருந்து புரதங்களும், நியூக்கினிக் கமிலங்களும் தோன்றி நியூக்கினிக்கமிலத்தைச் சுற்றிப் புரதம் கவசமாக அமைய அங்கி உருவாகி இருக்கலாம் எனக்கொள்ள இடமுண்டு. இவ்வாறு உருவாகிய எளிய அங்கியில் இருந்து ஏராளமான பன்மைத்துவம் அடைந்த சிக்கலான அங்கி கள் தோன்றி இருக்கலாம் என இன்றைய விஞ்ஞானிகள் பலர் கருதுகின்றனர்.

அ. அன்ரன் அன்பழகன்
12 - உயிரியல் விஞ்ஞானம்

### யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

# உயர்தர மாணவ மன்ற ஆண்டறிக்கை

# 1977

''தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை'' என்றார் பாவேந்தர் பாரதிதாசன்.

திவ்ய தமிழும், திரண்ட தமிழ்ப் பண்பாடும், பொய்யாவெழு தமிழ் கூறும் நல்லுலகமும் என்றும் புதுமைப் பொலிவுடன் விளங்கு வதற்கான பணியாற்ற வேண்டும் என்ற பெருநோக்கினால் முளைவிட்டுப் படர்ந்த தனி மலர் விருட்சம் இக்கல்லூரி உயர்தர மாணவ மன்றம், பருவக் குளத்தின் பல படிகள் தாண்டி இன்று இளமைப் பொலிவுடன் மிளிர்கின்றது. ஆண்டுகள் உருண்டோடத், தேன்துளி சிந்தக் கட்ட விழ்ந்த மலர்கள் ஒவ்வொன்றும் கருத்துக்கும், கட்சிக்கும் விருந்தளித்தன என்பதில் ஐயமில்லை.

புத்தாண்டு பிறந்தது புதுமலரொன்று மடல் திறந்தது. புது மல ரின் பொலிவை விரைவிற் பரப்புவதுபோல் எமது மன்றத்தின் முத லாவது சிறப்புக் கூட்டம் 1977ம் ஆண்டு வைகாசித் திங்கள் 25ம் நாள் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் தலைவர் செல்வன் கி. பரிமளராஜா அவர்களின் தலைமையில் இனிது நடைபெற்று இன் மணம் பரப்பிற்று.

எமது கல்லூரியிற் கல்வி பெருகவும், கலை வளர்ந்தோங்கவும், பல்திறத்தோரும் பயின்று பயன் பெறவும் இயன்றதை ஆற்ற இம் மன்றம் முயன்று பலவழிகளிற் பொருள் சேர்த்தது. பயிலும் மாண வரும் இக்கல்லூரியிற் பயன் பெற்றுச் சென்றோரும் பொருலாளர் கலை நிகழ்ச்சிகள் பல நடாத்தி நிதிதிரட்டி அளித்தனர். ''அரங்குகள்'' பல ஏற்படுத்தி அறிஞர் பலரை அழைத்து, மாணவர் அறிவுப் பசிக்கு உணவளித்தோம். கருத்தரங்குகள் யாவும் சிறப்பாக அமைந்தன. ''பாரதியும் தமிழ் இலக்கியங்களிற் சமுதாயக் கருத்துக்களும்'' என்ற தலைப்பை ஒட்டிய கருத்தரங்கில் திரு. அ. குமரன் B. A. அவர்கள் பங்குபற்றி எம்மை எல்லாம் ஒரு புது இலக்கிய உலகிற்கே அழைத்துச் சென்றது குறிப்பிடத்தக்கது.

மாணவரிடையே இலைமறை காய் போல் மறைந்திருக்கும் சொற் போர் திறமைகளை வெளிப்படுத்துவதற்காக விவாத அரங்குகள் பல மன்றத்தினால் நடாத்தப்பட்டது. கல்லூரிகளிடையேயும் கருத்துப் பரி மாற்றத்தை ஏற்படுத்த எமது மன்றம் தவறவில்லை. இவ்வழி எழுந்தது தான் யாழ் மத்திய கல்லூரிக்கும், எமது கல்லூரிக்குமிடையே எழுந்த விவாத அரங்காகும்.

நடிப்புத் துறையிலும் நாடகக் கலையிலும் எமது மன்ற உறுப் பினரின் திறமையை வார்த்தையால் விபரிப்பது கடினம் இவ்வாக்கத் திறமைக்கு ஊக்கமளிக்க வேண்டுமென்ற நோக்கால் பல சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன. இச்சந்தர்ப்பங்களை மாணவரும் நன்கு பயன்படுத்தினர். அதன் பிரதிபலிப்பே மாணவர்களால் வெற்றிவாகையுடன் மேடை யேற்றப்பட்ட ''வெளிநாட்டு மாப்பிள்ளை'' என்ற நகைச் சுவைநாடகம்.

எதிர்காலத்தின் சமுதாய சிற்பிகளாய் மாணவர்கள் அறிவிலும், ஆற்றலிலும், பண்பிலும் சிறந்தவர்களாக உருவாக வேண்டுமென்பதே இம்மன்றத்தின் அவா. இவ்வவாவினை நாடியே இம்மன்றத்தின் சகல நடவடிக்கைகளும் திசை திருப்பப்பட்டன. இத்துறையில் எமது முயற்சியின் வெற்றியினை விளம்புவது போல் மாணவர்களும் நாவன்மை, விவாதம், நாடகம், இசை ஆகிய துறைகளில் நடைபெற்ற பொதுப் போட்டிகளில் பரிசில்களும் ஈட்டியுள்ளனர். இம் மன்றத்தின் இவ்வரும் பெரும் இலக்குகளைப் பெறுவதில் உறுதுணையாக நின்ற கற்றோருக்கும், பெற்றோருக்கும், அயராது உழைப்பினை அள்ளிச் சொரிந்த மாணவருக்கும் உள்ளத்தெழும் உவகைப் பெருக்கோடு நன்றி நவில்கின்றோம்.

S. குணவதி
செயலாளர்.

# THE CONFERENCE OF NON-ALIGNED NATIONS

The fifth conference of Non-Aligned Nations took place in Sri-Lanka in August 1976 with Sri-Lanka as the country welcoming. The delegates, our Prime Minister Mrs Srimavo Bandaranaike played a dominant role in the conference and brought fame to our country. This recent conference of the Non-Aligned Nations is of historic importance because it succeeded in bringing the non-Aligned Nations closer than ever before. And has thus made them stronger and more influential in the world and at the United Nations.

The common factors for uniting the several nations are:

(1) The poor economic condition of most of these countries.

(2) The desire for economic exploitation by capitalist - cum-imperialist countries and

(3) The desire for mutual economic assistance among themselves.

In the field of mutual economic assistance the Non-Aligned Nations have resolved to ensure closer economic co-operation and more favourable terms of trade among themselves. The Non-Aligned Nations have also realised the ill effects of adverse propaganda by the imperialist countries in preventing closer economic co-operation among and development in the Non-Aligned Nations therefore, in their recent conference, the Non-Aligned Nations have decided to establish a powerful common mass media.

The recent conference has also emphasised the need for world peace and has also advocated the declaration of the Indian Ocean as a peace zone.

The long history of man has proved "unity is strength" therefore the vast number of Non-Aligned Nations that are struggling to build up their under-developed exploited economics have taken the correct step towards their economic development, therefore it is certain that the Non - Aligned Nations will soon succeed in economic development thus ensuring happiness and peace to their people.

**N. Ravidevy**
11 Science

# கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

யாழ்ப்பாணம்.

## பரிசளிப்பு விழா - 1976

## அதிபரின் அறிக்கை

3-7-1976

**செந்தமிழ்ப் பெருமகன் சிவநாதன் அவர்களே !**

**திருமதி சிவநாதன் அவர்களே !**

**பெரியோர்களே !**

**சகோதர சகோதரிகளே !**

பெற்றோர், பாதுகாவலர் பழைய மாணவர்கள், நன்நோக்காளர்கள் ஆகிய உங்களை எமது கல்லூரிப் பரிசளிப்பு விழாவிற்கு வருக, வருக என வரவேற்பதில் இறும்பூதெய்துகின்றேன்.

**உயர் திரு சிவநாதன் அவர்களே !**

தங்களையும் தங்கள் அன்பின் துணைவியாரையும் இன்று எங்கள் பிரதம விருந்தினர்களாக அழைத்துக் கௌரவிப்பதில் பெருமகிழ்வு அடைகின்றோம். பிரதம கல்வி அதிகாரியாய்ச் சேவைமூப்பில் இருக்கும் தாங்கள் சேவையிலும் முன்னணியில் நிற்பதை நினைத்து பெருமைப்படுகின்றோம். தமர், பிறர் எனப்பாராது; பெரியோர் சிறியோர் எனக்கருதாது, கற்றவர் கல்லாதவர் என நோக்காது யாவர் மாட்டும் அன்புடனும் பண்புடனும் சிரித்துப் பழகும் தாங்கள் எங்களின் குறுகிய கால அழைப்பினையும் பொருட்படுத்தாது, தங்கள் உத்தம பத்தினியாருடன் இங்கு வருகை தந்தமைக்கு எமது அன்போடு கூடிய நன்றியினைத் தெரிவிக்கின்றோம்.

கணிதத்துறையிற் சிறப்பு விஞ்ஞானப்பட்டம் பெற்ற தாங்கள் புலமைப்பரிசில் பெற்று லண்டன் பல்கலைக்கழகம் சென்று விஞ்ஞான முதுமானிப்பட்டம் பெற்று ஈழநாட்டிற்கே பெருமை தேடிக் கொடுத்தீர்கள். பலாலி ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராய் பணிபுரிந்து பண்பட்ட ஆசிரியர்கள் பலரை உருவாக்கியுள்ளீர்கள் கற்பித்தலிற் சிறப்புற வேண்டுமேற் கல்வி நிர்வாகம் சிறப்புற வேண்டும் என்றுன்னியோ தாங்கள் நிர்வாகப் பகுதியை நினைந்தீர்கள். பிரதம கல்வி அதிகாரியாய்ப் பணியேற்ற தாங்கள், 'யாதுமூரே யாவருங்கேளிர்' என்றபடி கிழக்கிலங்கைக்கு அரும்பணி ஆற்றினீர்கள். கல்வியமைச்சிற் பணி புரிந்த தங்களை வடமாநிலம் பெற்றது எமது பெரும் பேறுகளுள் ஒன்றே.

விஞ்ஞானத்துறை போகிய தாங்கள் ஆற்றலும், அறிவும், அபிமானமும் கொண்டது விந்தையுள் விந்தை. தாங்கள் தமிழ்மொழி மீது காட்டும் அன்பு தமிழ்க்கல்லூரிகளில் தமிழ்மொழியின் தரத்தை உயர்த்தும் என்பது ஒருதலை. இனை

யற்ற இலக்கிய ரசிகஞய் விளங்கும் தாங்கள் கலையுலகிற்கே புகழீட்டினீர்கள். பல்
புகழ் அமைந்த தங்களைப் பழம் புகழ் கொண்ட இக்கல்லூரி வரவேற்று உளம்
பூரிக்கின்றது.

## திருமதி சிவநாதன் அவர்களே !

எங்கள் அன்பான அழைப்பினை ஏற்றுக் தங்கள் 'பண்பான கணவருடன்
வருகை தந்ததற்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். வடமாநில
பிரதம கல்வி அதிகாரியாகிய எங்கள் பிரதம விருந்தினரின் துணைவியார் என்ற
தோடு மட்டும் நில்லாது வடமராட்சியின் மங்கையர்திலகம் என்ற முறையிலும்
தாங்களை வரவேற்கின்ருேம். தாங்கள் மாணவர் கல்விமேற்காட்டும் சிரத்தை எங்
கள் கல்லூரிக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும் என்பதில் எமக்குப் பெரிய
தோர் நம்பிக்கை உண்டு. தங்கள் கரங்களால் பரிசில்கள் பெறும் பேறு பெற்ற
எமது மாணவர்கள் பாக்கியசாலிகளே.

## ஆசிரியர்கள்

திருவாளர் ஐ. வேலாயுதர் அவர்கள் சேவைக்கென்றே தன்னை அர்ப்பணித்
தவர். நீண்டகால சன்னலமற்ற சேவையின் பின்னர் இப்பாடசாலையினின்றும்
இளைப்பாறியுள்ளார். திரு. வேலாயுதர் அவர்கள் இக்கல்லூரியில் பத்து ஆண்டுக
ளுக்கு மேல் பணிபுரிந்துள்ளார். யான் அதிபராய்க் கடமைபுரிந்த அவரது இறுதி
ஐந்து ஆண்டுகாலத்திலும் கல்லூரி சம்பந்தமான சகல துறைகளிலும் அவர் எனக்கு
ஒரு சிறந்த வழிகாட்டியாகவும் பணிகளைப் பொறுப்படைக்கும் நண்பனுகவும் விளங்கி
யுள்ளார். பரிசுத்த பண்புடையவராகிய இவர் தமது சேவைக்காலத்தில் கல்லூரி
வளர்ச்சிக்குப் புரிந்த பணி சொல்லும் தரமுடையதன்று. தொழில் முன்னிலைப்பாட
நெறிகளின் மேற்பார்வையாளர் என்ற நிலையில் அப்பாட நெறிகளுக்கான செயற்
கூடங்களை பெரிதும் வளமாக்கியுள்ளார். மாணவர்களது முன்னேற்றம் ஒன்றே இவ
ருக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கவல்லது. கல்லூரி நிகழ்ச்சிகளிலும் விசேட சந்தர்ப்
பங்களிலும் சகல பொறுப்புக்களும் இவரிடமே ஒப்படைக்கப்பட்டு வந்துள்ளன.
இவர் கல்லூரியில் காட்டிய அபிமானம் இவரை மாணவர் மத்தியில் ஓர் உன்னத
ஸ்தானத்தை வகிக்க வைத்தது. அவர் ஆற்றிய சேவைக்காக கல்லூரி சார்பிலும்
என்சார்பிலும் எனது மனங்கனிந்த நன்றியறிதலை வெளிப்படுத்துகிறேன். இன்றும்
ஊக்கமுடனும் உற்சாகத்துடனும் சேவையுள்ளத்துடனும் விளங்குகின்ற அவரது
மனையறம் இளைப்பாற்று வாழ்விலும் சிறப்புறுவதாக இக்கலாசாலைக்கு அவர் தரும்
சந்தர்ப்பம் எதிலும் அவரை வருக வருக என வரவேற்கவுள்ளோம்.

திருமதி ரீ. இராசதுரை அவர்கள் அனுபவம் முதிர்ந்த ஓர் ஆங்கில ஆசிரி
யர். அவரும் இக்கல்லூரியில் ஏறத்தாழ பத்து ஆண்டுகள் வரை பணியாற்றி ஓய்வு
பெற்றுள்ளார். இக்கல்லூரியின் முன்னைய அதிபரின் துணைவியாரும், ஆற்றலும்
அனுபவமுமிக்க ஆசிரியருமான இவர் இக்கல்லூரியின் ஆங்கிலத்துறையின் ஆலோ
சகராகவும் கல்லூரி இல்லத்தலைவர்களில் ஒருவராகவும் இருந்து கல்லூரியின் துரித
வளர்ச்சி கருதி கல்லூரியின் புறவேலைகள் அனைத்திலும் பெரும்பங்கினை வகித்துள்
ளார். அவரது சேவையை முன்னிட்டு எனது நன்றியறிதலை வெளிப்படுத்துவதில்
பூரிப்படைகிறேன். மிக்க பயனுடையதும் மகிழ்வுடையதுமாக அவரது வாழ்வு மலர்
வதாக.

திருமதி எஸ். பாலச்சந்திரன் கல்லூரிக்கு மிகவும் பயனளிக்கக்கூடிய ஒருவர்
வர்த்தக நெறிச் சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியையான இவர் தமது துணைவர் பணி

புரியும் கொழும்புமாநகரத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். தமது சேவைக்காலத்தில் அவர் இக்கல்லூரிக்கு மிகவும் இன்றியமையாதவர் என்பதை செயல்மூலம் காட்டியுள்ளார். விசேடமாக கல்லூரியின் பரீட்சைக் காலங்களில் வினாத்தாள்களைத் தட்டச்சில் இடுதல் போன்ற பணிகளில் அயராது உழைத்து அனைவரது மதிப்பையும் பெற்றுள்ளார். வணிகமன்றத்தில் காப்பாளராக பணிபுரிந்த இவர் தமது தலைமைக்காலத்தில் வணிக மன்றத்தின் வருட இதழாகிய வணிக ஜோதியை மாணவர் கரங்களில் தவழ வைத்தனர். இவரது சேவைக்காலத்தில் இவர் ஆற்றிய பணிகட்கு எனது இதய பூர்வ நன்றி என்றும் உரித்தாகுக.

திருமதி ஆர். சரவணமுத்து அவர்கள் கணிதத்துறையில் விசேட பயிற்சி பெற்ற ஓர் ஆசிரியை. புதிய கணிதத்தைப் புகட்டுவதற்கு ஆசிரியர் இன்றி அல்லல் கொண்ட ஒரு வேளையில் எமக்கு கைகொடுத்துதவிய இவர் தமது சேவைமூலம் மிகச்சிறந்த ஒரு இடத்தை வகித்துள்ளார். விசேட பயிற்சிபெற்ற இவ்வாசிரியை ஒரு கணிதப் பட்டதாரியாகவும், இருந்தமை இவரது சேவை மிகமிகப் பயனுடையதாய் அமைவதற்குக் காரணமாகியது. சொந்தக் காரணங்களுக்காகத் தமது வதிவிடத்திற்கு அண்மையில் உள்ள ஒரு பாடசாலையில் பணிபுரிய உளங்கொண்ட இவரது விருப்பிற்கு இடையூறாக நின்றுகொள்ளமுடியாது போய்விட்டது. அவரது சேவைக்காக எனது நன்றியறிதலை வெளிப்படுத்தும் இதேவேளையில் புதிய கல்லூரியில் அவர் புகழ் மிளிர்வதாக என வாழ்த்துகிறேன்.

வித்துவான் எஸ். சின்னத்தம்பி அவர்கள் வவுனியாவில் இருந்து இக்கல்லூரியிற் கடமையேற்று க. பொ. த உயர் வகுப்புக்களில் தமிழ்மொழிக்குப் பொறுப்பாளராய் இருந்தார். பகிரங்கப் பரீட்சைகளில் இவரது பாடத்தில் எண்பதிற்கு அதிகமான விதத்தில் மாணவர் சித்தியெய்தியமை இவரது பயனுள்ள சேவைக்கோர் எடுத்துக்காட்டு. தமிழ் மொழியில் நுண்மான் புலமையும் சைவமத ஞானமும் கொண்ட இவரது சேவையைப் பெற்று உயர்தர மாணவர் மன்றமும் இந்து மாமன்றமும் பெரிதும் உயர்ந்து விளங்கின. கனகரத்தின இல்ல முதன்மை ஆசிரியராய் விளங்கிய இவர் தமது அயரா முயற்சியால் அவ்வில்லம் கடந்த இரு ஆண்டுகளிலும் முதலிடம் பெற வைத்தார். திரும்பவும் தமது சொந்த நிலைமையை முன்னிட்டு வவுனியாவிற்கு இடம் மாற்றம் பெற்றுச்சென்ற இவரது சேவையை மறத்தல் எளிதன்று. செல்லிடம் எங்கும் இவரது சிறப்பு ஒளிர்வதாக.

திரு எஸ். வேலாயுதம் அவர்கள் கணிதத்துறைச் சிறப்புப் பயிற்சிபெற்ற ஆசிரியர், இக்கல்லூரியினை விளங்க வைத்த முன்னணி ஆசிரியர்களுள் ஒருவரான இவர் 1973ம் ஆண்டு முற்பகுதியில் இங்கு கடமையேற்றூர். ஐந்தாம் தர அதிபராகப் பதவி உயர்வு பெற்று மாற்றம் பெற்ற இவர் கணித ஆசிரியர் எனக் கணிக்கப்படினும் சிறந்த தமிழ்ப்புலமை படைத்தவராகவும் கலையார்வம் கொண்டவராகவும் விளங்கினூர். இக்கல்லூரியில் இடம்பெற்ற இயல் இசை நாடக நிகழ்ச்சிகள் இவரது சேவையால் மெருகூட்டப்பெற்றன. வேலணையிலேயே இவர் தமது வதிவிடத்துக்கு அண்மையில் உள்ள ஒரு பாடசாலைக்குச் செல்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ள ஓர் வேளையில் எனது சொந்த வேண்டுகோளை ஏற்று இக்கல்லூரி ஆசிரியர் குழாத்தில் அங்கத்தவர் ஆனார். இவரது சேவைக்காலம் மிகப் பயனுடையதும் விளிப்புடையதுமென பெருமிதத்துடன் கூற விரும்புகிறேன். இவரது எதிர்காலம் மேலும் பிரகாசிப்பதாகுக. திரு. ஏ. ஐ. எல் குணநாயகம் அவர்கள் ஒரு விசேட பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியராய் இருந்த போதிலும் பலதுறைகளில் அவரது சேவை கல்லூரிக்குக்

கிடைத்தது ஒரு பெரும்பேறே. விளையாட்டுத்துறையில் விசேட திறமையும் ஆர்வமும் கொண்ட இவரது சேவை இல்ல விளையாட்டுக்கள் உடற்பயிற்சி நெறிகள் போன்ற பலதுறைகளில் ஊற்றெடுத்தது. கல்லூரிப் பயிலுனர் படைக்கு பொறுப்பாயிருந்து வருடாவருடம் நிகழும் பாசறைப்பயிற்சிக்கு மாணவர்களை இட்டுச்சென்றுள்ளார். கத்தோலிக்க மாணவ மன்ற வைபவங்கள் இவரது தலைமையில் புத்துயிர் பெற்றன. இவ்வாண்டு முற்பகுதியில் வவுனியாப்பிரிவின் பாடசாலை ஒன்றிற்கு தற்காலிக அதிபராக பதவி உயர்வு பெற்றுச் சென்றுள்ள இவரது சேவை கல்லூரி வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளது. அவரது சேவைக்கு எனது மனமார்ந்த நன்றிகள். புதிய பதவி இவருக்குப் புகழ் பூப்பதாக.

திருமதி ஆர். அந்தோனிப்பிள்ளை வனைதற்பகுதி பொறுப்பாசிரியராக இக்கல்லூரியிற் கடமையாற்றியுள்ளார். வனைதற் துறையில் இவ்வருட விசேட பயிற்சி நெறியினைப் பயில்வதற்குப் பலாலி அரசினர் கலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்டுச் சென்ற இவர் சேவையார்வம் கொண்ட ஒரு உத்தம ஆசிரியை. பயிற்சி நெறி முடிவில் திரும்பவும் இக்கல்லூரியை அடையலாம் என எதிர்பார்க்கின்றேன். அவ்வாறு நிகழின் அஃது இக்கல்லூரிக்கு ஒரு பெரும் பேறு எனலாம். இவரது சேவைக்கு நன்றி கூறக் கடப்பாடுடையேன்.

திரு. எல். ஜே. செல்வராசா அவர்கள் மிகக்குறுகிய காலமாகிய மூன்று மாதங்கள் இங்கு கடமையாற்றினர். எனினும் அவரது சேவை மிகவும் பயனுடைத்து. கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் வடமாநிலத் தலைவராக நியமனம் பெற்று இக்கல்லூரியை விட்டுச் சென்றுள்ளார். கல்லூரி உயர்மாணவர் ஒன்றியத்தினதும் கல்லூரியினதும் சகல நடவடிக்கைகளிலும் தவறாது பங்கு பற்றியமை ஒன்றே இவரது குறுகிய சேவைக்காலத்துள்ளும் பயன்நிறை பணிபுரிந்தார் என்பதற்கோர் சான்று. அவரது சேவைக்கு எனது உளம் மகிழ் நன்றி உரியது. பொறுப்பார்ந்த புதிய நிலையில் என்றும் அவர் புகழ் ஓங்குக.

திரு. கே. கனகரத்தினம் அவர்கட்கும் ஈண்டு நன்றி கூறக் கடமைப்பட்டவன் யான். ஆழ்ந்தஞானம் படைத்த கணிதவியற் பட்டதாரியான இவர் வசதிகள் சேவைக்கட்டணத்தில் இருந்து மிகச்சிறு தொகையினையே ஊதியமாக பெற்றுள்ள போதும் சேவையே பெரிதெனக்கொண்டு இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து பெரும் பணி ஆற்றியுள்ளார். இவரது சேவையால் க. பொ. த. உயர்தர விஞ்ஞான மாணவர் பெரும் பயன் பெற்றனர் என்பது மிகைப்படச்கூறல் அன்று. வகுப்பறையில் சிறந்த ஆசானாய் விளங்கியதோடு மட்டும் நின்றுவிடாது கல்லூரி புறவேலைகள் அனைத்திலும் ஊக்கமுடன் ஆக்கம் காட்டியுள்ளார். இவரது தன்னலமற்ற சேவையே இவருக்கு நிரந்தர நியமனம் தேடிக்கொடுத்தது என்பதே எனது துணிபு. நிரந்தர நியமனம் இவரை எம்மத்தியில் நின்றும் பிரிந்த போதிலும் இவரது சிறப்பு நோக்கி யான் மகிழ்வெய்துகின்றேன். இவரது சேவைக்கு எனது உளம் சுரக்கும் நன்றிகள். சேவையில் இவர் புகழ் உயர்வதாக.

எங்கள் மத்தியிலே புதியவர்களாய் வந்து கடமை ஏற்றுள்ளவர்களை மனப்பூர்வமாக வரவேற்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன். கல்லூரிச் சூழ்நிலை கல்லூரியின் வளர்ச்சிப் பணிக்கு அவர்களை இதயபூர்மாக இட்டுச் செல்லும் என்பதில் பூரண நம்பிக்கை கொண்டுள்ளேன். திரு. பி தியாகராசா அவர்கள் உயர் வகுப்புக்களில் கணிதம் கற்பித்து நீண்ட அனுபவம் பெற்றவர். கணிதத்துறையில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர் திரு. எஸ். வேலாயுதம் அவர்களின் இடத்தை

இவர் பூரணமாக நிரப்பியுள்ளார். கணிதத்துறையில் விசேட பயிற்சி பெற்றவரான செல்வி பி. முருகேசு அவர்கள் திருமதி ஆர் சரவணமுத்து அவர்களின் இடத்துக்கு மாற்றம் பெற்று வந்துள்ளார். மிகச் சுறுசுறுப்புடையவரும் ஆண்டில் இளையவரும் திரு. என். புவிராசசிங்கம் அவர்கள் திரு. ஐ. வேலாயுதர் பணியினை இங்கு தொடர்ந்துள்ளார். செல்வி ஐ. வேலாயுதம் அவர்கள் திருமதி ஆர். அந்தோனிப்பிள்ளை அவர்களுக்குப் பதிலாகக் கடமையேற்றவர் பரந்த அனுபவம் கொண்டவரும் திரு. எஸ். சின்னத்தம்பி அவர்களின் இடத்தினை பிரதியீடு செய்பவருமான திரு. எஸ். செல்லத்துரை சமஸ்கிருத விசேட கலைப்பட்டதாரியாவர். கணிதவியற் பட்டதாரியான திரு. ரி. சாம்பசிவம் அவர்கள் கம்பளையில் நிரந்தர நியமனம் பெற்ற திரு. கே. கனகரத்தினம் அவர்களின் இடத்திற்கென நியமனம் பெற்றவர். உயர்தர வகுப்புக்களில் கணிதம் கற்பித்து அனுபவம் வாய்க்கப்பெற்றுள்ள திரு எஸ். முருகேசு அவர்கள் ஒரு கணிதவியற் பட்டதாரியாவர். இவர் திரு. எல். ஜே. செல்வராசா அவர்களின் சேவையைத் தொடர்ந்துள்ளார். ஆங்கில விசேட பயிற்சி பெற்றவரான திருமதி ஜீ. தனபாலசிங்கம் அவர்கள் திரு. குணநாயகம் அவர்களின் இடத்தை ஈடு செய்கின்றார். திருமதி. என். நமச்சிவாயம் அவர்கள் ஒரு குறுகிய இடவெளியின் பின் எம்மிடம் வந்துள்ளார். முடிவாக ஆனால் இறுதியாக அன்று திரு. எஸ். பாலசிங்கம் அவர்கள் கொழும்பில் தமது கல்வி டிப்ளோமா படிப்பினை நிறைவேற்றி, இக்கல்லூரியில் இருந்து அவரைப் பறிப்பதற்கு நிகழ்ந்த பல போராட்டங்களிலும் வெற்றி கண்டு இக்கல்லூரியின் ஆசிரியர் குழுவில் அங்கத்துவம் பெற்றுள்ளார்.

யான் இக்கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய கடந்த ஐந்து வருடகாலத்துள்ளும் கல்லூரியின் தேவைக்கு ஏற்றவகையில் இவ்வருடமே ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிலை, வசதிகள் சேவைக் கட்டணத்தில் இருந்து இன்றியமையாமை காரணமாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு வேதம் வழங்குவதினின்றும் எம்மை விடுவித்துள்ளன. மிகச் சிறிய தொகையே வசதிகள சேவைக் கட்டணமாக நாங்கள் அறவிடுவதால் அப்பணத்தில் ஆசிரியர் வேதனம் வழங்குவது பெரிதும் இன்னல் உடையதாய் இருந்தது. மகிழ்ச்சிகரமான இன்றைய நிலையினை உருவாக்கித் தந்தமைக்கு நல்லூர் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினரும் யாழ்ப்பாண மாவட்ட அரசியல் அதிகாரியுமான உயர் திரு சி. அருளம்பலம் அவர்கட்கும், வடமாநில கல்வி அதிகாரி ஜனப். ஏ. எம் மஜீத் அவர்கட்கும் யான் எனது நன்றியினைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த பல வருடங்களில் இடம் பெறத் தவறிய இச்சீரிய நிலை கல்லூரியினை முன்னேற்றப் பாதையில் வெகு துரிதமாக இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

மேலும், இச்சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாண மாவட்ட அரசியல் அதிகாரி அவர்கட்குப் பகிரங்கமாக நன்றி பாராட்டவேண்டிய பிறிதோர் காரணமும் குறிப்பிடப்பட வேண்டியுள்ளது. மேலதிக வகுப்பறைகள் அமைப்பதற்கு மிகவும் தாராள மனப்பான்மையுடன் ஐம்பதினாயிரம் ரூபாவை இக்கல்லூரிக்கென ஒதுக்கித் தந்துள்ளார். எங்கள் கல்லூரி கடந்த சில ஆண்டுகளுள் இம் மாவட்டத்தில் பெருந்தொகை மாணவர்கள் அனுமதி கோரும் கல்லூரிகளுள் ஒன்றாக வளர்ச்சி பெற்றுள்ளது. இதன் விளைவாக இன்றைய கல்வித் திட்டத்திற்கு அமைய வர்த்தகத் துறையில் நிறைவு செய்யப்பட வேண்டிய தேவைகள் பலவற்றுடன் தொழில் முன்னிலைப் பாட நெறிகளுக்குரிய தொழிற்கூடங்களும் நவீன வசதிகளுடனும் கூடியனவாக அமைக்கப்படவேண்டியுள்ளன. கல்வியமைச்சின் புதிய கல்வித் திட்டத்திற்கு அமைய தொழில் முன்னிலைப் பாட நெறிகளை கல்லூரி மாணவர்களுக்கும் கல்லூரி வேலை தவிர்ந்த வேளைகளில் கல்லூரியை விட்டு வெளியேறிய மாணவர்கட்கும் கடந்த

இரு வருடங்களாக மிகவும் வெற்றிகரமாகப் போதித்து வருகின்றோம். இத்துறை வளர்ச்சியடைந்து மாணவ உலகிற்குப் பயன்படக்கூடிய வண்ணம் இக்கல்லூரியின் தொழிற் கூடங்கட்கு வேண்டிய கட்டிடங்கள், உபகரணங்கள் மற்றும் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அடுத்த நிதி ஆண்டில் இன்னும் தாராள மனத்துடன் நிதி ஒதுக்கீடு செய்து உதவ முன்வரவேண்டும் என்று நல்லூர்த் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினரும், யாழ் மாவட்ட அரசியல் அதிகாரியுமான உயர் திரு. சி. அருளம்பலம் அவர்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இவ் வேண்டுகோள் நிறைவேற்றப்படும் என்பதனை இதயபூர்வமாக எதிர்பார்த்திருப்பதுடன் இதன் விளைவாகக் குடாநாட்டு இளம் சந்ததியினரின் தேவைகள் பெரிதும் நிறைவு எய்தும் என்பதனையும் உறுதி கூறுகின்றோம்.

**புற கருமங்கள் :**

மாணவர் குழு ஒன்று பேராதனைப் பூங்கா, நுவரெலியா போன்ற இடங்கட்கு செல்விகள், பி. என். நவரத்தினசிங்கம், என். தம்பிப்பிள்ளை என்போரின் தலைமையில் ஐந்துநாள் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டது.

**விளையாட்டுத்துறை :**

பாடசாலைகளுக்கிடையேயான பிராந்திய மெய்வல்லுநர் போட்டியில் ஆண்களும் பெண்களும் பங்கு கொண்டு திறமையை காட்டினர். அன்றியும் தகுதி பெற்ற மெய்வல்லுநர் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையேயான போட்டியிலும் பங்குபற்றி சில இடங்களைப் பெற்று முன்னணியில் திகழ்ந்தனர்.

வருடாந்த விளையாட்டுப் போட்டிக்கு ஜனாப். ஏ. எம். மஜீத் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டார். இவ்வருடமும் தொடர்ந்து ஆறுவது வருடமாக கனகரத்தினம் இல்லம் முதலிடத்தைக் கைப்பற்றியது. இரண்டாம் இடத்தை பெரேரா இல்லம் கைப்பற்றியது.

**ஹாக்கி :**

17 வயதுக்குட்பட்ட பிரிவினரும் 19 வயதுக்குட்பட்ட பிரிவினரும் பாடசாலைகளுக்கிடையிலான சுற்றுப் போட்டியில் பங்குகொண்டனர். எங்கள் குழுக்களில் அங்கம் வகிக்கும் வல்லுனர் சிலர் தேசிய பாடசாலைகள் சம்பியன் போட்டியில் பங்கு கொள்ள தெரிவு செய்யப்பட்டனர்.

**உதைபந்தாட்டம் :**

பாடசாலைகளின் சுற்றுப்போட்டியில் பங்குகொண்டனர்.

**வலைபந்தாட்டம் :**

பாடசாலைக்கிடையிலான சுற்று ஆட்டங்களில் பங்குகொண்டனர். சில ஆட்டங்களில் வெற்றியீட்டினர்.

**சாரணர் சங்கம் :**

எங்கள் ஆண், பெண் சாரணர் இவ்வருடத்தில் ஊக்கம் உடையவர்களாகக் காணப்பட்டதோடு பழைய பூங்காவில் நிகழ்ந்த பாசறை வைபவத்தில் பங்குபற்றி பரிசில்கள் பெற்றனர்.

**படைபயில் குழு :**

படைபயில் குழுவின் சிரேஷ்ட கனிஷ்ட பிரிவினர் தியத்தலாவையில் நடைபெற்ற பயிற்சிப் பாசறை வாசத்திற் கலந்துகொண்டனர்.

**சமய இலக்கியப் பணிகள் :**

க. பொ. த. உயர்தர மாணவர் ஒன்றியம், வர்த்தக மாணவர் ஒன்றியம், கலை கலாச்சார மன்றமும் ஒழுங்காகக் கூட்டங்களை இவ்வாண்டு நடத்தின. அவை தமது பத்திரிகைகளான மாணவர் குரல், வணிகஜோதியை வெற்றிகரமாக வெளியிட்டன. கிறீஸ்தவ மாணவ மன்றம் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யும்முகமாக செயலாற்றியது. இந்துமாமன்றம் வழமைபோல் சமய நிகழ்ச்சிகளைத் தவறாது செய்துவந்துள்ளது. அன்றியும் சமயக்கூட்டங்கள் ஒவ்வொரு நாளும் அவ்வக் குழுக்களுக்கு பிரத்தியேகமாக நடத்தப்படுகின்றன. வாரந்தோறும் நடைபெறும் காலைப் பொதுக் கூட்டங்களில் பல பெரியோர்கள் வந்து சிறப்புரையாற்றி கலந்து கொண்டமைக்கு எமது மனமார்ந்த நன்றி. தங்கள் வழமையான கடமைகளுடன் புறகருமங்களிலும் பங்கு கொண்டுழைத்த எல்லா ஆசிரிய ஆசிரியைகளுக்கும் எனது நன்றலயத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. தியாகராசா அவர்களின் தலைமையில் கல்லூரி நூல்நிலையம் இவ்வாண்டு புனரமைப்புச் செய்யப்பட்டு திறம்பட இயங்கி வருகின்றது. நூல்நிலையத்தில் பூரண பயனை மாணவர் பெறக்கூடியதாக முழு நேர நூலக அதிபர் ஒருவரை நல்கி உதவுமாறு கனம் வித்தியாதிபதி அவர்கட்கு இச்சந்தர்ப்பத்தில் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

**பெற்றார் ஆசிரியர் சங்கம்**

நிர்வாக சபைக்கூட்டங்கள் வருடம் முழுவதும் ஒழுங்காக நடைபெற்றுள்ளன. அயரா முயற்சியும் ஊக்கமும் உள்ள செயலாளர் திரு. வி. கதிரவேலு அவர்கட்கும் உபதலைவர் திரு. K. S. நடராசா அவர்கட்கும், ஏனைய நிர்வாகசபை உறுப்பினர்கட்கும் எனது நன்றி உரித்தாகுக. கட்டிட நிர்மாண வேலைகள் பூர்த்தியாகி ஆறு மேலதிக வகுப்பறைகளைப் பாடசாலைக்கு உதவியுள்ளன. விளையாட்டு மைதானத்தை நோக்கிய வண்ணமாக திறந்த வெளியரங்கும் இக்கட்டிடத்துடன் பூர்த்தியாகவேண்டி உள்ளது. இவ்வேளையில் பொருளுதவிய ஒவ்வொரு பெற்றோருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இன்னும் அநேகபெற்றோர் தாமாகவே முன்வந்து உதவத் தலைப்படவேண்டும். மாணவர்களுக்கு அளிக்கப்படும் தளபாடங்களும் வசதிகளும் சில பொறுப்பற்ற மாணவர்களாலும் சில அயலவர்களாலும் நாசமாக்கப்படுகின்றன. இக்கல்லூரி இச்சூழலில் உள்ளவர்களதும் அவர்களது வருங்கால சந்ததியினரதுமே ஆகும். ஆகவே ஒவ்வொரு அயலவர்களதும் தலையாய கடமை பாடசாலைப் பொருட்களைப் பாதுகாப்பதேயாகும். எனவே பெற்றோர்களாகிய நீங்கள் இவற்றை மனதில் இருத்தி பிள்ளைகளையும் நண்பர்களையும் மற்றோரையும் இந்நல்ல பணியில் ஈடுபடத் தூண்டவேண்டும். இது உங்கள் கல்லூரி என்பதை மனதில் இருத்தி வாழும் சமுதாயத்தினருக்கு வழிவகுக்க வேண்டும்.

**நிறைவுரை :**

ஈற்றிலே ஆசிரியர் குழாத்திலே உள்ள ஒவ்வொருவருக்கும் அவர்களது ஒத்துழைப்புக்கும் உதவிக்கும் நன்றியறிதலைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எக்கல்லூரியும் ஆசிரியர்களது ஊக்கமும், உற்சாகமும், ஒத்துழைப்புமின்றி வளர்ந்தது சரித்திரத்தில் கிடையாது.

கல்லூரி கடந்த காலங்களில் பெரும் வளர்ச்சியடைந்துள்ளதென்றால் ஆசிரியர்களது நன்நோக்கும் ஒத்துழைப்புமே அதற்குக் காரணங்களாகும். விசேடமாக உபஅதிபர் திரு. த. செல்லப்பா அவர்கட்கும் தலைமை ஆசிரியர் திரு. எஸ். குலோத்துங்கம் அவர்கட்கும் தேவைநோக்கி எனக்களித்த அறிவுரைகட்கும், ஒத்துழைப்புக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அலுவலக உத்தியோகத்தர் திரு. ஏ. முருகேசு அவர்கள் மேலதிகமாகப் பாடசாலைக்காற்றிய பணிகட்கும் எனது நன்றி உரித்தாகுக. பணியாளர் அனைவர்க்கும் அவரது ஒத்துழைப்பிற்கும் உதவிகட்கும் நன்றி கூறுகின்றேன். பரிசில்களை மனப்பூர்வமாக வழங்கிய பெரியோர்களுக்கும் எமது அழைப்பினை ஏற்று அன்புடன் வருகை புரிந்த யாவர்க்கும் நன்றி உரித்தாகுக.

மீண்டும் ஒருமுறை பிரதம விருந்தினருக்கு நன்றிகூறி விடை பெறுகிறேன்.

வணக்கம்

REFERENCE

# Loganathan Institute

$\frac{166}{1}$ **Hospital Road,** **JAFFNA.**

புதிய வகுப்புகள் ஆரம்பம்

**G.C.E. A/L** காலை மாலை முழுநேர வகுப்புகள் 4-1-78 (1978 **Dec.**)

**G.C.E. O/L** வர்த்தக வகுப்புகள் 1978 **Ap. Exam. 1-1-78**

3 மாத வகுப்புகள் மாத்திரம் சனி, ஞாயிறு இருநாட்களிலும்

G. A. Q. First in Commerce, B.A. வகுப்புகள்

(சனி, ஞாயிறு நாட்களில் மாத்திரம்) 1-1-78

I.C.M.A. I.A.B. Chartered Accountancy

**(Weekend Classes) 1-1-78**

SPOKEN ENGLISH

*CONDUCTED :*

*Director :*

**LOGANATHAN INSTITUTE**

$\frac{166}{1}$ Hospital Road, Jaffna.

J. M. M. P. C. S. Printing Press 825-77.